w-139

# KANNAKI CHARITRAM

T. Chelvakesavaroya Mudaliar, M. A.

Price: 14 As.

# கண்ணகி சரித்திரம்

தி. செல்வக்கேசவராய முதலியார்
(பச்சையப்பன் கலாசாலை)

பி. என். பிரஸ், சென்னை.
1947

## PREFACE

KANNAKI CHARITRAM, a prose version of Chilappadhikaram, was written ten years ago at the request of Mr. A. Rajavelu Mudaliar (now Sub-Inspector of Police Trichinopoly) when he was a student in the F.A. Classes in Pachaiyappa's College. It is now printed for the first time, with the hope that it may induce our college students to enjoy and appreciate the original, which is a mine of literary gems reflecting the ancient status and civilization of the Tamils.

PERAMBUR, T. C.
*June 15, 1915.*

# முகவுரை

சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணும்படி தேவி வேண்மாளோடும் இளங்கோவடிகளோடும் வஞ்சி நகரினின்றும் பெரியாற்றின் கரையில் வந்து தங்கியபோது, சேரனைக் காண வந்த குறவர்கள், திருச்செங்குன்றில் வேங்கை மரத்தின் கீழே ஒரு பத்தினி வானோர் வடிவின் வந்த தன் கணவனைக் கண்டு அவனோடு விண்ணடைந்த வியப்பான செய்தியை அறிவித்தனர். அப்போது சேரனைக் காணவந்த சங்கப் புலவர் கூலவாணிகன் சாத்தனார் என்பவர் பத்தினியான கண்ணகியின் வரலாற்றை விளங்க உரைத்தார். அதைக் கேட்டிருந்த இளங்கோவடிகள்,

> அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
> உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
> ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்

நாட்டி, அந்த வரலாற்றைச் சிலம்பு காரணமாகச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக உரைத்தார். புகார் காண்டமும் மதுரைக் காண்டமுமாக அவ்வரலாறு முடிந்தது. அப்பால் செங்குட்டுவன், இமயமலையினின்றும் கல்கொண்டு கங்கையில் நீர்ப்படை செய்துவந்து, பத்தினிக் கோட்டம் வகுத்தான். பின் அவ்வரலாற்றை அமைத்து இளங்கோவடிகள் வஞ்சிக் காண்டத்தையும் பாடி, முப்பது காதையாய் நூலை முடித்தார்.

தமிழ்நாடே கதை நிகழ்ச்சிக்குக் களனாய், "உள்ளோன் தலைவனாக உள்ளதோர் பொருள்மேல் சித்திரிக்கப்படாது பட்டாங்கு கிளந்து பலவினப் பாட்டால் வருதலின்," இவ்வியலிசை நாடகப் பொருட் டொடர்நிலைச்

செய்யுளைத் தமிழ் மாணாக்கர் ஓதுவது இன்றியமையாத தாகும். சரிதம் நிகழ்ந்த காலத்தில், தமிழ் நாடு பெற்றிருந்த தலைமையையும், தமிழ் நாட்டினருடைய ஒழுக்கத்தின் திறத்தையும், தமிழ் நாட்டில் வழங்கிவந்த வெவ்வேறு மதங்களின் நிலைமையையும், தமிழின் சிறப்பையும், தமிழருடைய நாகரீக நிலைமையையும், தமிழ் வீரருடைய தறுகணாண்மையையும் விளக்குவதற்குப் போந்த கருவிகளில் சிறந்ததான இந்நூலைத் தமிழபிமானிகளே யன்றித் தமிழறிந்தார் எவரும் ஓதுவது ஒருதலை.

இக்காலத்தில் எளிதில் அறியலாகாமல் இந்நூலில் இடையிடையே கலந்துவரும் இசைநாடகத் தமிழ்க் கூறுகளைக் களைந்துகொண்ட விடத்தும், அடியார்க்கு நல்லார் உரையெழுதாதுவிட்ட காதைகளைக் கல்லூரி மாணாக்கர்கள் அரும்பத வுரையின் சார்பைக்கொண்டே அறிவது அரிது. ஆகவே, கல்லூரி மாணாக்கரும், எளிதில் செய்யுளைப் படித்தறிய ஒழிவில்லாத பிறரும், இந்நூலின் சாரத்தை எளிதின் அறியும் பொருட்டு, சரிதத்திற்கு அங்கமான அனைத்தையும் இயன்ற வரையில் தழுவி, இந்தக் காப்பியத்தைக் கத்திய நடையில் அமைத்து வெளியிடுமாறு, பச்சையப்பன் கல்லூரி மாணாக்கர் சிரஞ்சீவி ஆ. இராஜவேலு முதலியார் என்பவர் (இப்பொழுது திரிசிராப்பள்ளியில் உதவிக் கொத்துவாலாக உத்யோகிப்பவர்) வற்புறுத்தினர். அதன்பொருட்டு எழுதியது இக் கண்ணகி சரித்திரம். பத்திய பாகத்தைப் பின்பு படித்து இன்புறுவதற்கு இது ஒருவாறு கருவியாகக் கூடும் என்பதே இதை அச்சிட்ட நோக்கம்.

பிரம்பூர், சென்னை.
1915-ஆு ஜூன்மீ 15உ

தி. செ.

# கண்ணகி சரித்திரம்

## புகார் காண்டம்

### I

தமிழ் நாடானது, நெடுங்காலம் சோழ மண்டலம் பாண்டிமண்டலம் சேரமண்டலம் என மூன்று பிரிவினதாய், முடியுடை வேந்தர் மூவர்க்குரியதாய் விளங்கியிருந்தது. சோழ மண்டலத்தில் மருத நிலத்தூர்கள் பற்பல உண்டு. காவிரி யாறு பல கால்களாகப் பரந்து பாய்தலால், நெல் கரும்பு இஞ்சி மஞ்சள் தெங்கு கமுகு வாழை மா முதலியன எங்கும் செழித்து வளரும். குடகமலையில் நின்றும் புறப்பட்டு வருகின்ற இவ்வாறு அம்மலையின் வளங்களைக் கொணர்ந்து கொழித்தலால், சோழ நாடு மலைவளங்கள் மிக்கதாகும். குணகடலுக் கணித்தாகலின் இந்நாடு கடல் வளங்களும் குறைவறப் பெற்றதாகும்.

இந்நாட்டில் புகழும் போகமும் நிலைபெற்ற பூம்புகார் என்னும் பட்டினம் சோழர்களுக்குப் பழமையான இராசதானி. அது காவிரி கடலொடு கலக்கும் சங்கமுகம் என்னுந்துறையை உடையது. இதற்குக் காவிரிப் பூம்பட்டினம் என்றும் ஒரு பெயர் வழங்கும். புறநகரில் பலகணிகளோடு நிலாமணி முற்றம் அமைந்த மாடங்களும் அணிகலம்பெய்த சரக்கறைகளும் மல்கியிருக்கும். கூலவாணிகர் தமது வீதியில் எண்வகைக் கூலமும் குவித்து விற்பர். கப்பல் வளங்கள் தலை மயங்கியிருக்கும் வீதியில் பட்டும் பவளமும் முத்தும் மணியும் பொன்

னும் பொற்பணிகளும் இவ்வளவென முடிவறியாதன வாய் இருக்கும். பூவும் சாந்தமும் ஆரமும் அகிலும் வண்ணமும் சுண்ணமும் விரையும் விற்பவர் வீதிகடோ றும் திரியா நிற்பர். கிழியாலும் கிடையாலும் விலங்கு பறவை பூ பூங்கொத்து வாடாமாலை பொய்க்கொண்டை முதலியன அமைப்போர் ஒருபால் வசிப்பர். ஒருபால் தச்சரும் கொல்லரும் கன்னரும், ஒருபால் உருக்குத் தட் டாரும் இரத்தினப்பணித் தட்டாரும், ஒருபால் சித்திர காரிகளும் சிற்பாசாரிகளும், ஒருபால் காருகரும் வசிப்பர். சிலவிடத்துச் சிப்பியரும் செம்மாரும், சிலவிடத்துப் பாணரும் குற்றேவல் செய்வாரும், சிலவிடத்து யவன ரும் இருப்பர். அப்பவாணிகரும் பிட்டுவாணிகரும் இறைச்சி விற்பாரும் எண்ணெய் வாணிகரும் உமணரும் பரதவரும் பாசவரும் வாசவரும் சிலவிடத்திருப்பர். கட லோடிகளான பரதேசிகள் பலரும் அலைவாய்க் கரையில் ஒரு நிலத்தவரைப்போல் கலந்து குடியிருப்பர்.

அந்நகரில் அரசவீதியும் விழாவீதியும் வாணிகர் வீதியும் கடைவீதியும் பொலிவுற்றுத் தோன்றும். ஒருபால் பஞ்சகிராமிக ளிருக்கையும், ஒருபால் வேளாள ரிருக்கையும், ஒருசார் மருத்துவ நூலோரிருக்கையும் ஒருசார் சோதிட நூலோரிருக்கையும் விளங்கியிருக்கும். ஒரு பக்கம் முத்துக் கோப்பார் வீதியும், ஒருபக்கம் சங்கு வளையறுப்பார் வீதியும் தோன்றும். அரசன் கோயிலைச் சூழ அகன்று பரந்த விடங்களில் அசுவவாதியரும் யானைப்பாகரும் தேர்ப்பாகரும் கடுங்கண் மறவரும் கூடி யிருப்பர். சூதரும் மாகதரும் நாழிகைக் கணக்கரும் வைதாளியாடுவாரும் வேழப்பரும் குற்றேவல் மகளிரும் சில விடங்களில் வசிப்பர். சிற்சில விடங்களில் இசைக் கருவியாளரும் கணிகையரும் வசிப்பர்.

அகநகர்க்கும் புறநகர்க்கும் இடையிலுள்ள பொது விடம் நாளங்காடி. அங்கே நிரைநிரையாக இருக்கும்

சோலைகளின் மரங்களே தூண்களாகக் கட்டிய கடைகள் உண்டு. அங்கே பண்டங்களை விற்பவர் ஓசையும் கொள்பவர் ஓசையும் இடையறுது நிலைபெற்றிருக்கும். அவ்வங்காடியில், வச்சிர நாட்டரசன் திறையாகவிட்ட முத்துப் பந்தரும், மகதநாட்டரசன் கொடுத்த பட்டி மண்டபமும், அவந்தி நாட்டரசன் அளித்த வாயிற்ருேரணமும், அழகுற அமைந்திருந்தன. இவையன்றியும் அவ்வங்காடியில் ஐவகை மன்றங்களும் அமைந்து விளங்கியிருக்கும்.

அங்கங்கே வச்சிரக்கோட்டமும் வாசவன் கோயிலும் சிவாலயமும் குமரகோட்டமும் பலதேவர் கோயிலும் விஷ்ணுவாலயமும் நித்த நைமித்தங்கள் குறைவின்றி விளங்கியிருந்தன. அருகர் பள்ளியிலும், புத்தர் பள்ளியிலும், ஸ்ரீகோயிலிலும், துறவிகள் புராணம் படித்திருப்பர்.

இவ்விராசதானியிலிருந்து சோழநாட்டை ஆண்ட அரசர்கள் சூரியகுலத்தவர் என்று கொள்ளப்பெறுவர். இவர்கள் மரபாக அணிவது ஆத்திமாலை. இவர்கள் கொடி புலி யுருவம் பொறித்தது. இவ்வரசர்கள் அறமும் மறமும் ஆற்றலும் மிக்கவர்கள். இவர்களுடைய குலதீபம் போன்ற கரிகால்வளவன், மேருமலைவரையிற் சென்று, இடையிலுள்ள அரசர்களை வென்று, இமசேதுபரியந்தம் இணையற்றவனுய் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னே அரசாட்சி செய்திருந்தான்.

அக்காலத்தில் புகார்நகரில் வணிகர் குலத்துள் பெருங்குடியர் மரபிலே பேரீகையாளன் மாநாய்கன் என்பான் ஒருவன் இருந்தனன். அவன் மகள் கண்ணகி என்பவள். அந்நகரில் மாசாத்துவான் என்பவன் பெருஞ்செல்வன் மற்ருெரு வணிகன் இருந்தனன். அவன் மகன் கோவலன் என்பவன். கண்ணகி உருவால் திருவையும் கற்பால் அருந்ததியையும் ஒத்து விளங்கிஞள். கோவலனுக்குப் பதினாருண்டும் கண்ணகிக்குப் பன்னீராண்டும் நடவாநிற்கையில், குரவர் இருவரும், சில மகளிரை

அணிந்து யானைமீதேற்றி, தம்மக்கட்கு மணமென்று மாநகரார்க்கு அறிவித்தனர். மாங்கல்யத்தை ஊர்வலஞ் செய்வித்தனர். வயிரமணித் தூண்கள் வரிசையாகப் பொருந்திய மண்டபத்தில், நீல விதானத்தின்கீழ், முத்துப்பந்தலில், உற்றார் உறவினர் நெருங்கியிருக்க, பல வாத்தியங்கள் முழங்க, புரோகிதன் சடங்குகாட்ட, கோவலனும் கண்ணகியும் தீவலஞ்செய்தனர். சுற்றத்தவரான மகளிர் அட்டமங்கல மேந்தி, மணமக்களிருவரும் பிரியாமல் ஒத்த அன்பினராய் நீடுவாழ்க என்றும், கரிகால் வளவனது ஆட்சி எப்பாலும் செல்வதாக என்றும் வாழ்த்தினர்.

மணமகனும் மணமகளும் அகன்றிலும் அன்றிலும் போல இன்புற்று வாழ்ந்திருந்தனர். இவர்கள் இல்லறம் நடத்தி உயர்ச்சி பெறுதலைக் காணவேண்டி, கோவலன் நற்றாய், வேறொரு மாளிகை அமைத்து, அதில் வேண்டும் பொருள்களை நிரப்பி, ஏவல்செய்வோரை நியமித்து, இவர்களை அம்மாளிகையில் இருத்தினாள். அம்மாளிகையில் இருந்து இவர்கள் அன்பும் அருளும் உடையராய் இனியவை கூறிச் சுற்றந்தழுவியும் விருந்தெதிர்கொண்டும் அறவோர்க்களித்தும் அந்தணரோம்பியும் முனிவரைப் போற்றியும் இல்லறத்தை இனிது நடத்திவந்தனர். இங்ஙனம் சிலவாண்டுகள் கழிந்தன. இது நிற்க.

## II

புகார்நகரில் சித்திராபதி என்பாள் ஒரு நாடகக் கணிகை இருந்தாள். அவளுடைய மகள் மாதவி என்பவள் ஐயாண்டில் தண்டியம் பிடிப்பித்து ஏழாண்டியற்றுவித்து, பன்னிருபிராயம் புக்கபின், ஆடலாசிரியனும் இசையாசிரியனும் கவிஞனும் குயிலுவரும் கூடி, கரிகாற் பெருவளவனுடைய அவையிலே அவளை அரங்கேற்றினர். அரங்கேற்றத்தைக் காணுமாறு அரசன்முதல் அனைவரும் அவரவர் வரிசைக்கேற்ற இருக்கை முறைமையில் இருந்த

னர். மாதவி ஆடரங்கத்தைச் சென்றடைந்தாள். தோரிய மடந்தையர் தெய்வப்பாடல் பாடினர். குழல் யாழ்வழி நிற்ப, யாழின் வழியில் தண்ணுமை நிற்ப, தண்ணுமையின் வழி முழவுநிற்ப, முழவொடு ஆமந்திரிகை கூடிநின்றிசைத்தது. இக்குயிலுவக் கருவிக ளனைத்தும் பருந்தும் நிழலும் ஒத்து ஒன்றாய் நிற்பத் தேசிக்கூத்தும் வடுகுக் கூத்தும் ஆடிமுடித்து, பொன்னாலியன்றதொரு பூங்கொடி கூத்து நடித்தாற்போல், மாதவியானவள் முறை வழுவாமல் அவிநயித்துப் பாவகந்தோன்ற நாட்டியம் ஆடினாள். தனது ஆடலுக்கும் பாடலுக்கும் அழகுக்கும் தக்கபடி தலைக்கோற் பட்டம் பெற்றுத் தலையரங்கேறி, அரசனிடம் பச்சை மாலையுடனே ஆயிரத்தெண் கழஞ்சு பொன் பரியமும் பெற்றாள்.

அன்று தொடங்கி நாடோறும் அதுவே பரியமாக நிச்சயித்து, "இப்பச்சைமாலை ஆயிரத்தெண்கழஞ்சு பொன் விலை பெறுவது. இவ்விலையைக் கொடுத்து இதனை வாங்கிச் சூடுகின்றவர் மாதவிக்கு மணமகனு தற்பாலர்" என்று சொல்லி, மாதவியானவள் மாலையை ஒரு கூனி கையிற் கொடுத்து, நகர்ப்பெருந் தெருவிலே விலைக்கு விற்பாரைப் போல்வதோர் பண்பினால் நிறுத்தினாள். மாதவியின் அரங்கேற்றத்தைக் கண்டு கழிமகிழ்வெய்திய கோவலன், பரியம் ஆயிரத்தெண்கழஞ்சு பொன்னையுங் கொடுத்து மாதவி மாலையை வாங்கினான். வாங்கிக் கூனியுடனே மாதவியின் மணமனையிலே புகுந்து, மாதவி மோகத்தாலே மயக்கமடைந்து, மனைவியையும் மனையையும் மறந்து, மாதவியை விட்டுப் பிரியாத விருப்பினை உடையவனாயினான்.

சிலகாலங் கழித்து மாதவி ஒரு பெண் பிள்ளையைக் கருவுயிர்த்தாள். கருவுயிர்த்த பதினோராம் நாளில், பாட்டிமாரும் தாய்மாருமான மாமுது கணிகையர், மாதவி மகட்கு நாமகரணம் பண்ணுவோமென்று வந்து கூடினர்.

அப்போது கோவலன், 'எங்கள் மூதாதையொருவன் தீவாந்தர வர்த்தகத்தின் பொருட்டாகக் கடலில் கப்பலேறிச் செல்கையில், ஒருநாள் நள்ளிரவில் கப்பல் உடைந்தது. உடையவே திகைதப்பிக் கரைகாணுது கடலில் நீந்திச்சென்ருன். முற்பிறப்பில் புண்ணியதானம் புரிந்தவனுதலின், ஒரு தெய்வம் அவன்முன் தோன்றி, 'நான் இந்திரனேவலால் இத்தீவினுள்ளாரை அரக்கர் வாதியாமல் காத்து இங்கு வாழ்வேன். என் பெயர் மணிமேகலை: உன் துயரை ஒழித்தற்கு வந்தேன். இனி அஞ்சற்க. முன்பு நீ செய்த தானங்களால் வந்த புண்ணியம் உன்னைவிட்டொழியாது' என்று சொல்லித் தன் விஞ்சையினுலே அவனை ஒரு இடரிற் கொண்டுபோய்ச்சேர்த்தது. அதனை நாங்கள் குலதெய்வமாகப் போற்றிவருகிரும். அதன் பெயரை இந்தக் குழந்தைக்கு இடுமின்'' என்று சொன்னுன். அவ்வளவிலே கணிகையர் பலரும் மாதவிமகட்கு மணிமேகலை என்று பெயர்கூறி, அரசனையும் நகரையும் வாழ்த்தினர்.

அற்றைநாள் கோவலனும் மாதவியும் மறையவர்க்கும் மற்றவர்க்கும் சுவர்னதானம் செய்தனர். அப்பொழுது ஞான நன்னெறிக்கு நல்வரம்பாகிய மறையவனொருவன் தானும் சுவர்னதானம் பெறுமாறு வழியே வந்துகொண்டிருந்தான். மூப்பால் முதுகு வளைந்து தளர்ச்சியால் தண்டூன்றி மெல்லென வருகையில், பாகனுக்கு வயப்படாது வேகமாக ஓடிவந்த ஒரு மதயானை அம்மறையவனை வெம்மையாற் கைக்கொண்டது. அதுகண்ட கோவலன், அந்த யானையைத் தெழித்து, அம்மறையவனை நீக்கி அதன் கையினிடம் தான் புகுந்தான். அவ்வளவிலே யானை அவனைக் கையால் வளைக்க, அதன் கையினின்றும் நீங்கிக் கோவலன் அதன் கோட்டிலே அடங்கி, அது பற்றுக்கோடாக ஏறி அதன் பிடரிடத்திருந்து, அதன் மதத்தை அடக்கினுன். மறையவனும் கோவலனை வாழ்த்தித் தானம்பெற்றுத் தான் செல்வுழிச் சென்றனன்.

புகார்நகரில் இருந்த வேதியனொருவன், மனைவியோடு இல்லறம் நடத்துநாளில், குழந்தையில்லாக் குறையால் இருவரும் ஒரு கீரிப்பிள்ளையை மைந்தனைப்போல் கருதி வளர்த்திருந்தனர். சிலகாலம் ஆனபின் ஒரு பிள்ளை பிறந்தது. அதனை ஒருநாள் தூங்குவித்து, மனைவியானவள், கணவனைப் பார்த்து, "யான் தண்ணீர் கொண்டு வரும்பொருட்டுச் செல்கிறேன். நீர் பிள்ளையைப் பார்த்திரும். ஒருவேளை கீரி கடிக்கும்" என்று சொல்லித் தண்ணீர்க்குச் சென்றாள். குழந்தை தொட்டிலில் கண் வளர்ந்ததைக் கண்டு, அவ்வேதியன் தடாத ஒரு கருமம் வயத்தனாய் வெளியில் சென்றான். அத்தருணத்தில் ஒரு கரும்பாம்பு பிலத்தினின்றும் வெளிப்பட்டுத் தொட்டிலின் மேல் செல்லாநிற்க, அது கண்ட கீரிப்பிள்ளை அதனை அக்கணமே விரைந்துபற்றி உதறிக் கொன்றது. கொன்று இரத்தம் பூசுற்ற முகத்துடனே புறம்போந்த கீரியைக் கண்டு, பார்ப்பனி, "அந்தோ, என் பிள்ளையை இது கடித்து மடித்து விட்டது" என்று நினைத்துத் தனுக்குற்று, முன்பின் ஆராயாது நீர்க்குடம் சிதையும்படி அதன் தலைமேல் போட்டுக் கொன்றாள். அதுகண்ட பார்ப்பான் வடதிசை நோக்கிக் கங்கையாடப் போவானாயினான். போகின்ற கணவனை மனைவி பின்பற்றிச்செல்ல, அவன் அது பொறுது இகழ்ந்து, "நீ கொலைப்பாவம் தேடிக் கொண்டமையால், எனக்கு உன்கையிற் சோறுண்டு வாழ்தல் இனிக் கடவதன்று" என்றுரைத்து, ஓரேட்டில் ஒரு வாசகத்தை எழுதிக்கொடுத்து, "இவ்வேட்டினைக் கடனறிந்த மாந்தர் கையிற் கொடுக்க" என்று சொல்லிப் போயினான். போகவே, "என் கொலைத்தொழிலின் பாவம் நீங்க என் கணவன் கங்கையாடுதற்குச் சென்றான். சென்ற கணவன் வந்துவிடுமாறு தானம் பண்ணவேண்டும். இவ்வேட்டை வாங்கிக்கொண்டு அதற்குரிய பொருளைக் கொடுத்து பாவத்தைக் கழித்தலான புண்ணி

யம் செய்துகொண்மின்" என்று சொல்லி அழுது, பார்ப னியானவள் பீடிகைத் தெருவிலும் வணிகர் தெருவிலும் பிறர் மனைகளிலும் மனமறுகித் திரிந்துகொண்டிருந்தாள். அவளைக் கண்டு கோவலன், 'உன் இடர்ப்பாடியாது? இவ் வேடு என்ன?" என்று உசாவினன். பார்ப்பனி நிகழ்ந்த தைச் சொல்லி, "இந்த ஏட்டினை வாங்கிக்கொண்டு பொருள் தந்து எனது கடுந்துயரைக் களைக" என்று சொன்னாள். அது கேட்டுக் கோவலன் "அஞ்ச வேண்டா. உன் துயரை நானே களைவேன். மனத்துயர் நீங்குக" என்று சொல்லி, உடனே தருமாசனத்தோர் உரைத்த வேதவிதியைக் கடைப்பிடித்து, அப்பார்ப்பனி செய்த கொலைப்பாவம் நீங்குதற்கான தானத்தைச் செய்து, கானம் போன கணவனையும் வரவழைத்து அவளோடு கூட்டி, அவ்விருவரும் எப்பொழுதும் குறைவுறாது வாழ் தற்கான பொருளையும் கொடுத்தான்.

ஒருகால் புகாரில் பத்தினி யொருத்தி பொய்ப்பழி அடைதற்பொருட்டு, அறிவிலாதொருவன் அவள் கணவ னுக்குப் பொய்ச்சான்று ஏறினன். அவ்வளவிலே அவன் பூதசதுக்கத்துள்ள பூதத்தின் கரிய பாசத்தினிடம் அகப் பட்டான். அதனால் அவன் தாய் பட்ட துயரைக் கண்டு, அவனைப் பூண்ட பாசத்திலுள்ளே கோவலன்தான் விரையப் புகுந்து, "பூதநாதனே! உனக்குணவாக என் னுயிரைக் கொண்டு இவனுயிரைத் தருக" என்றிரந் தான். அதற்கிசையாமல் பூதமானது

"நரகனுயிர்க்கு நல்லுயிர்கொண்டு
பரகதியிழக்கும் பண்பீங்கில்லை.

இக்கருத்தொழிக" என்று சொல்லிக் கோவலன் எதிரி லே அக்கீழ்மகனைப் புடைத்து விழுங்கிவிட்டது. அதனால் நெஞ்சழிந்த தாயும் உற்றுருறவினரும் வறுமையெய்தா மல் அவர்களைக் கோவலன் பலவாண்டு பாதுகாத்து வந்தான்.

## III

இங்ஙனம் பல புண்ணியங்களை இழைத்துக் கோவலன் மாதவியோடு மருவி வாழ்ந்துவருகையில், புகார்நகரில் அக்கால வழக்கின்படி, ஓராண்டில் இந்திரன் திருவிழா நடந்தேறியது. மற்ற ஆலயங்களிலும் நைமித்திகங்கள் நடந்தன. அங்ஙனம் திருவிழா நடந்தேறுகையில் மாதவியானவள் ஆடல் பாடல் நடத்தினாள். அப்போது விஞ்சையரும் தேவரும் வேற்றுருக்கொண்டு வந்து இந்திரவிழவையும் மாதவியின் ஆடல் பாடல்களையும் கண்டு வியந்தனர். விழவிற்குக் கொடியெடுத்த நாள்முதல் இருபத்தெட்டுநாளும் விழவு நடந்து பிற்றைநாள் கொடியிறங்கியது.

விழாவாற்றுப்படுத்த மறுநாள் உவாநாளாதலின், நகரினர் பலர் தத்தம் பரிவாரங்களோடு கடலாடுதற்பொருட்டுக் கடற்கரை நோக்கிச் சென்றார்கள். மாதவியின் ஆடலும் ஆடற்கேற்ற கோலமும் தனது அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடிகளைக் கொண்டுவிடுதலாலே, "அவை பிறர்க்கும் இவ்வாறே ஆமன்றே? இவள் ஆடுகையில் பலரும் இவளைப் பற்றிப் பார்த்தனரன்றோ?" எனக் கோவலன் வெறுப்புறலாயினான். அந்தக் குறிப்பை அறிந்த மாதவி, அவனுக்கு இன்பம் விளைவித்திருந்தவள், தானும் கடல்விளையாட்டைக் காண விரும்பினாள். வைகறையாமத்தில் மதாணி முதலிய பேரணிகலங்களை அணிந்து கோவலன் கோவேறு கழுதையின்மேல் ஏறினான். மாதவி கொல்லாப் பண்டியில் ஏறினாள். இருவரும் பட்டினப் பாக்கத்தை விட்டு நீங்கி மருவூர்ப் பாக்க வீதியினூடேபோய்க் கடற்கரையை அடைந்தனர்.

வழியில் அலைவாயிருப்பில், கப்பலில் வந்த பரதேசிகள் பலவகைக் கூலங்களைக் குவித்தமறுகில், இன்ன சரக்கு ஈண்டுளதென்று குறிக்கும் கொடிகள் கட்டியிருப்பதைக் கண்டனர். சாந்தும் மலரும் சுண்ணமும் வண்ண

மும் பண்ணிகாரங்களும் விற்போர் வைத்த விளக்குகளும், பணித்தட்டார் பணிபண்ணும் இடங்களில் வைத்த விளக்குகளும், பிட்டுவாணிகர் பிட்டு விற்றற்கு வைத்த விளக்குகளும், அப்பவாணிகர் குடத்தண்டில் வைத்த விளக்குகளும், மீன்விற்போர் விளக்குகளும், கலங்கரை விளக்குகளும், பரதவர் திமில் வைத்த விளக்குகளும், பரதேசிகள் இட்ட விடிவிளக்குகளும், பண்டசாலை காப்போர் இட்ட விளக்குகளும் ஒன்றிமிகுதலாலே, மணலின் மீதிட்ட வெண் சிறுகடுகும் புலப்படுங் காட்சித்தாகக் கடற்கரை மருதநிலம்போல விளக்கமுற்றிருந்தது.

மலைவளங்களும் கடல்வளங்களும் அங்கங்கே மயங்கிக் கிடக்கின்ற கடற்றுறைமுகங்களில், சோலைகள் சூழ்ந்த இடங்களில், அரசகுமாரரும் அவருடைய உரிமைச் சுற்றத்தாரும் பரதகுமாரரும் அவருடைய பரிசனமகளிரும், சிலதியரும், ஆடல்வல்ல பரத்தையரும், பாடல்வல்ல பரத்தையரும் கூடிய கூட்டங்கள் தோன்றின. அவர்களுடைய பலவேறு வகைப்பட்ட ஓசையும், மறைவின்பொருட்டு அவரவர்கள் இட்டுக்கொள்ளும் திரைச்சீலைகளும், அவற்றின் கோலமும், புனலாடிடங்களும் வீறுபெறத் தோன்றின. காவிரியின் புகார் முகமெங்கும் வறிதிடம் இன்றாகச் சேர நெருங்கிய நால்வகை வருணத்தாருடைய ஓசையும் கூடி ஓரோசையாய் ஒலித்தது.

தனது விளையாட்டு மகளிருடனே வந்த மாதவியும் கோவலனும், தாழையே வேலியாகச் சூழ்ந்த ஓரிடத்தில், நடுவிலிருந்த ஒரு புன்னைமர நீழலில், சித்திரத் திரையை வளைத்து, மேற்கட்டும் கட்டி, அதன் கீழிட்ட தந்தக்கட்டிலில் இருந்தனர். தோழியான வசந்தமாலையின் கையிலிருந்த யாழை வாங்கி, மாதவியானவள், சுரங்களையெழுப்பி இசைக்கூறுபாடுகளைத் தன் செவியாலுணர்ந்து, யாழைத் திருத்தி, தான் முற்பட வாசியாதே, அதனைக்

கோவலன் கையில் கொடுத்தாள். கோவலனும் மாதவி மகிழ ஆற்றுவரியும் கானல்வரியும் பாடினான்.

அவ்விடத்துக் கோவலன் வாசித்த உருக்களைக் கேட்ட மாதவியானவள், அவை களவொழுக்கத்தில் தலைமகன் கூற்றாதலின், "இவன் என்மேல் அன்பிலன். இவன் உள்ளத்து நிலைபெற்ற வேறொரு குறிப்பு உண்டு" என உட்கொண்டு புலந்தாள். ஆயினும், அது தோன்றாமல் மனமகிழ்ந்தாள் போல் நடித்து, யாழை அவன் கையினின்றும் வாங்கிக் கொண்டு, தன்பக்கல் வேறு குறிப்பு இலனாயினும் தானும் வேறு குறிப்பு உடையவள் போலக் கோவலனுக்கு நயந்தோன்ற, யாழ்வேறு தன் கண்டம் வேறு என்று புலப்படாதவாறு, மாதவியும் கானல்வரிப் பாணி பாடத்தொடங்கினாள்.

அங்ஙனம் மாதவி பாடக் கேட்ட கோவலன், ஊழ்வினை வந்து உருத்தமையால், "நான் கானல்வரி பாட, இவள் அங்ஙனம் பாடாதே, என்னையொழியப் பிறிதொன்றின்மேல் மனம்வைத்து, மாயஞ் செய்வாளாதலின், இப்படிப் பாடினாள்" என்றெண்ணி வெறுக்கலுற்றான். அவ்வளவிலே அவளோடு அளவளாவாமல், அவன், தன் ஏவலாளர் புடைசூழ்ந்து வர, தனியாகப் புறப்பட்டுத் தன் வீடுநோக்கிப் போயினான். அதன்மேல், செய்வதின்னதென்று தோன்றாமல் மயங்கிய மாதவியும், பண்டியில் ஏறி, தோழிமார் தன்னைச் சூழ்ந்துவர, ஒன்றியாகத் தன்னகம் புக்கடைந்தாள்.

அப்பொழுது வேனிற்காலம் ஆதலால், தனது மாளிகையின் மேல்நிலையில், நிலாமணி முற்றத்தில், யாழைக் கையில் எடுத்துப் பதுமாசனமாக இருந்து, மாதவி மூந்துறக் கண்டத்தால் மதுரகீதமாகப் பாடினாள். அது மயங்கி யாழாற்பாடத் தொடங்கினவள், இடையில் ஒரு பண்ணை வாசித்தலில் மயங்கினாள். அவள் அதன்மேல் கோவலனுக்குத் திருமுகம் விடக்கடவோமென்று நினைத்

தாள். அதனால் முகம் தெளிவுற்று, சண்பகம் மாதவி பச்சிலை பித்திகை மல்லிகை கழுநீர் முதலியவற்றால் தொடுத்த மாலையின் இடையிலே அமைத்த தாழைமடங் கலின் வெள்ளிய தோட்டிலே, ஒரு பித்திகை முகையை எழுத்தாணியாகச் செம்பஞ்சுக் குழம்பிலே தோய்த்துத் தன் பிரிவாற்றாமையைக் குறிப்பிட்டெழுதி, மாலைப் பொழுதில் வசந்தமாலையை அழைத்து, "இம்மாலையில் எழுதிய பொருளையெல்லாம் கோவலருக்கு ஏற்பச் சொல்லி, இங்கு இப்பொழுதே கொண்டுவருக" என்று போக்கினாள்.

வசந்தமாலையும் அம்மாலையை ஏற்றுக்கொண்டுபோய், கூலவீதியில் கோவலனைக்கண்டு, மாலையான திருமுகத்தை அவன் கையில் கொடுக்க நெருங்கினாள். கோவலன் "வசந்தமாலாய், மாதவி நாடகமகள் அல்லளோ! நாடக மகளிர்க்குரிய மாயச் செய்கை அவளுக்கு இயல்பே யன்றோ!" என்றுரைத்து, திருமுகத்தை ஏற்காமல் மறுத்துவிட்டான். வசந்தமாலையும் வருந்திவாடிய உள் ளத்தோடு விரைந்து சென்று அச் செய்தியை மாதவி யிடம் உரைத்தாள். அதுகேட்ட மாதவி, "இன்னும் இம்மாலைப் பொழுதினுள் வருவார்; மாலைவாராராயினும், காலையில் ஒருதலையாக வருவார்" என்று சொல்லி, அவல நெஞ்சத்தோடு தாளிருந்த படுக்கையில் சாய்ந்து, இமை யோடு இமைபொருந்தாமல் கிடந்தாள்.

## IV

இதற்குப் பலவாண்டுகளுக்கு முன்னே புகார்நகரில் மாதவி என்பாள் ஒரு பார்ப்பனி இருந்தாள். ஒருநாள் அவள் தன் மாற்றாள் குழந்தைக்குத் தன் முலைப்பாலைச் சங்கிலே கறந்து உண்பித்தாள். பால் விக்குதலாலே குழந்தை மரித்தது. கணவனும் மாற்றாளும் தன்மீது அடாப்பழியிட்டு நிந்தனை கூறுவார்களே யென்று ஏக்க

மடைந்து, மாதலி குழந்தையை எடுத்துக்கொண்டு, சூரியன்கோயில் சந்திரன்கோயில் வச்சிரக்கோட்டம் குமரகோட்டம் சிவன்கோயில் பலதேவர்கோயில் சாதவாகனன் கோயில் அருகன்கோயில் என்னும் கோயில்களெங்கும் புகுந்து, "தெய்வங்களே, எமது துன்பத்தைத் தீர்ப்பீராக" என்றிரந்தாள். இரந்தும் ஒருவரும் தீராமையின், அவள் ஐயனார் கோயிலை அடைந்து பாசண்டச் சாத்தனிடத்தே வரங்கிடந்தாள்.

அப்போது சுடுகாட்டுக் கோட்டத்தில் இடுபிணம் தின்னும் இடாகினிப்பேய் இளங்குமரி வடிவாய்ச் சென்று மாதலியை நோக்கி, "கேளாய், மாதலி! செய்தவமில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்: மரித்த குழந்தையைப் பார்ப்போம். என் கையிலே கொடு" என்று சொல்லா நின்று, பாலனைப் பறித்து விழுங்கிவிட்டது. அதைக் கண்டு மாதலி, இடியுண்ட மயில்போல் ஏங்கியழுதாள். அப்போது அச்சாத்தன் "அன்னாய், பாவம் அழுகின்றாய். அழவேண்டா. நீ செல்கின்ற வழியில் சோலையிடத்து உயிரோடு கிடக்கின்ற குழந்தையைச் சென்று காண்" என்று சொல்லித் தான் அக்குழந்தையாய் அவ்விடத்துச் சென்று கிடந்தான். மாதலியும் மாயக்குழந்தையைத் தன் குழந்தையென்றே வயிற்றிலே அணைத்துக்கொண்டு போய்த் தாயின் கையில் கொடுத்தாள்.

அங்ஙனம் குழந்தையாகிய சாத்தன், இருமரபுந் தூய மறையோனுக்குப் பிள்ளையாய் வேத வேதாங்கங்களைக் கற்று, அதற்கேற்றவாறு நல்வழியில் நிற்பவனாயினான். தந்தை தாயர் இறந்தபின்னர் அவர்க்கு நீர்க்கடன் முதலியன செய்து, தாயத்தாரோடு வெல்வழக்குரைத்து, எட்டாண்டளவு தேவந்தி யென்னும் மனைவியோடு கூடி இல்லறம் நடத்தினான். அங்ஙனம் நடத்தி வந்தவன், ஒருநாள் மனைவியிடம்மேவி உண்மையை உரைத்தான். அதன்மேல் அவளது உள்ளக்குறிப்பினை

அறிந்து, அதற்கேற்ப, "நீ எமது கோட்டத்து வருக" என அவளிடம் சொல்லி, ஏனையோரிடத்தில் "தீர்த்தத் துறை யெங்கும் போய்த் தீர்த்தமாடுவேன்" என உரைத்து வீட்டை விட்டகன்ருன். தேவந்தியும் "தீர்த்த மாடச் சென்ற என் கணவன் மனத்தைத் திரும்பப் பண்ணி, அவனை மறுத்தும் இவ்விடத்தே அழைத்துத் தருவாய்" என்ருெரு போக்குக் காட்டிக் கொண்டு, சாத்தன் கோட்டத்தை நாடோறும் வலம் வந்து, சாத்தற்குப் பூவும் நீரும் தூவியிருந்தாள்.

தேவந்தியானவள் இளமையில் மாநாய்கன் மனையில் வளர்ந்தவள். ஆகவே அவள் கண்ணகிக்கு உற்ற பார்ப்பனத் தோழி. கண்ணகிக்கு கொழுநன் பிரிவால் உற்ற துன்பத்தை உணர்ந்தவளாதலின், ஒருநாள் நெஞ்சின் வருத்தமுடையளாய்ச் சாத்தன் கோட்டத்தை நண்ணி, கண்ணகி கணவனைப் பெறல்வேண்டும்" என அறுகும் சிறுபூளையும் நெல்லும் தூவி, பின்னர்க் கண்ணகிபால் சென்று ஆசி கூறுவாள், "நீ உன் கணவனைப் பெறுவாயாக" என்ருள்.

அதுகேட்ட கண்ணகி, "உன் ஆசி பொய்க்காது. நான் என் கணவனைப் பெறுவேன். ஆயினும் நேற்றை இரவில் கண்ட கனவால் என்னெஞ்சம் ஐயுறுகின்றது. கனவின்கண், கணவன் என்னைக் கைப்பற்றிச் செல்ல, யாங்கள் ஒரு பெரிய நகரில் புக்கோம். அங்ஙனம் புக்க நகரினிடத்தே எங்கட்கு ஏலாததொரு படிற்றுரையை அவ்வூரார் இடுதேளிடுமாறுபோல் என்மேல் இட்டனர். அப்படிற்ருல் கோவலற்கு ஒரு தீங்கு உற்றதென்று பிறர் சொல்லக்கேட்டு, அதுபொருது, ஆண்மக்கள்முன் செல்லாதேன் அவ்வூரரசன் முன்னர்ச் சென்று, வழக்குரையாதேன் வழக்குரைத்தேன். ஆதலால் அவ்வரசனோடு அவ்வூர்க்கும் உற்றதோர் தீங்கு உண்டு. எனினும், 'உரையார் இழிதக்க காணிற் கனு' என்பவாகலின், தீக்

கனவான அதனை நினக்கு விரித்துரையேன். அப்பால் கணவனோடு யான் பெற்ற நற்றிறங்களை நீ கேட்பாயாயின், அது உனக்கு நகையைத் தரும்'' என்று கூறினாள்.

அதன்மேல் தேவந்தி சொல்லலுற்றாள்:—''கண்ணகீ, நீ கண்ட கனவை நினைந்து வருந்தவேண்டா. நீ கணவனால் வெறுக்கப்பட்டாயுமல்லை. கணவன் காரணமாக முற்பிறப்பில் நீ ஒரு நோன்பு தப்பினாய். அதனால் தீங்கு மிக்கது. அதற்குப் பரிகாரம் உண்டு. காவிரி சங்கமுகத்தயலில் நெய்தற்கான விடத்தில் இரண்டு நீர்நிலைகள் உள்ளன. அவை சோமகுண்டம் சூரியகுண்டம் என்பன. அவற்றின் துறைகளில் மூழ்கி, காமவேள் கோட்டத்தில் புகுந்து அவனை வழிபடுவோர், இம்மையெல்லாம் தம்முடைய கணவரோடும் பிரிவின்றியிருந்து இவ்வுலகத்தில் இன்பமுறுவர்: மறுமையிலும் போக பூமியிலே போய்ப் பிறந்து மூன்று பல்லங்காலம் கணவரோடு பிரிவின்றி இன்பம் நுகர்வர். ஆதலால் நாமும் ஒருநாள் அந்நீர்நிலைகளில் ஆடக்கடவோம்.'' தேவந்தியின் வார்த்தையைக் கேட்டுக் கண்ணகி ''அங்ஙனம் நீர்நிலைகளில் மூழ்கித் தெய்வந்தொழுதல் குலத்திற் பிறந்தார்க்குப் பெருமையன்று'' என்று சொல்லினாள்.

மாலைக்காலம் வந்தது. வீடுகள்தோறும் மனையாட்டியர் முல்லைமலரும் நெல்லும் தூவி இல்லுறைதெய்வத்தை வணங்கி, விளக்கேற்றிவைத்து, அலங்காரம் செய்து கொண்டனர். அப்போது கண்ணகியின் தாதி அவளிடம்சென்று, ''கோவலர் நமது கடைத்தலம் வந்துளார்'' என்றுரைத்தாள். அவ்வளவிலே கோவலன் உட்புகுந்தான். கண்ணகியுடன் பள்ளியறையை அடைந்து, கண்ணகியின் வாடிய மேனியின் வருத்தமும் கண்டு அவன் ''மாயப்பரத்தையோடு மருவியொழுகிய காரணத்தால் நமது குலத்தில் நெடுங்காலமாய் நீடித்துவந்த நிதியெல்லாம் தொலைந்து வறுமையுற்றேன். இவ்வறுமை எனக்கு

மிக்க நாணைத் தருகின்றது" என்று கூறினான். மாதவிக்குக் கொடுக்கப் பொருளில்லாமையால் இங்ஙனம் தளர்ந்து கூறினனே எனக்கருதி, கண்ணகி முறுவல் செய்த முகத்துடன், "என்னிடம் இன்னும் இரண்டு சிலம்புகள் உள்ளன; அவற்றை எடுத்துக்கொள்க" என்றாள். உடனே கோவலன், "நீ சொன்ன இச்சிலம்பை நான் வாணிகமுதலாக வைத்து, இதுகாறும் அழித்த அணிகலன்களையும் பொருளையும் மதுரையை அடைந்து ஈட்டுதலுற்றேன். நீயும் புறப்பட்டு வைகறையில் என்னுடன் வருதல்வேண்டும்" என்று சொன்னான். கண்ணகியும் அகமகிழ்ச்சியுடன் ஒருப்பட்டிருந்தாள்.

## V

இரவில் இடையாமம் கழிந்து, சந்திரன்மறைந்து, இருள் செறிந்தது. இருவரும் எழுந்து, இடைகழியைக் கடந்து, காவல ரறியாமல் புறப்பட்டுச் சென்றனர். செல்கையில் திருமால்கோயிலை வலஞ்செய்து கழிந்து, புத்தசைத்தியத் திந்திர விஹாரங்களை அடைவே கண்டு, ஸ்ரீகோயிலில் சிலாதலத்தைத் தொழுது வலங்கொண்டு, ஊர்வாயிலை அடைந்தனர். அப்பால் இலவந்திகையின் எயிற்புறம் போய், காவிரிக்கரையில் திருமுகத்துறை கழிகின்ற வாயிலை விட்டு நீங்கி, காவிரியின் வடபெருங் கரையில் பொழிலைக் கடந்து சென்றனர். இங்ஙனம் ஓர் காவததூரம் சென்று ஓர் இளமரச்சோலையை அடைந்தனர். அவ்வளவிலே கண்ணகி இடையும் அடியும் வருந்தி, இளைப்பால் குறுக உயிர்த்து, "மதுரை மூதூர் யாது?" என வினவினாள். அதுகேட்டுத் துன்பங் கொண்ட கோவலன், நகை காட்டி, "நமது நாட்டிற்கு மேல் ஐந்தாறு காவதத்தில் உள்ளது. இனி அண்ணித்தே" என்றான்.

சற்றுநேரம் இளைப்பாறிய பின்பு, கண்ணகியும் கோவலனும் அயலதான தவப்பள்ளியிலிருந்த ஒரு தவ

முதியோளைக் கண்டு அடிதொழுதனர். அவள் சைன மதத்தினள்: கவுந்தி என்று பெயர் பெற்றவள்.

அம்முதியோள் "நீங்கள் அழகும் சிறந்த குலமும் ஒழுக்கமும் உடையராய் இருக்கின்றீர்கள். ஆருகதவிரதம் தப்பாதவராகக் காண்கின்றீர்கள். தீவினையாளரைப்போல் நீங்கள் உம்மிடத்தைவிட்டு வந்த காரணம் யாதோ?" என்று கேட்டாள்.

அதற்குக் கோவலன், "சுவாமி, யான் மதுரைமூதூரில் சென்று நியாயமாய்ப் பொருள்தேட விரும்பினேன்; இதுவே காரணம்" என்றான்.

அதுகேட்ட கவுந்தி, "நன்று. ஆயினும் செல்லுதற்குரிய வழியோ காடிடையிட்ட நாடு. வழியில் பருக்கை பரந்துகிடக்கும். இவள் பருக்கைமீது அடியிட்டு நடக்கத்தக்கவளல்லள். ஊழின் செய்கையை யார் அறியவல்லார்? யான் பெரியோர்களிடம் அறவுரை கேட்கும் பொருட்டு மதுரைக்குப் போக எண்ணியிருக்கிறேன். ஆதலின் யானும் உடன்வருகிறேன். வாருங்கள்," என்றாள்.

என்றதைக் கேட்டு மகிழ்ச்சி யடைந்து, கோவலன், "சுவாமி, தாங்கள் இங்ஙனம் அருள்செய்தலால், இனி இவளைப்பற்றிய துயரம் எனக்குச் சிறிதும் இல்லையன்றோ" என்று கூறினான்.

கவுந்தி, "நாம் செல்லுகின்ற இடத்துக்கு வயலும் சோலையுமான வழியே யல்லது வேறு வழி இல்லை. வள்ளிக்கிழங்கு தோண்டிய குழிகள் பூந்தாது நிரம்பிப் பொய்க்குழிகளாக இருக்கும். தாழ்ந்த கிளைகளில் காய்த்துள்ள பலாக்காய்கள் தலையிலும் உடலிலும் முட்டும். பலாப்பழத்தின் தோல் பருக்கைபோல் காலில் உறுத்தும். நீர்நாய்களைக் காணினும், கயல் உகளக்காணினும், வாளை பாயக் காணினும், இவள்

மனங்கலங்குவாள். கரும்புத்தோட்டங்களில் தேன்கூடு சிதைந்தொழுகிப் பொய்கை நீரோடு கலக்க அந்நீரை இவள் கையால் அள்ளிப் பருகவுங்கூடும். மதுமயக்கத்தால் வரம்பிலிட்ட குவளைப்பூவில் மொய்த்திருக்கும் வண்டுகளின்மீது நீங்கள் அடியிடவுங்கூடும். வாய்க்காலின் அடைகரையில் உள்ள நண்டு நத்தை முதலியவைகளை மிதித்துவிடவுங் கூடும். இவற்றையெல்லாம் குறிப்பால் அறிந்து, உன் மனைவியோடு நீ எச்சரிக்கையாக நடக்கவேண்டும்" என்று சொல்லி, பிக்ஷாபாத்திரமும் மயிற்பீலியும் உறியும் கொண்டு, "பஞ்சமந்திரமே நமக்கு வழித்துணையாக" என்றுரைத்து, அவர்களுடன் வழிச் செல்லலுற்றாள்.

வழியில் மருத நிலங்களின் வளங்களைக் கண்டும், பறவைகளின் ஓசையைக் கேட்டும், களைபறிக்கும் கடைசியர்பாட்டும் பொன்னேர் பூட்டினோர் ஏர் மங்கலமும் களவழி வாழ்த்தும் செவிக்கொண்டும், வழிநடை வருத்தம் தோன்றாமல், அந்தணரிருக்கையும் வேளாளரூர்களும் இடையிட்ட நாடெல்லாம் கண்டு, நாடோறும் காதவழி நடந்து, அங்கங்கே தங்கியிருந்து இளைப்பாறிச் சிறிது சிறிதாக வழியைக் கடந்து கொண்டிருந்தனர்.

அப்போது ஒருநாள், புகார்நகரின் பட்டினப் பாக்கத்தில் சிலாதலத்திருந்து தருமோபதேசம்செய்யும் சாரணர் இருவர், சீரங்கத்தில் ஒரு சோலையில் வந்து தோன்றினர். அவர்கள் வந்தமையைக் கண்டறிந்த கவுந்தியோடு சென்று கோவலனும் கண்ணகியும் அவர்களடியிலே முடியுற வீழ்ந்து வணங்கினர். வணங்கின அவர்கள் அங்குற்ற காரணத்தை அவதிஞானத்தால் அறிந்தாரெனினும், சாரணரில் மூத்தவர், விருப்பும் வெறுப்பும் விட்டவராதலின், அவர்க்கு வரும் துன்பத்திற்குத் தாம் வருந்தாராய், கவுந்தியை நோக்கி,

"ஒழிகென வொழியா தூட்டும் வல்வினை.
இட்ட வித்தின் எதிர்ந்துவந் தெய்தி
ஒட்டுங் காலை ஒழிக்கவு மொண்ணா.
கடுங்கால் நெடுவெளி இடுஞ்சுட ரென்ன
ஒருங்குடன் நில்லா உடம்பிடை யுயிர்கள்.
அறிவன் அறவோன் அறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தருமமுதல்வன் தலைவன் தருமன்

* * * * * *

அங்கம் பயந்தோன் அருகன் அருண் முனி
பண்ணவன் எண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி
ஓதிய வேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை யோ" ரென

உரைத்தார். அவர் வாய்மொழி கேட்ட கவுந்தி, தலை மேல் கைகளைக் கூப்பிக்கொண்டு,

"ஒருமூன் றவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகம் திறவா.
காமனை வென்றோன் ஆயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்னா.
ஐவரை வென்றோன் அடியிணை யல்லது
கைவரைக் காணினும் காணா என்கண்.
அருளறம் பூண்டோன் திருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது.
அருக ரறவ னறிவோற் கல்லதென்
இருகையுங் கூடி ஒருவழிக் குவியா.
மலர்மிசை நடந்த மலரடி யல்லதென்
தலைமிசை யுச்சி தானணிப் பொறாது.
இறுதியி லின்பத் திறைமொழி யல்லது
மறுதர ஓதியென் மனம்புடை பெயராது,"

என்று அருகக் கடவுளைப் புகழ்ந்தாள். அதைக்கேட்டுச் சாரணர் அவ்விடத்திட்ட சிலாவட்டத்தினின்றும் எழுந்து ஒரு முழவுயரம் மேலாக நின்று, "கவுந்திக்குப் பவந்தருபாசம் கெடுக" என்று கூறி, அந்தர வழியாக விரைந்து சென்றனர். செல்கின்றவரை நோக்கிக் கண்ணகியும் கோவலனும் கவுந்தியும் தொழுது, பாசங்கள் அறுகவென்று பணிந்து போந்து, பள்ளியோடத் தேறிச்சென்று, காவிரியின் தென்கரையிலே ஒரு பொழிலை அடைந்தனர்.

அங்குவந்த வம்பப்பரத்தை ஒருத்தியும் வறுமொழியாளன் ஒருவனும், இவர்களைக் கண்டு, காமனும் இரதியும்போலும் இவர்கள் யாரோ எனக் கேட்டறிய நினைத்து, "சுவாமி, உம்மோடு வழிவந்த இவர்கள் யாவர்?" என்று வினவினர்.

அதற்குக் கவுந்தி, "இவர்கள் என் மக்கள். காமனும் தேவியும் அல்லர். மானிடயாக்கையர். வழிவருதலால் மிகவும் வருந்தினர். அவர் பக்கல் செல்லாது அகலப் போமின்," என்றாள்.

அப்போது அவ்விருவரும், "ஒரு வயிற்றிற் பிறந்தோர் கொழுநனும் மனைவியுமாய்க் கூடி வாழ்தல் தக்கதென்று உங்கள் தரிசனத்தில் உரைத்திருப்பது உண்டோ?" என்றிகழ்ந்தனர்.

அவ்வளவிலே கவுந்தி செவியைப் புதைத்து "இவர்கள் முள்ளுடைக் காட்டில் முதுநரியாக" என்று சாபமிட்டாள்.

உடனே அவர்கள் நரிகளாய் நெடியகுரலாகக் கூவுவதைக் கேட்டு நடுங்கிக் கோவலனும் கண்ணகியும்,

> "நெறியி னீங்கியோர் நீரல கூறினும்
> அறியா மையென் றறிதல் வேண்டும்.

தங்கள் எதிரில் பிழைசெய்த இவர்களுக்கு இனிச் சாபம் நீங்கி உய்தலான காலத்தை உரைத்தருள்க" என்று இரந்தனர்.

அதற்குக் கவுந்தி, "நெடுங்காலம் தவஞ்செய்து பெற்ற மக்கட்பிறப்பை இவர்கள் ஒரு வார்த்தையால் இழந்து இழிபிறப் புற்றனர். ஓராண்டளவு உறையூர் மதிற்புறமாகிய காவற்காட்டில் திரிந்து இங்ஙனம் துன்பம் உழந்து பின்னர் முன்னைப் பிறப்பைப் பெறுவாராக" எனச் சாபவிடை செய்தாள்.

உடனே மூவருமாக உறையூர் அடைந்தனர்.

---

## மதுரைக்காண்டம்

## VI

மாலைப்பொழுதில் உறையூரை அடைந்த வளவில் மூவரும் அருகக்கடவுளை வணங்கினர். அங்கே அருகப் பள்ளியிலுள்ள முனிவர்களுக்கு, கவுந்தி, சிரங்கப் பொழிலினிடத்துச் சாரணர் கூறிய மொழிகளை இனிமையுற மொழிந்தாள். மறுநாள் சாவகர் உறைவிடத்து இளைப்பாறியிருந்து, அப்பால் தென்றிசை நோக்கிச் செல்வாராய், மூவரும் வைகறை யாமத்தில் உறையூரைவிட்டு நீங்கிக் காலையில் ஓரிளமரக்காவை அடைந்து, அதில் உள்ள ஒரு மண்டபத்தே புகுந்தனர்.

அம்மண்டபத்தில் இருந்த ஒரு முதுமறையோனைக் கண்டு, கோவலன், " ஐயரே, உம்முடைய ஊர் யாது? இங்கே வந்த காரணம் என்னை?" என வினவினன்.

முதுமறையோன், "குடகமலையின் பக்கலில் மாங்காடு என்பதோர் ஊர் உண்டு. நான் அவ்வூரில் உள்ளவன். திருமால் திருவரங்கத்தில் கிடந்த வண்ணமும் திருவேங்கடத்தில் நின்ற வண்ணமும் கண்டு கதிபெறும் விருப்பத்துடன் எங்கள் ஊரைவிட்டு வந்தேன். பாண்டி நாட்டின் வளங்களையும் பாண்டியனுடைய செய்கைகளையும் கண்குளிரக் கண்டேன். கண்டுவருகின்றவன் இங்கிருந்து இளைப்பாறுகின்றேன்," என்றான்.

அவ்வளவில் கோவலன், "அங்ஙனமாயின், மதுரைக்குச் செல்லலான செவ்விய நெறியை எங்கட்கு விளக்குக," என்று வேண்டினான்.

முதுமறையோன் மொழிதலுற்றான்.— "நீங்கள் பாவம் வெய்யிலின் வெப்பம் மிக்க இந்தக் கோடை காலத்தில் இந்த மாதுடன் வந்தீர்கள். பாறையும் துறுகல்லும் அருவழியின் நெறிமயக்கமும் பேய்த்தேரும் அடைவுபடக்கிடந்த இந்தத் தொலையாத பெரிய சுரத்து நெறியைத் தொலைத்துப் போய், கொடும்பாளூர் நெடுங்குளம் என்னும் இரண்டூர்க்கும் பொதுவாகிய ஏரியின் கரையை முன்னே அடைதல் வேண்டும். ஏரியின் கரையைக் கடந்து சென்றபிறகு, வழியானது சூலம்போல் மூன்றாய்க் கவர்க்கும். அங்ஙனம் கவர்க்கும் வழியினுள் வலப்பக்கங் கிடந்த வழியை முன்னர் விளக்குகின்றேன். அது வெண்கடம்பும் ஓமையும் வாகையும் மூங்கிலும் கற்றாழை நீர்வற்றிக் கரிந்துகிடக்கின்ற இடங்களும் உண்ணுநீர் கிடைக்காத கானமும் எயினரூரையடுத்த வழியுமாய்க் கடத்தற்கரியது. அவற்றையெல்லாம் கடந்துசென்றால், மலை நெல்லும் கரும்பும் தினையும் வரகும் வெள்ளுள்ளியும் மஞ்சளும் கவலைக்கொடியும் மலைவாழையும் கமுகும் தெங்கும் மாவும் பலாவும் என்னுமிவை மலிந்த சிறுமலை விளங்கித் தோன்றும். அம்மலையை வலப்பக்கத்துக் கொண்டு இடப்பக்கத்து நெறியிற் சென்றால், மதுரையை அடையலாம்.

"இனி இடப்பக்கத்து நெறியை இனிது கூறுவேன். அருஞ்சுரங்கள் பல இடைக்கிடந்த நாட்டு நெறியைக் கடந்தால், அழகர் திருமலை எதிர்ப்படும். அங்கே ஒரு பிலத்துநெறி உண்டு. அப்பிலத்துக்குள்ளே புண்ணிய சரவணம் பவகாரணி இட்டசித்தி என ஒன்றின் பக்கல் ஒன்றாக மூன்று பொய்கைகள் உள்ளன. புண்ணிய சரவணத்தில் நீராடுவார் ஐந்திரவியாகரணம்

உணர்வர். பவகாரணியில் மூழ்குவோர்க்குப் பூர்வ ஜன்ம வுணர்ச்சி உண்டாகும். இட்ட சித்தியில் ஆடுவார் இட்டசித்தி அடைவர்.

"அப்பிலத்துட் புகுதலை விரும்புவோர், அம்மலையில் வீற்றிருக்கும் அழகரை மனத்தால் நினைத்து வாக்கால் துதித்துக் கையால் தொழுது, அம்மலையை மும்முறை வலம் வந்தால், அம்மலையைச் சேர்ந்த சிலம்பாற்றின் கரையிலே ஒரு கோங்கமரத்தின் நிழலிலே வரோத்தமை யென்னும் ஓரியக்கி தோன்றுவாள். அவள், "யான் இப்பாதசைலத்தின்கண் வாழ்வேன். இப்பிறப்பிற் கின்பமும் மறுபிறப்பிற்கின்பமும் இம்மை மறுமை யொழிந்து எக்காலத்தும் ஒரு தன்மையாய்க் கோட்ட மின்றி அழிவற நிற்கும் இன்பமுமாகிய பொருள்கள் யாவை? இந்தவினாக்களுக்குரிய விடையை உரைத்தார்க்கு எத்தொழிற்கும் உரியேன். உரைத்தீராயின், உமக்கு இப் பொழுதே இப்பிலவாயிற் கதவைத் திறந்துதருவேன்" என்பாள். விடையை உரைத்தால் அவள் கதவு திறந்து வழிகாட்டுவாள். அவ்வழியில் நீண்ட இடைகழிவாயில் கள் பல உள்ளன. அவை கழிந்தால், இரட்டைக் கதவு டைய வாயில் ஒன்று உண்டு.

"அங்கே ஒருத்தி தோன்றி, 'ஈறில்லாத இன்பம் யாது?' என்று கேட்பாள். விடை கொடாதாரை வருத் தாமல் அவர்கள் போகக்கடவதான நெறியின்கண் அவர் களைப் போக்குவள். விடைகொடுத்தவரை முற்கூறிய பொய்கைகளின் கரைக்கண் செலுத்தி, அவை இவை யென்று காட்டி, மீளுவள். பஞ்சாக்கரத்தையும் அட்டாக் கரத்தையும் ஒரு தன்மையாக உளங்கொண் டோதி, அப் பொய்கைகளில் வேண்டிய தொன்றில் விருப்பத்துடன் நீராடினால், அதன் பயனை நுகர்ந்த நெஞ்சம் பிறிதொன் றினையும் விரும்பாது.

"அப்பொய்கைகளின் பயனை விரும்புதல் இல்லையாயின், அவற்றை நினையாமல் அழகனுடைய திருவடிகளை நினையுங்கள். அங்குநின்றும் நோக்குறின் அவன் ஆலயத்துக் கருடத்தம்பம் தோன்றும். அவ்வளவிலே அவன் திருவடிநிலை உங்களை ஏன்றுகொண்டு பிறவித் துன்பத்தைக் கெடுக்கும். அதனால் பின்னர்ப் பரமபத மடைதல் மெய்யென்று இன்பமெய்தி அப்பால் மதுரையை அடைதலாகும்.

"இடைப்பட்ட நெறி செவ்விய நெறியே. அந்நெறியில் பொழில்கள் சூழ்ந்த ஊர்களும் ஊர்களை இடையிட்ட பல காடுகளும் உள்ளன. அவற்றை எளிதில் கடத்தலாகும். அப்பால் கடத்தற் கரியதொரு வழியில் மிக்க துயரைத் தருவதான ஒரு தெய்வம் உண்டு. அது வழிப்போவாரை இடுக்கண் செய்வதில்லை. நயவார்த்தை சொல்லிப் போவார் போக்கைத் தடுக்கும். அதனைத் தப்பிச் சென்றால் உடனே மதுரைப் பெருவழி அடுத்துத் தோன்றும்.

"இனி இம்மூன்றில் உங்கட்கு விருப்பமான வழியைப் பின்பற்றிச் செல்லுங்கள். நிலங்கடந்த நெடுமுடி யண்ணலின் திருவடிகளைத் தொழுவேன் என் வழியே போகிறேன்."

அங்ஙனம் வழியின் திறங்களைக் கூறக்கேட்ட கவுந்தி அம்மறையவனை நோக்கி, "ஓய் அந்தணா! ஐந்திர வியாகரணத்தை எங்கள் பரமாகமத்தில் காணலா மாதலால் யாங்கள் புண்ணிய சரவணத்தில் பொருந்துதல் வேண்டா. முற்பிறப்பில் செய்தவற்றை இப்பிறப்பில் காணலா மாதலால், யாங்கள் பவகாரணியில் படிதல் வேண்டா. வாய்மையும் கொல்லாமையும் வழுவா தோம்புவார்க்குக் கடைகூடாதிருக்கும் பொருள் யாதொன்றும் இல்லையாதலால், யாங்கள் இட்டசித்தி எய்துதல் வேண்டா. ஆகவே பிலம்புகுதலான நிமித்தம்

எங்கட்கில்லை. விரும்பிவந்த தெய்வத்தைக் கண்டு அடி பணிதற்கு நீ போக. யாங்கள் எங்கட்கேற்ற நெறியே போவோம்,'' என்றுரைத்துக் கோவலனையும் கண்ணகியையும் அழைத்துப்போய் அற்றைநாள் ஒரு பதியில் தங்கினாள்.

அப்பதியினின்று பெயர்ந்து செல்கின்ற மறுநாளில் கண்ணகியும் கவுந்தியும் வழிநடை வருத்தத்தாலே வழிப் பக்கத்தேயிருந்து இளைப்பாறினர். அப்போது கோவலன் வழியிடையிலுள்ள ஒரு பக்கவழியைக் கடந்துபோய், நீர் வேட்கையொடு ஒரு பொய்கைக் கரையின் பெரிய துறை யிடத்தே நின்றான். நிற்றலும், பார்ப்பான் சொல்லிய வனதெய்வம், வசந்த மாலையின் வடிவுடன் வந்து, அவனடியில் விழுந்து, பொய்யாகக் கண்ணீருகுத்து, மாதவிகூற்றாகக் கொண்டு கூறுகின்றவள், 'மாலையின் எழுதிய ஓலைப் பாசுரத்தில் யான் தவறுடையேனல்லேன். நீ கூறிய வார்த்தையில் சில தவறு உண்டுபோலும். அதனாலன்றோ கோவலன் எனக்குக் கொடுமைசெய்தான்' என்று என்முன்னே மாதவி மயங்கி வீழ்ந்து மிக்க துயரமுற்று,

'மேலோ ராயினும் நூலோ ராயினும்
பால்வகை தெரிந்த பகுதியோ ராயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட் டொழியும்
கணிகையர் வாழ்க்கை கடையே போலும்',

என்று சொல்லிக் கண்ணீர் சொரிந்து, துறவாத என்னை யும் துறந்தாள். நீங்கள் மதுரை நோக்கிச் செல்வதை வழியிலெதிர்ப்பட்டோர் உரைக்கக் கேட்டு, வாணிகச் சாத்தோடு போந்து துயருழந்தேன். இனி நீ அருளிச் செய்யும் வார்த்தை யாது ?'' என்று கேட்டாள்.

இங்ஙனம் இயக்கி நடிக்கக் கண்ட கோவலன், ''மதியை மயக்குவிக்கும் தெய்வம் இக்காட்டில் உண்

டென்று அந்தப் பார்ப்பான் உரைத்தானே. இவள் அந்தத் தெய்வமோ? அல்லது மானிடமகளோ? உண்மையை மந்திரத்தால் அறிவேன்'' எனக்கருதி, அந்தரி மந்திரத்தை உருவிட்டான். அதுகண்டு அஞ்சி அத்தெய்வம், ''யான் இவ்வனத்தில் திரிதரும் இயக்கி; உன்மீது விருப்பங் கொண்டு மயக்கஞ் செய்யப் புகுந்தேன். யான் செய்த இப்பிழையை உன் மனைவிக்கும் கவுந்தியடிகளுக்கும் உரையாதொழிக,'' என்று இரந்து, தன்னிடம் போய்விட்டாள்.

அப்பால் கோவலன் ஒரு தாமரையிலையிலே தண்ணீர் கொணர்ந்து கொடுத்துக் கண்ணகியின் வருத்தத்தைத் தீர்த்தான். சூரிய வெப்பம் மிகுதலாலே அப்பால் வழிச் செல்வது அரிதென்று, மாதவத்தாட்டியான கவுந்தி, கோவலனையும் கண்ணகியையும் அழைத்துக்கொண்டு அயலிலுள்ள ஐயைகோட்டம் அடைந்தாள். கண்ணகி மெய்வருத்தத்தோடே அடிகள் கொப்புளங்கொண்டு வல்லா நடையோடும் பலகால் உயிர்த்தலால், அவர்கள் மேற்செல்லாராய் நோய்தணிய ஐயை கோட்டத்தில் ஒரு பக்கத்தே புகுந்திருந்தார்கள்.

## VII

அப்போது வேட்டுவமகளாகிய தேவராட்டி, நடுவூர் மன்றத்தின்கண், தெய்வத்தன்மையுற்று, மெய்ம்மயிர் சிலிர்த்துக் கையெடுத்தோச்சி அடிபெயர்த்தாடி, ''எயினர் மன்றுகள் பாழ்பட்டன. பகைவரூர்களில் நிரைகள் மிக்கன. மறக்குடிகளான எயினரும் தமக்கு முறைமையாகி வருகின்ற ஆறெறி சூறை ஆகோள் முதலியவற்றால் விளையும் வளம் குன்றி, அறக்குடிகளைப்போல் சினங் குறைந்து செருக்கடங்கி விட்டார்கள். கொற்றவைக்கு உயிர்ப்பலியை உண்ணக் கொடுப்பினல்லது அவள் உங்கட்கு வெற்றிகொடாள். நீங்கள் கள்ளுண்டு களிக்கும் வாழ்க்கையை வேண்டுதிராயின், நமது செல்விக்கு நேர்ந்த கடனைக் கடிதிற் கொடுமின்'' என்று சொன்னாள்.

உடனே வேடர்கள் தங்கள் குடியில் ஒரு குமரியைக் கொற்றவையாக ஒப்பிக்கலுற்று, அப்பெண்ணின் கூந்தலைச் சடையாகக் கட்டி, அம்முடியிலே பாம்பின் குட்டி போல் செய்த பொன்னாணைச் சுற்றி, ஒருபன்றிக்கொம்பை இளம்பிறையாகச் சாத்தி, புலிப்பற்களை நிரைத்த தாலியாகக் கட்டி, புலித்தோலை மேகலையாக உடுத்தி, வயிர வில்லை அவள் கையத்துக் கொடுத்து, அவளைக் கலையின் மீது இருத்தி, பாவையும் கிளியும் கானக் கோழியும் மயிலும் பந்தும் கழங்குங் கொண்டு சேவித்துத் துதித்தனர்.

ஆறெறிபறையும் சூறைச்சின்னமும் துத்தரிக் கொம்பும் குழிக்குழலும் எறிமணியும் கூடி ஒலித்தன. ஏவல் செய்யும் எயிற்றியர் புழுக்கலும் நோலையும் நிணச்சோறும் வண்ணமும் சுண்ணமும் சாந்தமும் பூவும் புகையும் விரையும் கொண்டுவந்தனர். தேவராட்டி அவைகளைப் பலிசெய்து கொற்றவையைத் தொழுதேத்தினள்.

கொற்றவை தேவராட்டிமேல் பொருந்தி, அங்கிருந்த கண்ணகியை நோக்கி, "இங்கிருக்கின்ற இவள்,

"கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்றமிழ்ப்பாவை செய்தவக் கொழுந்து
ஒருமாமணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி"

எனக் கண்ணகிக்கு இனி நிகழ்வனவற்றை மிகுத்துரைத்தாள். இங்ஙனம் புகழ்ந்து கூறியதைப் பொருத கண்ணகி, அத்தேவராட்டி தெய்வமயக்கத்தால் அங்ஙனம் கூறினள் எனக்கருதி, நாணமுற்றுக் கணவனது புறத்தே மறைந்து சிறு நகையோடு நின்றனள். கொற்றவையின் கோலத்தமர்ந்த இளங்குமரி கொண்ட வரிக் கோலம் வாய்ந்ததென்று கண்டார் கூறிக் கொண்டனர். முன்னே அருள்செய்யாத கொற்றவை இப்பொழுது வேடர்க்கு அருள் செய்வாளாயினள்.

வேடர்கள் வள்ளிக் கூத்தாடியும் வென்றிக் கூத்தாடியும் அவிப்பலி கொடுத்தும் பலிக்கொடை நேர்ந்தும் கொற்றவையைப் பரவினர்.

அப்பால் கோவலன், கவுந்தியை அடிதொழுது, "இந்நெறியில் வனசரங்களாலும் ஜலசரங்களாலும் உறுகண் இலது. இந்நாட்டில் இவ்வேனிலில் நம்மை வருத்துவது இவ்வெய்யில் ஒன்றே. கண்ணகி பாவம் மெய்யில் வெய்யில் படப் பொறாள். பருக்கையுள்ள இப் பாலை நெறியிலே அவள் சீறடிபடிகின்றில. ஆதலால் இரவில் வழிநடப்பது நன்று" என்று விண்ணப்பித்தான். அதற்குக் கவுந்தி உடன்பட்டாள். எற்பாடு கழிந்தவளவில் மூவரும் நிலாத்தோற்றத்தை எதிர் நோக்கி யிருந்தனர்.

நிலவு தோன்றினவுடனே கோவலன் கண்ணகியைப் பார்த்து, "இவ்விரவில் நாம் செல்லுகின்ற வழியிலே புலிகள் குறுக்கிட்டுத் திரியும். பேராந்தை குழறும். கரடி இடிக்கும். இவற்றிற்குத் துணுக்கென்னாது வருக" என்று சொல்லி, அவள் கையைத் தன் தோளில் சேர்த்திச் செல்லலுற்றான். கவுந்தியின் அறவுரைகளைக் கேட்டு நடத்தலால் இளைப்புறாமல், பொழுது புலரும் அளவும் அவர்கள் வழி நடந்தனர். பொழுது புலர்ந்த அளவில் ஒரு பார்ப்பனச் சேரியை அடைந்தார்கள். அவ்விடத்துப் பார்ப்பார் வேதமோதலின்றி வரிப்பாட்டுப் பாடும் இழுக்கிய ஒழுக்கம் உடைமையால், அயலில் சேமமுள்ள தோரிடத்தில் கவுந்தியையும் கண்ணகியையும் இருத்தி, காலைக் கடன் கழித்தற்பொருட்டுக் கோவலன் ஒரு பொய்கையை அடைந்தான்.

அங்கே புகாரினின்றும் மாதவி கொடுத்தனுப்பிய ஓலையுடன் வந்த கௌசிகன் என்னும் அந்தணனைக் கோவலன் கண்டான். தன் மனையாள் தன்னுடன் கானகம் போந்து வருவதை எண்ணியெண்ணி உள்

வெதும்பிக் கலங்கிக் கோவலன் நிறம் வேறுபடுதலால், கௌசிகன் அவனை அறிந்திலன். ஆயினும் முகக் குறிப்பால் ஐயுற்று, அவன் குருக்கத்தி படர்ந்த நிழலையுடைய இடத்தில் சென்று, அதனைப் பார்த்து,

"கோவலன் பிரியக் கொடுந்துய ரெய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றிவ்
அருந்திறல் வேனிற் கலர்களைந் துடனே
வருந்தினை போலும்நீ மாதவி" யென்று

உவமையும் தற்குறிப்பேற்றமுமாக உரைத்தான். அது கேட்ட கோவலன், "ஐய, நீ கூறிய கூற்றிற்குப் பொருள் யாது?" என்று அசதியாட, கௌசிகன், "என் ஐயம் அகன்றது. இவன் கோவலனே" என உட்கொண்டு, கோவலனிடம் நெருங்கிக் கூறலுற்றான்:—"உன் இரு முதுகுரவரும் அருமணியிழந்த நாகம்போன்றனர். நெருங்கிய கிளைஞர் உயிரிழந்த உடல்போல் துயர்க்கடலில் அழுந்தினர். உந்தை உன்னைத் தேடிவருமாறு ஏவலாளரை எத்திசைக்கண்ணும் போக்கினான். இராமன் வனநோக்கிச் சென்றபோது அயோத்தியர் போலப் புகார் நகரினர் யாவரும் அறிவு மயங்கினர். நீ திருமுகத்தை மறுத்த மாற்றத்தை வசந்தமாலை சொல்லக் கேட்டு மாதவி படுக்கையில் மயங்கி விழுந்தாள். அவள் துன்புற்றதைக் கேட்டுத் துயரடைந்து நான் அவளைச் சென்று கண்டேன். அவள் 'இணையடி தொழுதேன். இத்துயர் தீர்க்க' என்றுசொல்லி, உடனே ஒரு முகவோலை யெழுதி, 'இவ்வோலையை என் கண்மணி போல்வானுக்குக் காட்டுக' என்று இவ்வோலையை என்கையில் தந்தாள். இதனைக் கைக்கொண்டு, இடைநெறி யெங்கும் திரிந்து தேடியும் உன்னைக் காணுமல் பலதேயங்கள் சென்று அலைந்தேன்." இவ்வார்த்தைகளைச் சொல்லிக் கௌசிகன் ஓலையை நீட்டினான்.

“வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி யன்றியும் குலப்பிறப் பாட்டியோ
டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி”

என்றிங்ஙனம் மாதவி எழுதிய ஓலைப் பாசுரத்தைப் பார்த்து மனங்குழைந்து, “அவள் யாதொரு தீதும் செய்திலள். இஃது என் தீவினைப் பயனே” எனத் தெளிந்து தளர்ச்சி நீங்கினான். பின் கௌசிகனைப் பார்த்து “இவ்வோலையே என் தந்தைக்கும் பொலிவுடைத் தாம் படி வாசகங்களும் பொருளும் பொருந்தியுள்ளது. இருமுது குரவர் மலரடியைத் திசைநோக்கித் தொழுதேன். இவ் வோலையை அவர்க்குக் காட்டுதி. நீ விரைந்து சென்று அவர்கள் இடுக்கணை நீக்குதி,” என்று சொல்லி அவனைப் போகவிட்டான்.

இப்பால் கவுந்தியும் கண்ணகியும் இருந்த இடத்தை அடைந்து, கோவலன் அவர்களுடன் புறப்பட்டு, இடையிற் சந்தித்த பாணர்களுடன் அளவளாவி, “இவ்விடத்திற்கு மதுரை எத்தனைக் காவதம்?” என்று கேட்டான். அதற்கு அப்பாணர்கள் “இனி மதுரை மிகச் சேயதன்று, அண்ணிதே” என்றனர். அன்று ஆண்டுத் தங்கியிருந்து, இரவிடையிலே அங்குநின்றும் புறப்பட்டுச் சென்று வையையாற்றைச் சேர்ந்தனர். உடனே மூவரும் புணையேறி ஆற்றைக் கடந்து அக்கரை சென்று மதுரையின் மதிற்புறத்தில் கீழ்த்திசை வாயிலுக்கு அணித்தான முனிவரிருக்கையில் தங்கினார்கள்.

## VIII

மதுரையில் பாண்டிய குல மன்னர்கள் பன்னெடுங் காலம் ஆட்சிசெய்து வந்தனர். அவர்கள் அறனும் மறனும் ஆற்றலும் மிக்கவர்கள். அவர்கள் மரபாக அணிவது

வேப்பம்பூ மாலை. அவர்கள் கொடி சேல் உருவம் எழுதியது. இக்கதை நிகழ்கின்ற காலத்தில் ஆட்சி செய்திருந்தவன் பாண்டியன் நெடுஞ்செழியன். அவன் மனைவி அறக்கற்புடையாள் கோப்பெருந்தேவி.

வையையாறு பாய்தலால் மதுரை பலவளங்கள் பெருகி விளங்கியிருக்கும். தென்றல் வீசுதலால் வெம்மையின்றி வேனிற்காலமும் தண்ணென்றிருக்கும். வையைக் கரையின் புறவாயெங்கும் குரவும் மகிழும் கோங்கும் வேங்கையும் வெண்கடம்பையும் சுரபுன்னையும் மஞ்சாடி மரமும் மருதமரமும் செருந்தியும் சண்பகமரமும் பாதிரியும் மலர்ந்திருக்கும். புறஞ்சேரியில் ஏரியும் பண்ணையும் கழனியும் சோலையும் தென்னையும் கமுகும் வாழையும் பொருந்தி விளங்கும்.

கட்டுவேலி சூழ்ந்தகாவற்காடும் அதனுள்ளாக அகழியும் சூழ்ந்த மதில்வட்டத்தையுடைய மதுரை யகநகரமானது, இந்திரனுடைய அருங்கலச் செப்பைத் திறந்துவைத்ததுபோல் அழகு விளங்கியிருக்கும். மதில்களின்மீது எந்திரப்பொறிகள் ஏற்றி வெற்றிக்கொடி நாட்டியிருக்கும். மதில் வாயிலில் யவனர் வாள் ஏந்திக் காவல் காத்துநிற்பர். நால்வகை வருணத்தாரும் நால்வேறு வீதிகளில் வசிப்பர். முச்சந்தியும் நாற்சந்தியும் கோயிலங்காடியும் பலிபெறு மன்றிடங்களும் கவர்க்குநெறிகளும் தேர்வீதிகளும் அங்கங்கே பொருந்தியிருக்கும். அங்காடியில் பெரியகடைகளும் இரத்தினக்கடைகளும் பொற்கடைகளும் புடைவைக்கடைகளும் கூலக்கடைகளும் உண்டு. தரகுசெய்வார் நின்றுமிநில்லாது அங்குமிங்கும் திரிதருவர். சிவபெருமான்கோயில் திருமால் கோயில் பலதேவர்கோயில் முருகவேள் கோயில் அறவோர் பள்ளி மன்னன்கோயில் முதலானவை அங்கங்கே பொலிவுற்றிருக்கும்.

காலையில் அரமனையிடத்தும் சிவாலயத்திடத்தும் முரசொலி ஒலிக்கும். அந்தணர் வேதம் ஓதுவிக்கின்ற

ஒலியும் மாதவர்கள் மந்திரம் ஓதும் ஒலியும் ஒருபால் ஒலிக்கும். வாள்வீரர்களுடைய வீரமுரசு ஒருபால் ஒலி செய்யும். போரில் வென்றுகொண்ட யானைகளும்காட்டிற் பிடித்துவந்த யானைகளும் ஒருபால் முழங்கும். பந்தி தோறும் நின்ற குதிரைகள் போர்நினைந்து ஆலிக்கும்.

புறஞ்சேரியில் முனிவரிருக்கையில் வேறிடத்திலே தியானத்தோடிருந்த கவுந்தியைக் கோவலன் சென்று வணங்கி, "சுவாமி, யான் நன்னெறியில் படேளுய் என் மனையாள் துயருரும்படி அறியாத தேயத்தில் அருவழியிடை எங்கும் திரிந்து துன்பம் உழந்து சிறுமை உற்றேன். இவள் உமது பாதக்காப்பில் இருக்குந்தனையும் இவளுக்கு ஏதம் ஒன்றும் இல்லை. இம்மதுரையில் உள்ள வணிகர்க்கு என்னிலை உணர்த்தி யான் கடுக வந்துவிடுகிறேன். விடையருள்க" என்று விண்ணப்பித்தான். அதுகேட்ட கவுந்தி "ஐய, நீ முற்பிறப்பில் நல்வினை மிகவும் செய்தனையேனும், சிறிது தீவினையும் செய்தனை. அதனால் இங்ஙனம் துயருழந்தாய்.

> மறத்துறை நீங்குமின் வல்வினை யூட்டுமென்
> றறத்துறை மாக்கள் திறத்திற் சாற்றி
> நாக்கடிப் பாக வாய்ப்பறை அறையினும்
> யாப்பறை மாக்கள் இயல்பிற் கொள்ளார்.
> தீதுடை வெவ்வினை உருத்த காலைப்
> பேதைமை கந்தாப் பெரும்பே துறுவர்.
> ஒய்யா வினைப்பயன் உண்ணுங் காலைக்
> கையாறு கொள்ளார் கற்றறி மாக்கள்.

இன்பமும் பொருளும், சிறிது இன்பம் பயந்து, பெரிது துன்பம் விளைக்கும்: அறம், சிறிது துன்பம் பயந்து, பெரிது இன்பம் விளைக்கும். இதையறியாமல் இடும்பையெய்தினோர் இன்று உன்னளவினோரல்லர்: முன்னும் பலர் உண்டு. வனத்தில் சீதையைப் பிரிதலால் அருந்துயருற்ற

இராமன் பிரமனைப் பெற்ற பெருந்தகையன்றே? காட்டில் நள்ளிரவில் தமயந்தியை விட்டு நளன் நீங்கியதற்குக் காரணம் முன்செய்த தீவினையன்றே? இராமனையும் நளனையும்போல நீயும் பலவகைத் துன்பம் உறினும் அவர்களைப்போல் மனைவியைப் பிரியாமல், அவளுடன் வாழும் வாழ்க்கையைப் பெற்றனை. இது ஓராற்றான் மகிழத்தக்கதே" என்று தேற்றி, "இனி நீ மனம் வருந்தாமல் நகரிற் சென்று விருந்தெதிர்கொள்வாரிடத்தை அறிந்து வருக" எனப் போகவிட்டாள். கோவலனும், அகநகரிற் சென்று, நகரவளங்களையெல்லாம் கண்டு மகிழ்ச்சியடைந்தவன், சென்ற கருமத்தை மறந்து பெயர்ந்து வந்தான். வந்தவுடனே, மதுரையின் சிறப்பையும் பாண்டியன் கொற்றத்தையும் தவமூதாட்டியிடத்தில் கூறியிருந்தான்.

அப்போது, மாடலன் என்பான் ஓரந்தணன் அத்தவப் பள்ளியை அடைந்தான். அவன் புகார்நகரின் தென்மேற்கில் நான்கு நாழிகை வழியில் உள்ள தலைச்செங்காடு என்னும் ஊரில் வசிப்பவன். பொதியின்மலையை வலம்வந்து குமரியாற்றில் நீராடித் திரும்பித் தன்னூர்க்குச் செல்கின்றவன். வழிநடந்து வந்த இளைப்பு ஆறும்படி அங்குற்றான். அவனுக்கு நட்பாளன் ஆதலால், கோவலன் அவனைக் கண்டவளவில் சென்று வணங்க, அவ்விடத்தில் கோவலனைக் கண்டு துணுக்குற்ற மாடலன் "கோவல, யானறிய இப்பிறப்பிற் செய்தனவெல்லாம் நல்வினையாகவும், நின் மனைவியுடனே போந்து நீ இங்ஙனம் துன்பம் உழப்பது முற்பிறப்பிற் செய்த தீவினைப் பயனன்றே?" என்று வருந்தினான். உடனே கோவலன், "ஒரு கீழ்மகனாலே இம்மதுரைநகரில் கண்ணகி துயரமுற யான் உடுத்த கூறையைப் பிறர் கொள்ளப்பட்டு எருமையேற்றி மீது ஏறவும், அருளுள்ள தபசியர் பெறுதலான வீடுபேற்றை யான் இவளோடு பெறவும், மாதவியானவள் மணிமேகலையைப்

போதியறவோனிடத்தே அளிப்பவும், இன்று வைகறையில் ஒரு கனவு கண்டேன். இக்கனவு நன்றன்று. ஏதோ ஒரு தீங்கு இவ்விடத்தே வரும்'' என்று சொன்னான். அதன்மேல் கவுந்தியும் மாடலனும் ''இத்தவப்பள்ளி துறவிகளுக்கே உரியதாதலால் இல்லறத்தார் இங்கிருத்தல் பொருந்தாது. மாசாத்துவான் மகன் என்றவளவில், மதுரையிலுள்ள வணிகர் உன்னை எதிரேற்றுக்கொள்வர். இனி இவ்விடம் விட்டுப் பொழுது போவதற்குள் மனைவியுடனே மதுரை சென்றடைக,'' என்றுரைத்தனர்.

## IX

அங்ஙனம் உரைக்கையில், இடையர் குலத்தில் மாதரியென்பாள் ஒரு முதுமகள், ஆரியாங்கனை என்னும் இயக்கிக்குப் பாற்சோறேற்றி வழிபாட்டோடு வருகின்றவள், கவுந்தியைக் கண்டு வந்து அடிதொழுதாள். அது கண்ட கவுந்தி,

> " ஆகாத் தோம்பி ஆப்பய னளிக்கும்
> கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை.

இம்மாதரி அழுக்காறும் ஔவியமும் இல்லாள்: மிக்க அளி யுடையாள்: மேலும் முதுமகள். இற்றைக்கு இவளிடம் கண்ணகியை அடைக்கலமாக வைத்தால் யாதொரு தீங்கும் வராது'' என்றெண்ணி, மாதரியைப் பார்த்து உரைப்பாள்;—'' இம்மங்கையின் கணவனது தந்தையின் பெயரைக் கேட்டால், இவ்வூர் வணிகர், அரும்பொருள் பெற்றாற்போல் நல்விருந்தாக எதிர்கொண்டு இவர்களைத் தங்கள் மனையகத்தே வைத்துக்கொள்வர். அங்ஙனம் அவர் மனையகத்துச் சென்று புகுமளவும், இக்கண்ணகியை நான் உனக்கு அடைக்கலமாகத் தந்தேன். இவளை நீராட்டி அலங்கரித்து இவளுக்கு ஆயமகளிரும் செவிலியும் நற்றாயும் நீயேயாய்த் தாங்குக. இவள் இதற்குமுன் அகம் விட்டுப் புறப்பட்டறியாள்.

பாவம். தன்கால் கொப்புளங்கொண்டிருக்கவும், தன் கணவன் வெய்யிலின் வெம்மையால் மெய்வருந்திய தற்கே நடுங்குதுயருற்று நாவும் புலர வாடித் தன்துய ரென வேறு காணாத தகுதி மிக்கவள்.

இன்றுணை மகளிர்க் கின்றியமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்.

நல்லோர்.

வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தன் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு,

என்னும் தருமநூ லுரையை நீ அறியாயோ?

தவத்தோ ரடைக்கலம் தான்சிறி தாயினும்
மிகப் பேரின்பம் தருவது கேளாய் :—

"காவிரிப்பூம் பாக்கத்துப் பட்டினத்துள் பிண்டியின் நீழலில் சாவகர் ஒருங்குகூடியிட்ட சிலாதலத்தின்மீது ஒருகால் சாரணர் தருமோபதேசம் செய்துகொண்டிருந் தனர். அப்போது அவர்கள் முன்பாகத் தேவனொருவன் வந்து நின்றான். தேவர் பலரும் தொழுதலான அவனு டைய தெய்வவடிவத்தில் ஒரு பாகத்துக் கை மாத்திரம் கருவிரற் குரங்கின் கையாக இருக்கக் கண்டு, அறங் கேட்டு நின்ற சாவக ரனைவரும், சாரணரைத் தொழுது, 'இவன் யார்? இங்ஙனம் வந்த வரவின் வரலாறு என்ன?' என்று கேட்டனர். அதற்குச் சாரணர் உரைப் பாராயினர்.

"'எட்டி என்கிற பட்டம் பெற்ற சாயலன் என்னும் வணிகனுடைய மனையில் ஒருநாள் உணவுகொள்ள வந்த ஒரு முனிவனை அவன் மனைவி எதிர்கொண்டு உபசரித் தாள். அப்பொழுது ஒரு கருங்குரங்கு, அவ்வூரில் உணவு

பெறுது துரப்புண்டு அச்சத்தோடு ஒதுங்கிவந்து, அம் மனையில் புகுந்து அம்முனிவன் அடியை அடைந்து, அவன் உண்டொழித்த மிச்சிலும் கைகழுவிய நீரும் அருந்திப் பெரும்பசிதீர்ந்து, முனிவன் முகத்தைக் கனிவோடு பார்த்தது. அதுகண்ட முனிவன் மனமகிழ்ந்து, மனைக் கிழத்தியை நோக்கி, 'இக்குரங்கை நீ நின்மக்களின் ஒரு தன்மையாக ஓம்புக' என்று சொன்னான். அவளும் அங்ஙனமே அதனை ஓம்பிவந்தாள். பின்னர் அக்குரங்கு மரிக்க, அதன் கூறுன பொருளை அம்மனைக்கிழத்தி 'இதன் தீய பிறப்பு அறுக' என்று தானஞ் செய்தாள். அதனால் அக்குரங்கு மத்திம தேசத்து வாரணவாசி யென்னும் நகரில் உத்தரகௌத்தன் என்னும் அரசனுக்கு மகனாய் உருவும் திருவும் உணர்வும் உடையவனாய் உதித் தான். அவன் பெரிய தானசீலனாய் அரசுரிமையில் முப்பத் திரண்டு வருடம் இருந்து, இறந்தபின்பு தெய்வ யாக்கை பெற்றான். சாவகநோம்பிகட்கெல்லாம் 'சாயலனுடைய மனைவி தலைநாளில் செய்த தானத்தாலே இந்த வடிவாயி னேன்: இதனை நீங்கள் அறிமின்' என்று விளங்க அறி வித்தற்கே இத்தேவகுமாரன் இங்ஙனம் தோன்றினான்.'

"அங்ஙனம் சாரணர் கூறிய வார்த்தையைக் கேட்டு அப்பதியிலிருந்தா ரனைவரும், அறத்தின்கண் தலைப்பட்டு வீட்டுலகத்தைப் பெற்றனர். இனி இக்கண்ணகியுடனே போக." இங்ஙனமாக எடுத்துரைத்துக் கண்ணகியைக் கவுந்தி மாதரியுடன் போகவிட்டாள்.

மாதரி, கவுந்தியடிகளைத் தொழுது, கண்ணகியையும் கோவலனையும், உடன்கொண்டு புறப்பட்டாள். நிரை மேய்த்துத் திரும்பும் இடையருடனே பால்சுமந்துவரும் இடைச்சியரும் புறஞ்சூழ்ந்து வர, மதில் வாயிலைக் கடந்து, மாதரி தன் மனையில் புக்காள். தான் குடியிருக்கும் இல் லின் அருகில் கட்டியிருந்த புதிய சிற்றில்லில், அவள் கண்ணகியையும் கோவலனையும் இருக்கச் செய்தாள்.

அவ்வில் கட்டுவேலி சூழ்ந்த காவல் உள்ளது: குளிர்ந்த காவணம் உடையது: செம்மண் பூசியது. உடனே மாதரி சில ஆய்ச்சியருடன் கண்ணகியைப் புதுநீரால் மஞ்சனம் செய்வித்து, "நங்காய், என் மகள் ஐயையை உங்கட்கு அடித்தொழிலாட்டியாக அமைக்கிறேன். ஒன்றற்கும் கவலவேண்டா. உன் கணவருக்கு இனி இவ்விடத்தில் மனக்கவலை உறுதல் உண்டோ?" என்றாள்.

அப்பால் இடைச்சியரை நோக்கி, மாதரி, "கோவலனார் சாவகநோன்பிகளாதலின், இரவுண்ணார். அடிசில் அட்டற்கு நல்ல புதுக்கலங்களை விரையக் கொண்டுவந்து கொடுமின்" என்று கட்டளையிட்டாள். இடுதலும் ஐயை முதலாகிய இடைச்சியர் மடைக்கலங்களோடு பலாக்காய் வெள்ளரிக்காய் கொடுங்காய் மாதுளங்காய் மாங்கனி வாழைக்கனி செந்நெல்லரிசி, பால், நெய் முவலியவற்றைக் கொண்டுபோய்க் கண்ணகியிடம் கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த பசுங்காய்களைக் கண்ணகி அரிவாளில் அரிந்தாள். ஐயை அட்டிலில் வைக்கோலால் எரியூட்டினாள். கண்ணகி தன் கைவல்லமாத்திரம் சோறாக்கினாள்.

அதன்மேல், கண்ணகி, காதலனுடைய அடிகளைக் கழுவி, பனையோலைத் தடுக்கில் இருக்கச்செய்து, தரையில் தண்ணீர் தெளித்து, வாழையிலை இட்டு, அதில் அமுது படைத்து, அமுது செய்தருளுக என்றாள். அவன் அமுது செய்யும்போது, புறத்து நின்ற ஐயையும் தாயும், "இந்த மதுரையில் இவ்வாயர்பாடியில் யாம்பெற்ற இந்நல்லமுதம் உண்கின்ற இந்த நம்பி, அந்த மதுரையில் ஆயர்பாடியில் அசோதை பெற்ற அந்த நல்லமுதம் உண்ணும் கண்ணனேதான்! இவன் துயர்தீர்த்த இந்த நங்கை காளிந்தியாற்றின்கண் மணிவண்ணனைத் துயர்தீர்த்த பின்னைப் பிராட்டியேதான்! என்று உவகை பொங்கி, "இவரழகு நமது கண்களின் அடங்கா" எனப் புகழ்ந்து கூறிக் கொண்டனர்.

அமுது செய்து வாய்பூசி நீருண்டு இனிதிருந்த கோவல னுக்குக் கண்ணகி அடைக்காயும் வெற்றிலைச்சுருளும் கொடுத்து நின்றாள். அவளை வருகவென்று அருகணைத் துக் கோவலன், "எயினர் ஆறலைக்கும் சுரநெறியில் பருக் கையின் மீது அடியிட்டு நடப்பது கண்ணகியால் ஆகுமா என்றெண்ணி எம்முதுகுரவர் என்ன இடும்பை உற்றார் களோ? யாம் இங்ஙனம் உற்றது கனவோ? நனவா மாயின் முன்செய்த தீவினைப்பயனோ? உள்ளம் கலங்குத லால் எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. வீணரோடும் விடரோடும் கூடி, பொச்சாப்புண்டு, நல்லொழுக்கங் கெட்டேன். இனி எனக்கு நற்கதி உளதாகுமோ? இருமுதுகுரவர்க்கும் செய்யும் ஏவலையும் பிழைத்தேன். உனக்கும் சிறுமை செய்தேன். இவ்வொழுக்கம் இழுக்க மென்பது சிறிதும் பார்த்திலேன். யான் இங்ஙனமாகவும், 'மதுரைக்கு வருக' என்றேனாக மறாது என்னோடு ஒருப் பட்டு வந்தாய். பாவம் என்ன காரியம் செய்தாய்!" என இரங்கிக் கூறினான்.

கண்ணகியும், "அறவோர்க்களித்தலும் அந்தண ரோம்பலும் துறவோர்க் கெதிர்தலும் விருந்தெதிர் கோட லும் என்னும் இவற்றை இழந்த யான், நீர் என் முன்பு நில்லாமையான் வந்த வெறுப்பைக் கரந்தொழுகினேன். அதனை உம்முடைய இருமுதுகுரவருங் கண்டு, உள்ளத் தில் அன்பு சிறந்து அருள் கலந்த மொழியால் என் பொறைறயைப் பாராட்டினர். உமது பிரிவையும் அதனால் வந்த ஆற்றாமையையும் யான் நெஞ்சத் தடக்கியிருப்பவும், அவற்றை வெளியிடுவதுபோன்ற என் பொய்நகையைக் கண்டு அவர் வருந்துமாறு நீர் போற்றாவொழுக்கத்தில் மேவியிருந்தீர். ஆயினும் உமது விருப்பின் வழியிலே ஒழுகும் உள்ளவாழ்க்கையை உடையேனாதலால் யான் உடன்பட்டு மதுரைக்கு உம்முடன் போந்தேன்," என்றாள்.

அதன்மேல் கோவலன், "பாவம் நீ தாய் தந்தை முதலிய சுற்றத்தோரையும் குற்றேவன் மகளிரையும் செவிலித்தாய் முதலிய அடியோரையும் ஆயமகளிரையும் நீங்கி, என்னோடு இங்குற்று என் தனிமையைத் தீர்த்தாய்; உன் சிலம்புகளில் ஒன்றைக் கொண்டுபோய் விற்று வருவேன். வருந்துணையும் நீ தனிமையால் வருந்தற்க" என்று சொல்லிக் கண்ணகியைத் தழுவிக்கொண்டான். அருகில் யாவருமின்றி அவள் தனியிருப்பதைக்கண்டு மனம்வெதும்பி, அதனால் பெருகிய கண்ணீரை அவள் காணின் வருந்துவாளென்று அதனைக் கரந்து, சிலம்பைக் கையிற்கொண்டு செல்லலுற்றான்.

X

மாதிரி வீட்டினின்றும் புறப்பட்டு, கோவலன், கண்ணகியை விட்டு நீங்கமாட்டாமையால் மனவருத்தத்தாலே நடக்கலாற்றாது தெருவில் நடந்துசென்றான். அங்ஙனம் சென்றவனை ஓர் இமிலேறு எதிர்த்துப்பாய வந்தது. இடையராயின் அதனை நிமித்த விரோதமென்று அறிவர். அஃதறியானாய் இவன் தாதெருமன்றங்களைக் கடந்து, மாதர் வீதியி னடுவே நடந்துபோய்க் கடைத்தெருவை அடைந்தான்.

அப்போது, உருக்குத் தட்டாரும் பணித்தட்டாருமாகிய நூற்றுவர் பின்வர, அரசவரிசையாகிய சட்டையணிந்து, கையில் கொடிறுபிடித்து, மேன்மக்களைக் கண்டவிடத்து ஒதுங்கி நடக்கும் பொற்கொல்லன் ஒருவன் எதிரில் வந்துகொண்டிருந்தான். "இவன் பாண்டியனால் பெயரும் வரிசையும் பெற்ற பொற்கொல்லன்" எனக் கருதி, கோவலன் அவன் மாட்டணுகச்சென்று, "அரசன் தேவி பூணலாவதொரு சிலம்பு உள்ளது. அதனை நீ விலை மதிக்க வல்லையோ?" என்று கேட்டான். பொற்கொல்லன் "யான் மகளிருடைய அடிக்கலம் விலைமதித்தற்கு அறியே

ஞயினும், வேந்தர்க்கு முடிக்கலம் முதலியன சமைப்பேன் என்று சொல்லிக் கையால்தொழுது புகழ்ந்தான். உடனே கோவலன் சிலம்பினைப் பொதிந்த பொதியை அவிழ்த்துக் காட்டினன். சிலம்பின் தொழிலருமையெல்லாம் ஆராய்ந் தறிந்து, காலதூதனாக வந்த பொற்கொல்லன், "ஐயா, இச்சிலம்பு கோப்பெருந்தேவிக் கல்லது வேறெவர்க்கும் ஏற்றதன்று. இதனை அரசனுக் கறிவித்து யான் வருமளவும் நீர் என் சிறு குடிலுக் கருகான அவ்விடத்தில் இரும்" என்று சொல்லிப் போனன். கோவலனும் பொற்கொல்லனிருக்கைக்கு அயலதான ஓர் அக்கசாலைப் பள்ளியின் மதிலுக்குள்ளே புகுந்திருந்தான். பொற்கொல்லன் "யான் முன்பு வஞ்சித்துக்கொண்ட சிலம்பு என்னிடத் ததே என்று பலருமறிய அரசனுக்கு வெளிப்படா முன்னரே, அதனேடொத்த இச்சிலம்பைக் கொணர்ந்த இப்புதியவன்மீது இடுவந்தியிட்டு, என்மீது உண்டாகும் ஐயத்தை யான் போக்கிக் கொள்வேன்" என மனத்தில் உறுதிகொண்டு அரமனைநோக்கிச் சென்றான்.

அப்போது பாண்டியன் தன் மனைவியின் ஊடலைத் தீர்த்தற் பொருட்டு மனைவியின் கோயிலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். அங்ஙனம் செல்கின்ற அரசனை வாயிற்கடையிடத்தே கண்டவளவிலே, பொற் கொல்லன், அடியில் வீழ்ந்து வணங்கிப் பலகால் துதித்து, "மன்னர் பெருமானே! கையில் கன்னக்கோலும் கவைக் கோலும் இன்றியே காவலரை மந்திரவலியால் துயிலடை வித்து, அரமனையிலிருந்த சிலம்பை அபகரித்துக்கொண்ட கள்வன் அதனை விற்கும்பொருட்டு என்னிடம் விலை மதிக்கவந்தான். அவனை என் சிறுகுடிலகத்திருத்தி அச் செய்தியை விண்ணப்பித்துக்கொள்ள வந்தேன்" என்று கூறினன். அதுகேட்டுப் பாண்டியன், ஊர்காக்கும் காவ லாளரை அழைத்து, "என் மனைவியின் சிலம்பு இவன் சொன்ன கள்வன் கையில் இருப்பின் அவனைக் கொல்லு

தற்கு அச்சிலம்போடே இங்கே கொண்டுவருக,'' என்றுரைக்கலுற்றவன், பழவினை பலிக்கும் காலமாதலால், நன்கு ஆராயாது அறிவுமயங்கி, "அவனைக் கொன்று அச்சிலம்பைக் கொண்டுவருக'' என்று சொல்லிப் போக்கினான்.

பொற்கொல்லனும், தான் எண்ணிய எண்ணம் முடிந்ததென்று கருதி, காவலருடனே கோவலனிடம் குறுகி, "இவர்கள் அரசனேவலால் சிலம்பு காண வந்தனர்'' என்று சொல்லிச் சிலம்பை காட்டுவித்தான். பிறகு அவன் அவர்களிடத்தில் சிலம்பின் அருமையெல்லாம் கூறுவான்போல் அவர்களை வேறாக அழைத்து, அரமனையிலுள்ள தனிச்சிலம்போடே இந்தச் சிலம்பு ஒருதன்மையாக ஒத்திருந்ததென்று பொருந்தச் சொல்லிக் காட்டினான்.

அவன் உரைத்த வார்த்தையைக் கேட்டுக் காவலாளர் "உடலிலக்கணத்தையும் இருந்த முறைமையையும் உற்று நோக்கின், இவன் கள்வனல்லன்'' என்றுரைத்தனர். கொல்லன் அவர்களைப் பார்த்து நகைத்து அவர்கள் மனம் பிரியமாக உடன்படும்படி உரைக்கலுற்றான்.

"மந்திரம் தெய்வம் மருந்தே நிமித்தம்
தந்திரம் இடனே காலம் கருவியென்
றெட்டுட னன்றே இழுக்குடை மரபின்
கட்டுண் மாக்கள் துணையெனத் திரிவது.
மருந்திற் பட்டீ ராயின் யாவரும்
பெரும்பெயர் மன்னனிற் பெருநவைப் பட்டீர்.
மந்திரம் நாவிடை வழுத்துவ ராயின்
இந்திர குமரரின் யாம் காண்குவமோ.
தெய்வத் தோற்றம் தெளிகுவ ராயின்
கையகத் துப்பொருள் காட்டியும் பெயர்குவர்.

மருந்தின் நங்கண் மயக்குவ ராயின்
இருந்தோம் பெயரும் இடனுமா ருண்டோ.
நிமித்தம் வாய்ந்திடி னல்லது யாவதும்
புகற்கி லரும்பொருள் வந்துகைப் புகினும்.
தந்திர கரணம் எண்ணுவ ராயின்
இந்திரன் மார்பத் தாரமும் எய்துவர்.
இவ்விடம் இப்பொருள் கோடற் கிடமெனின்
அவ்விடத் தவரை யார்காண் கிற்பார்.
காலங் கருதி அவர்பொருள் கையுறின்
மேலோ ராயினும் விலக்கலும் உண்டோ.
கருவி கொண்டவர் அரும்பொருள் கையுறின்
இருநில மருங்கின் யார்காண் கிற்பார்.
இரவே பகலே என்றிரண் டில்லை
கரவிடங் கேட்பின் ஓர் புகலிடம் இல்லை''—

எனக் களவுநூற்றுறை கூறிப் பின்னும் ஒரு பொய்க்கரி கூறுகின்றான்.

"முன்னாளில் ஒரு கள்வன் தூதர்கோலத்து வந்து பகற்பொழுதில் நமதரசனது வாயிற்கண் இருந்து, இரவில் மாதர் கோலங்கொண்டு உள்புகுந்து, விளக்கு நிழலிலே மறைந்து போய்ப் பள்ளியறையை அடைந்தான். இந்நெடுஞ் செழியற்கு இளங்கோவாகிய வேந்தன் துயின்றிருந்தானாக, அவன் மார்பில் அணிந்திருந்த வயிரமணி மாலையைக் கள்வன் விரையவாங்கினான். இளங்கோ வேந்தன் துயிலுணர்ந்து, தோளில் மாலையைக் காணானாகி, உடைவாளை உருவினவளவில், கள்வன் வாளின் உறையை கையிலேவாங்கி, அவன் குத்துந்தோறும் வாளிலே உறையைச்செறித்தான். அதற்கு ஆற்றானாய் மற்போராலே கள்வனுடைய வலியைக் காண நினைத்த இளங்கோ வேந்தனுக்குக் கள்வனும் ஆண்டு நின்றதோர் தூணைத் தானாகக் காட்டித் தான் மறைந்து தப்பினான்.''

அவ்வார்த்தையைக் கேட்டு காவலாளரில் ஒருவன் கூறலுற்றான்;—"முன்னாளில் ஒரு சரற்காலத்தில் ஒரு நாள் இரவில் இடையாமத்திருளில் யான் என் காவலிடத்திருந்தேன். ஊரில் அனைவரும் அயன்று துயின்றிருந்தனர். அப்பொழுது ஒரு கள்வன் நீலநிறத்தானையை உடுத்துக் கையில் கடப்பாரையோடு என் அணித்தாகத் தோன்றினான். கொடும்பசியால் ஊனைக் கவ்விவிடாத கடும்புலி போன்று பல கலன்களையும் நச்சிய வேட்கையால் பற்றிய பொருளை விடாது நின்றமை கண்டு, யான் என் கையில் வாளை உறைகழித்தேன். அவ்வாளை அவன் சடக்கென வாங்கினான். அப்பால் அவனையும் என் வாளையும் எவ்விடத்தும் கண்டிலேன். இக்கள்வர் செய்கை எவர்க்கும் அறிதல் அரிது. இவனை நாம் நெகிழவிடின் அரசன் நம்மை ஒறுப்பான். ஆதலால், இனி இதற்குச் செய்யத் தக்கதைத் துணிந்து கூறுமின்."

அவ்வளவிலே அக்காவலருள் அறிவின்மையால் கொலையஞ்சான் ஒரு களிமகன் விரைந்துசென்று வாளால் வெட்டினான். அந்த வாள் குறுக்கே ஊடறுத்தது. கொப்புளிக்கின்ற குருதி குதித்துச் சுற்றிலும் பரக்க, அரசன் செங்கோல் வளைய முன்னைத் தீவினை முதிர்தலாலே, கோவலன் வெட்டுண்டு விழுந்தான்.

நண்ணும் இருவினையும்; நண்ணுமின்கள் நல்லறமே.
கண்ணகி தன்கேள்வன் காரணத்தால்—மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே, பண்டை
விளைவாகி வந்த வினை.

## XI

அன்று வைகறையாமத்தில் மாதரியானவள், அரமனையில் பள்ளியெழுச்சி முரசம் ஒலிப்பது கேட்டு அன்று தனக்கு அரமனையில் நெய்யளக்கும் முறை என நினைந்து, தன் மகள் ஐயையை அழைத்துக் கடைகயிறும் மத்தும்

கொண்டு தயிர்த்தாழி யிருந்த இடத்துச் சென்றாள். சென்றவள், "நாம் பிறையிட்ட தாழிகளில் பாலும் தோயாதொழிந்தன. நமது நிறையுள் ஏறுகளின் கண்கள் நீர் உகாநின்றன. பாலுறையாமையால் முதனாளை வெண்ணெய் உருகவைத்தனவும் உருகுகின்றில. ஆட்டுமறிகள் துள்ளி விளையாடாமல் குழைந்துகிடக்கின்றன. பசுத்திரள் மெய்ந் நடுங்கி நின்று அரற்றுகின்றன. அவற்றின் கழுத்திலுள்ள பெரிய மணிகளும் விழா நின்றன. ஆதலால் நமக்கு வருவதோர் உற்பாதம் உண்டு" என்று சொல்லி, ஐயையின் முகத்தைப்பார்த்து, "ஆயினும் நீ அஞ்சவேண்டா. முன்னர் ஆயர்பாடியில் எருமன்றத்துக் கண்ணன் பலராமனோடு ஆடிய பாலசரித நாடகங்கள் பல உண்டு. அவற்றுள் நப்பின்னையோடு ஆடிய குரவை நாடகத்தை, கண்ணகி காண, யாம் ஆடக்கடவேம். இது இவ்வுற்பாதங்களுக்கு உபசாந்தியாகும். இக் கறவையும் கன்றும் பிணி நீங்குக" என்றாள்.

அப்பால் மாதரி "பின்னையின் தோழியரான ஏழு கன்னியர் ஏழ்வகை ஏற்றை வளர்த்தனர். அவர்கள் வளர்த்த கருத்து அவ்வேறுகளை வலிதொலைத்துத் தழுவி ஏறிச் செலுத்தினவனுக்கே பின்னை உரியளாவள் என்பதாம். இப்பொழுது ஆய்மகளிர் எழுவரை அவ்வேழு கன்னியர்களாகக் கொண்டுநிறுத்திக் குரவையாடலாம்" என்று சொல்லி, அங்ஙனம் எழுவரைத் தேர்ந்துகொண்டாள். அவர்களை யாழ் நரம்புகள் நிற்கும் முறைமைகளில் குடதிசை முதல் நிறுத்தி, அவர்களுக்குக் குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் எனப் படைத்துக்கோட் பெயரிட்டாள்.

அவருள் குரலை மாயவன் என்றாள்; இளியை பலராமன் என்றாள்; துத்தத்தைப் பின்னை என்றாள். மற்றைப் பெண்களைக் கைக்கிளை உழை விளரி தாரம் என்றாள். துத்தமும் தாரமும் மாயவனை குரலைச் சேரநின்றனர்.

பலராமனுை இளியைச் சேரநின்றனர் உழையும் விளரி யும். கைக்கிளை பின்னைக்கு இடப்பக்கத்தும், தாரம் விள ரிக்கு இடப்பக்கத்தும் நின்றனர்.

மாயவனாக நிறுத்தினவள்மேல் துழாய் மாலையை இட்டு, மாதரி மாயவனுக்கு உகப்பானவள் பின்னைப் பிராட்டியே என்று வியந்தாள். அம்மகளிரும் சமநிலை யிலே நின்று கற்கடகக் கைகோத்து மண்டிலமிருந்து அப் பொழுதே ஆடுதலுற்றனர். முதலெண்ணப்பட்ட குரற் றுனத்து நின்ற மாயவனாகிய அவள் துத்தமாகிய பின் னையை நோக்கி, "கொல்லைப் புனத்துக் குருந்தொசித் தவனை முல்லைப் பண்ணாலே பாடியாடக் கடவோம்" என்று சொல்லிப் பாடலுற்றாள் :—

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்று நம்மானுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
இங்கு நம்மானுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ.

கொல்லையஞ் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமேல் அவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ—

* * * *

என்று பாடினர். இதையெல்லாம் கண்டு "மாயவனோடும் அவன் தமையனோடும் பின்னையோடும் கோவலருடைய சிறுமியர்கள் அசோதை தொழுதேத்தத் துவராபதியில் எருமன்றத்தே அன்றாடிய குரவைக் கூத்து மிகவும் பெருமையை உடையதே" என்று மாதரி வியந்தாள்.

அப்பால் குரவைமகளிர், "இக்குரவையுள் உள்வரி வாழ்த்தாக மாயவனை நாமெல்லாம் போற்றுவோம்" என—

கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந் தொசித்தா னென்பரால். க

பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா னென்பரால். உ

முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவில் தோளோச்சிக் கடல்கடைந்தா னென்பரால்— ௩

என்றுபாடி,

அதன்மேல் படர்க்கைப் பரவலாக—

மூவுலகு மீரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே. க

பெரியவனை மாயவனை பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே. உ

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்

தொடர்ந்தா ரணைமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே— ௩

என்று பாடினர்.

எல்லோரும் "இங்ஙனம் நாம் தொடுத்த குரவைக் கூத்தினுள் நாம் ஏத்திய தெய்வம் நமது ஆக்களிடத்துத் தலைப்பட்ட பிணிகளைத் தீர்ப்பதாக. நமது பாண்டியனுடைய முரசம் அரசர் மருள எந்நாளும் மாற்றுரை வென்று முழங்குவதாக" எனச் சொல்லி வாழ்த்திக் குரவை நாடகத்தை ஆடி முடித்தனர்.

குரவையாடி முடிந்தவுடனே மாதரியானவள் வையையாற்றின் கரையிடத்திலே திருமாலடியைப் பூவும் புகையும் புனைசாந்தும் தூவி ஏத்துதற்கு நீராடப் போயினாள். அப்போது ஓரிடைச்சியானவள் உண்ணகரத்துக் கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்டு அதனை அறிவிக்குமாறு விரைவோடு வந்தாள். அங்ஙனம் வந்தவள், கண்ணகியிடம் அச்செய்தியைத் தன் வாக்கால் கூறாது, குரவை முடித்து நீராடிவந்த ஆயர்மகளிரிடம் மறையிற் கூறினாள். அங்ஙனம் அவர்களிடம் கூறி அவர்களோடு தானும் விம்முற்று நின்றவள், கண்ணகியிடம் அதனைச் சொல்ல நாவெழாது நின்றாள். அப்போது கண்ணகி அவளைப் பார்த்து, "தோழீ, என் காவலன் இன்னும் வரக் காண்கின்றிலேன். அதனால் என் நெஞ்சு வருந்தி மயங்காநின்றது. குறிப்பால் இம்மகளிர் பலரும் கூறுகின்றது யாதோ என்றறிகின்றிலேன்" என்றிரங்கினாள். அதற்கு ஐயை "அரமனையின் அந்தப்புரத்திலிருந்த சிலம்பை அபகரித்த கள்வன் கோவலனென்று காவலாளர் அவனைக் கொலை செய்தனர்" என்று கூறினாள்.

அதுகேட்டுக் கண்ணகி பொங்கி யெழுந்தாள்; மறித்தும் விழுந்தாள். கண் சிவப்பக் கையால் மோதிக்

கொண் டழுதாள். பின்பு தன் கொழுநனை "அந்தோ நீ எங்குற்றாய்" என்று வருந்திப் பொருமி மயங்கினவள்,

இன்புறு தங்கணவர் இடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை யிழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ.

நறைமலி வியன்மார்பில் நண்பனை இழந்தேங்கித்
துறைபல திறமூழ்கித் துயருறு மகளிரைப்போல்
மறனொடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப
அறனெனு மடவோய்! யான் அவலங்கொண் டழிவலோ.

தம்முறு பெருங்கணவன் தழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்கும் கவலைய மகளிரைப்போல்
செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறிழைப்ப
இம்மையும் இசையொரீஇ இனைந்தேங்கி அழிவலோ,

என்று தெளிந் திரங்கினாள். பின்பு குரவையாடின மகளிரை நோக்கி, "மகளிரே, நீரெல்லாரும் கேண்மின்" என்று சொல்லி, சூரியனைப் பார்த்து, "இவ்வுலகில் உண்டான பொருளில் நீ அறியாத பொருள் இல்லை. நீ அறிய என் கணவன் கள்வனோ?" என்றாள். அப்போது சூரியன் அசரீரியாய் "நின் கணவனோ கள்வனல்லன். அவனைக் கள்வனென்ற இவ்வூரை எரியுண்ணும்" என்றான்.

## XII

உடனே கண்ணகி, மற்றைச் சிலம்பைக் கையில் ஏந்திக்கொண்டு, ஆயர்பாடியினின்றும் புறப்பட்டு அக நகருள்ளே சென்று, அங்குள்ள மகளிரை நோக்கி, "நீதியில்லாத அரசனது ஊரிலிருந்து வாழும் பத்தினிகளே! என் கணவனுடைய கையிலிருந்த சிலம்புக்கு இணையான சிலம்பு இதோ என் கையில் உள்ளது. உலகிற் பிறந்தார் ஒருவரும் படாத துயரம் யான் பட்டேன்: ஒருவரும் உறாத துயரம் உற்றேன். இங்ஙனம் யான்

உறக்கடவேனோ? இஃதோர் அநியாயம். என் கணவன் கள்வனல்லன்: என் கால் சிலம்பு பெறும் விலை அதிக மாதலால் அதனைக் கைக்கொண்டு விடுதற்பொருட்டு அவனைக் கள்வனென்று ஒரு பெயரிட்டுக் கொன்றார்களே. இது என்ன ஆச்சரியம்! என் கணவனை முன்புபோல் காண்பேனோ? காண்பேனாயின் அது ஒரு புதுமையே. அங்ஙனம் கண்டால், அவன் வாக்கால் சொல்லும் நல் லுரையைக் கேட்பேனோ? கேட்பேனாகில் எனக்கு அஃதோர் உறுதி. அங்ஙனம் நல்லுரையை அவன் வாக் கால் கேளேனாயின் 'நோதக்க செய்தாள்' என்று என்னை இகழ்மின்கள். இது உங்கட்கு ஒரு வாய்ப்பு'' என்று சொல்லி அல்லலூற்று ஆற்றாது அழுதாள்.

அவளை மதுரையாரெல்லாரும் கண்டு, ஆற்றும் வழி காணாராய்த் தாமும் இரங்கி அழுது மயங்கி, "இனி இறக்குமளவும் நீங்காத துன்பத்தை இவளுக்கு உண் டாக்கியவதனால், ஒருகாலும் கோடாத செங்கோல் இன்று கோடியது: இதனால் இனி யாது விளையுமோ? பாண்டியன் அரசியல் அழிந்தது: இதனால் இனி யாது விளையுமோ? செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம் மைக் கெடுத்தற்பொருட்டுப் புதிய பெருந்தெய்வம் இங்கு வந்தது: இதனால் இனி யாது விளையுமோ? இவள் விம்மி விம்மி வாய் விட்டரற்றுகின்றவள் தெய்வமேறி னாள் போலும் தகைமை உடையவளா யிராநின்றாள்: இதனால் இனி யாது விளையுமோ?'' என்று சொல்லி இவள் நிலைமைக்கு வருந்தினர். பல குடிகள் மன்னவன் கோல் கோடின தன்மையால் அவனைப் பழி தூற்றினர்.

வேறு சிலர் கண்ணகியை அழைத்துப்போய்க் கண வன் பட்டவனைக் காட்டினர். அப்பொழுது மாலைப் பொழு தாயிற்று. கண்ணகி அரசன்மேலே யமனுடைய பூசலை விளைக்க, மதுரை ஒல்லென்னும் ஓசையைப் படைத்

தது. காலையில் தன்னைத் தழுவிவந்த கணவன் மாலையில் குருதி புறஞ்சோரத் தன்னைக் காணாது கிடக்கின்ற கடுந் துயரைக் கண்டு, கண்ணகி,

"என்னுறு துயர்கண்டும் இடருறும் இவளென்னீர்
பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ?
மன்னுறு துயர்செய்த மறவினை அறியாதேற்
கென்னுறு வினைகாணா இதுவென உரையாரோ?
யாருமில் மருண்மாலை இடருறு தமியேன்முன்
தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக் கிடப்பதோ?
பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் தவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணா இதுவென உரையாரோ?
கண்பொழி புனல்சோரும் கடுவினை யுடையேன்முன்
புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் கிடப்பதோ?
மண்பதை பழிதூற்ற மன்னவன் தவறிழைப்ப
உண்பதோர் வினைகாணா இதுவென உரையாரோ?

என்றரற்றினாள். "இங்கே,

பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்
கொண்ட கொழுநருறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்?
சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்
ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்?
தெய்வமும் உணடுகொல் தெய்வமும் உண்டுகொல்
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்?

பெண்டிரும் சான்றோரும் தெய்வமும் உண்டாயின் இவ் வநியாயம் பிறவாது. ஆதலால் இவர்கள் இங்கில்லை" என்றழுதாள்.

இவை சொல்லி அழுகின்றவள் மார்போடு மார்புறக் கணவனைத் தழுவிக்கொண்டாள். அவ்வளவிலே கோவ

லன் எழுந்துநின்று "ஐயோ உன் மதிமுகம் கன்றியதே" என்று சொல்லிக் கையால் அவள் கண்ணீரை மாற்றி ஞன். பின்பு கண்ணகி ஏங்கியழுது நிலத்தில் விழுந்து கணவனுடைய அடிகளைக் கைகளால் பற்றிக்கொண்டாள். கோவலனும், சுவர்க்கம் புகுவதற்கு எழுந்தவன், "கண்ணகி நீ இருக்க" என்று சொல்லி, அமரர் குழாத்துள்ளாருய்ப் போஞன்.

அப்போது கண்ணகி, "இங்ஙனம் என் கணவன் எழுந்திருந்து நின்றது மாயமோதான்! அன்றுயின் வேறென்னையோ! என் மனத்தை மருட்டியதோர் தெய்வமோ! ஒன்றும் தெளிகின்றிலேன். ஆதலால் எங்கும் போய் ஆராய்ந்து என் கணவன் இருக்கும் இடத்தை அடைவேன். அது எளிதேயாயினும், எனது மிக்க சினம் தணிந்தபின்பே அது செய்வேன். இச்சினம் தணிதற் பொருட்டு யான் அவ்வரசனைச் சென்று கண்டு என் கணவனைக் கொன்ற இத்தீத்திறம் யாதென்று கேட்பேன்" என்றெண்ணி அரசனிடம் போதற் கெழுந்தாள். எழுந்தவள் தன்னூரிற் கண்ட தீக்கனவை நினைந்து கண்ணீர் சோர நின்றுள். உடனே கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அரமனைவாயிலை நோக்கிச் சென்றுள்.

அப்போது பாண்டியன் மனைவி, தோழியை நோக்கி, "நான் தீக்கனவுகள் பல கண்டேன். ஒன்றில் செங்கோலும் வெண்குடையும் நிலத்து வீழ்ந்தன. ஆசாரவாசலில் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது. தோழீ, இதனுல் என் உள்ளம் நடுங்காநின்றது. ஒன்றில் எட்டுத் திக்குகளும் அதிர்ந்தன: சூரியனை விழுங்கும் இருள் உண்டாயிற்று. மற்றொன்றில் இரவிலே இந்திரவில் இட்டிருந்தது; பகலில் விண்மீன் விழுந்தன. ஆதலால் வருவதோர் உற்பாதம் உண்டு. ஈதெல்லாம் அரசனுக்கு உணர்த்துவோம் வருக" என்றுள். அவ்வளவில் ஏவன்மகளிர் அட்டமங்கலமேந்திச் செறிந்து சூழ்ந்து,

"பாண்டியன் பெருந்தேவிவாழ்க" என வாழ்த்தெடுத்தனர். ஆயமகளிரும் காவற்பெண்டிரும் அடியீடு பரசியேத்தினர். பெருந்தேவியும் சென்று சிங்காதனத்திருந்த அரசனிடத்தில் தனது தீக்கனுத்திறங்களைக் கூறிக்கொண்டிருந்தாள்.

அதே சமயத்தில் கண்ணகி, அரமனை வாயிலை அடைந்து, வாயில்காப்பவனை நோக்கி, "கணவனை யிழந்தாள் ஒருத்தி கையிற் சிலம்பொன்று ஏந்திவந்து வாயிலில் காத்திருக்கிறாள் என்று அரசனிடம் அறிவி" என்றாள். வாயிலோன் சென்று "அரசர் பெருமானே! வாயிலில் ஒருத்தி வந்திருக்கிறாள். அவள் கடாவை வாகனங்கொண்ட கொற்றவையுமல்லள். பிடாரி பத்திரகாளியுமல்லள். மாற்சரியமும் மிக்க கோபமும் உடையவள் போலும். கணவனை இழந்தவளாம். கையில் சிலம்பொன்று ஏந்தி வந்திருக்கிறாள்" என விண்ணப்பித்தான். அதுகேட்ட அரசன் "அவள் வருக. அவளைப் புகுதவிடுக." என்றான். அவ்வளவிலே வாயில் காவலன் சென்று கண்ணகியைச் செல்லவிட்டான். கண்ணகியும் அரசனெதிரில் சென்றுநின்றாள்.

அரசன், கண்ணகியை நோக்கி, "அம்மா, ஏன் கண்ணீர் சொரிகின்றனை? நீ யார்?" என்று கேட்டான். அதற்குக் கண்ணகி, "நான் புகார் நகரில் வாழ்வேன். அவ்வூர்ப் பெருங்குடி வாணிகனான மாசாத்துவான் புதல்வன் கோவலனுக்கு யான் மனைவி. அவன் ஊழ்வினையாலே உனது ஊரில் வந்து எனது காற்சிலம்பொன்றை விலைப்படுத்த விரும்பி உன்னால் கொலையுண்டான். என் பெயர் கண்ணகி" என்று கூறினாள். அரசன் அதுகேட்டு, "மெய்தான். கள்வனைக் கொல்லுவது நீதிதானே" என்றான். கண்ணகி "தீரக் கேட்டறியாமல் கோவலனுக்குக் கொலைக்கட்டளை இட்டமையால் உனது முறைமை கெடுவதாயிற்று. என் சிலம்பின் அரி மாணிக்

கம்'' என்றாள். அரசனும், "இவள் உரைத்தது செவ்விய வார்த்தையே. என் தேவியுடைய சிலம்பின் அரி முத்தே" என்பது உன்னி, இரண்டு சிலம்பையும் வாங்கித் தன் னெதிரில் வைத்தான். மாணிக்கம் உள்ள சிலம்பு தானே விண்டு வாய்முதல் தெறித்தது. அதுகண்ட அரசன் "அந்தோ பொற்கொல்லன் பொய்யுரை கேட்ட யானோ அரசன்? யானே கள்வனுவேன். என் அருமரபு என்னால் பழியுற்றதே. என்னுயுள் இன்றோடு முடிக'' என வருந்தி மயக்குற்று வீழ்ந்திறந்தான். உடனே கண்ணகி தன் கைச்சிலம்பைக் கோப்பெருந்தேவி முன்னே எறிந்தாள்.

அதுகண்ட கோப்பெருந்தேவி. பதைபதைத்து நடு நடுங்கி, "ஐயோ தந்தைதாய்முதலாயினுரை இழந்தார்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டலாம்; கணவனை இழந்தார்க்குச் செய்யலாவது இல்லையே. என் செய்கேன். இரங்கியருளாய்'' என்று ஓலமிட்டுக் கண்ணகியின் இணை யடியில் தொழுது விழுந்தாள். கண்ணகி, "கோப்பெருந் தேவியே, பாவி யான் ஒன்றும் அறியேன். ஆயினும் பிறர்க்கின்னு முற்பகல் செய்யின் தமக்கின்னு பிற்பகல் தாமே வரும்; என்ப. "அல்லவை செய்தார்க் கரங் கூற் றம்'' என்பது பழுதாகுமா? நான் பேர் போந்த பத்தினி கள் பிறந்த பதியில் பிறந்தவள். உண்மையில் யானும் ஒரு பத்தினியேயாகில், ஒழிந்த அரசனோடு மதுரையும் அழிப்பேன். நீ என் பட்டிமையும் காண்பாய்'' என்று சொல்லிக் கோப்பெருந் தேவியை விட்டு நீங்கினுள். கண் ணகி சொல்லிய வீர மொழியை முற்றுங் கேளா முன் னரே கோப்பெருந்தேவி கடுக மரித்தாள்.

அப்பால் கண்ணகி, மதுரையிலுள்ள மகளிரையும் மைந்தரையும் தெய்வங்களையும் முனிவரையும் முன்னிலைப்படுத்தி, "கேளுங்கள். யான் யாதொரு குற்றமுமில்லேன். என் காதலனைத் தவறிழைத்த அரசனது நகரின்மீது கோபமுற்றேன்'' என்றுரைத்து,

வலது கையால் இடது முலையைத் திருகியெடுத்து மும்முறை மதுரையை வலம் வந்து, முலையைச் சுழற்றி வீதியில் விட்டெறிந்தாள். உடனே அக்கினி தேவன், நீலநிறமும் சிவந்த சடையும் வெள்ளிய பல்லுமாகப் பார்ப்பனக் கோலத்துடன் தோன்றி, "மகா பத்தினி! உனக்குத் தவறிழைத்தபோது இந்த மதுரைப் பதியை எரியூட்டுக என்று பண்டே யான் ஓரேவல் பெற்றுளேன். இவ்வூரில் பிழைக்கத்தக்கவர் எவர்? சொல்லுக" என்றுகேட்டான். அதற்குக் கண்ணகி, "பார்ப்பார் அறவோர் பசுக்கள் பத்தினிகள் மூத்தோர் குழந்தைகள் எனுமிவரைக் கைவிட்டுத் தீயோரிடம் சென்றடைக" என்று ஏவினள். ஏவினவளவில் மதுரை அழல்மண்டி எரிவதாயிற்று.

அரசன் கையிலுள்ள செங்கோல் தரையில் வீழ, பெருந்தேவியோடு அரசன் அரியாதனத்தில் துஞ்சியதறியாது, புரோகிதன் கணிதவிவர்த்தகன் தன்மாசனத்துக் கருத்தர்கள் வரியிலார் மந்திரவோலை யெழுதுவோர் முதலானவர்களோடு அரமனையிலுள்ள மற்றோரும் சித்திரத்திரள்போல் ஒன்றும் உரையாது இருந்தனர். பரிக்காரரும் வாதுவரும் தேர்ப்பாகரும் காலாண் மறவரும் அரமனைவாயில் அழல்பற்றி யெரிவதைக்கண்டு மயங்கி அரசனை யுட்கொண்டு நீங்கினர். நகரின் காவல் தெய்வங்களாகிய வருணப்பூதங்கள் நான்கும் தோன்றி, "அரசன் முறை தவறிய நாளில் இந்நகர் எரியுண்ணுமென்பது வரக்கடவதொரு விதியென்று முன்னே அறிந்துளோம். ஆதலின் யாம் நகரைவிட்டுப் போவது இயல்பன்றோ" என்று சொல்லிக் கண்ணகிமுன்னே காவலொழித்தனவாய்ப் பெயர்ந்து சென்றன. கூலமறுகும் கொடித்தேர் வீதியும் நால்வகை வருணத்தார் வீதியும் கலங்கின. அறவோரிடம் அழற்கொடி விடாதாய் மறவோர் சேரியில் எரிமண்டியது. நெருப்பு நெருங்கு

தலாலே பசுக்களும் கன்றுகளும் அறத்தையுடைய ஆயர் வீதியை அடைந்தன. யானைகளும் குதிரைகளும் மதிலின் புரத்தில் ஓடின. படுக்கையிலிருந்த கணவரும்பெண்டிரும் அலங்கோலமாய்ப் புறப்பட்டனர். பெண்டிர்கள் துயில் கொண்டிருந்த மக்களை எழுப்பிக்கொண்டு மாமியார் முதலாயினரோடு உய்யுமிடம் தேடிப் போந்தனர், வரு விருந்தோம்பி மனையறம் வளர்க்கும் இல்லக்கிழத்தியர் மன மிக மகிழ்ந்து, "கணவனை இழந்த இக்கற்புடையாள் சிலம்பால் அரசனை வெல்வழக்காடித் தனது கொங்கையால் விளைத்த பூசல் நியாயமே" என்று சொல்லி அக்கினி தேவனைத் தொழுதனர். கணிகையர் வீதியில் நாடகமாடியிருந்தவர், தண்ணுமை குழல் யாழ் முதலியவற்றோடு ஆடும் அரங்கினை இழந்து, "இவ்வூரில் அரசனைச் சிலம்பால்வென்று இவ்வூரைத் தீயூட்டிய இவள் எந்நாட்டவளோ, யார் மகளோ?" என்று வியந்தனர். நகரமுற்றும் அந்தியில் நடக்கும் விழாக்கள் நடவாமலொழிந்தன. ஆரணவோசை யடங்கியது. தீவேட்டலும் தெய்வ பூசனையும் இல்லையாயின. வீடுகளில் விளக்கேற்றலும் மாலையயர்தலும் அரமனையில் பேரிகை கொட்டலும் அற்றன.

## XIII

இங்ஙனம் பாழ்பட்ட நகரில் காதலனை இழந்த துயரால் உள்ளம் கனல்கொண்டு, உலைக்களத்தில் ஊதும் துருத்தி போல் உயிர்த்து, கண்ணகி தெருவில் சுழன்று திரிவாள்; கவலையால் சிறிதாறு போவாள்; இயங்கலும் இயங்குவாள், மயங்கலும் மயங்குவாள். இந்த வீர பத்தினியின் எதிரிலே, மதுராபதி என்னும் தேவதை, எரியின் வெம்மையைப் பொறுக்கமுடியாமல் வந்து தோன்றினள். இவள் பாண்டியன் குலமுதற் கிழத்தியாதலின், மதுரை எரியுண்டதைக் கண்டு அலமருதலாய், கண்ணகி

யெதிரில் நிற்காமல் பின்னின்று, "நங்காய், என் குறையைக் கூறுகின்றேன் கேள்" என்று சொல்லினுள். அது கேட்ட கண்ணகி, வலப்பக்கமாக முகங்கோட்டி, "நீயார்? எனது துயரத்தை இன்னதென்று அறிதியோ?" என்று கேட்டாள். அதற்கு அத்தெய்வம் உரைப்பதாயிற்று.

"உனது துயரத்தின் காரணத்தை அறிந்துளேன். யான் மாபெருங்கூடல் மதுராபதி என்பேன். உன் கணவன் திறத்தில் மிக்க கவற்சியுடையேன். இப்போது உன்னிடத்தில் ஒரு வார்த்தை சொல்லுதலுடையேன். ஊழ்வினை வந்தபடியைக் கேளாய். உன் கணவனுக்கு இங்ஙனம் நிகழ்ந்த வினைத்திறத்தை கேட்க. இதுகாறும் யான் அந்தணருடைய அருமறையோசையை அல்லது ஆராய்ச்சிமணி யோசையை எப்பொழுதும் கேட்டிலேன். பாண்டியனும் பகைவரைப் பழிதூற்றுவதல்லது குடிகளைப் பழிதூற்றுவானல்லன். காமமீதூர்ந்தவிடத்தும் பாண்டியர்களில் ஒழுக்கந்தவறி நடந்தவர் இல்லை.

"கீரந்தை யென்னும் அந்தணனொருவன், 'அரசன் நீதிமானாதலால் அஞ்சற்க' எனத் தன் மனையாட்டியைத் தேற்றிக் காசியாத்திரை சென்றபோது, அப்பார்பனிக்கு யாதொரு தீங்கும் நேராதபடி அவளை யறியாமல் காத்து வந்த பாண்டியன், அவ்வந்தணன் திரும்பியதை அறியாது உள்ளே ஆணரவம் கேட்பதறிந்து கதவைத் தட்டினான். கதவைத் தட்டினவன் கள்வனோ என்று அந்தணன் அஞ்ச, அவன் மனைவி 'நீர் யாத்திரை போகும்போது அரசனுடைய காவலன்றி வேறு காவலில்லை என்று சொல்லிப் போனீரே. இப்போதும் அரசனுடைய காவல் காவாதோ?' என்றாள். அவ்வார்த்தை கேட்ட அரசன் அந்தணனது ஐயத்தைக் களைதற்பொருட்டுக் கதவைத் தட்டிய தன் கையைக் குறைத்துவிட்டான். அன்னவன் மரபில் பிறந்தவர் இழுக்குதல் இல்லை. இன்னமும் கேள்.

"சோழ நாட்டில் பராசரன் என்போன் வலவவைப் பார்ப்பானொருவன், மாந்தரஞ் சேரலிரும்பொறை என்னும் சேரனது கொடைத்திறங்கேட்டு, அவன்பால் சென்று, மற்றவர்களோடு வாதுசெய்து வெற்றியடைந்து மிக்க பரிசுபெற்று மீண்டு வருகின்றவன், பாண்டி நாட்டில் *திருத்தங்காலூரில் போதி மன்றத்தில் தனது தண்டு குண்டிகை குடை சயித்து முதலியன கட்டிய பொதியை இறக்கிப் பாதக்காப்பை நீக்கி இளைப்பாறியிருந்தான். அவ்வூரில் விளையாடியிருந்த சிறுர்களெல்லாரும் அவனை வந்து சூழ்ந்துகொண்டனர். அவர்களைப் பார்த்து அவன், 'பார்ப்பனச் சிறுர்களே! உங்களை நான் பரீக்ஷிக்கிறேன். கேட்கிற சுருதியைச் சொன்னால் இந்தப் பொதியைக் கொடுத்துவிடுகிறேன்' என்றான். வார்த்திகன் என்பவன் மகன் தக்ஷிணாமூர்த்தி என்கின்றவன், மற்ற பிரமசாரிகள் எதிரில் சந்தம் தவறாமல் உவகையோடு அந்தச் சுருதியை ஓதினான். அவனை வியந்து பராசரன் முத்துப் பூணூல் கடகம் தோடு முதலிய ஆபரணங்களும் கையிற் பொருளும் கொடுத்துத் தன்னூர்க்குச் சென்றான். தக்ஷிணாமூர்த்தி பெற்ற கலன்களைக் கண்டு பொறாதவராகி, இராச சேவகர்கள், 'இராசநீதிக்கு விரோதமாய் இந்தப் பார்ப்பான் களவு பொருளை வெளவினான்' என்று வார்த்திகனைச் சிறைப்படுத்தினர். இதைக்கண்டு அவன் மனைவி கார்த்திகை என்பவள் துன்புற்று நிலத்தில் புரண்டு ஏங்கியழுதாள். அதனால் துர்க்கை கோயிலின் கதவம் திறவா தடைத்தது. இச்செய்தியைக் கேட்ட பாண்டியன், மனமயங்கி, 'என்னரசியலில் ஏதாவது அநீதி நேர்ந்ததோ? துர்க்கைக்குற்ற இடும்பையாவதும் ஆராய்ந்தறிமின்' எனக் கட்டளையிட்டான். அப்போது சேவகர்கள் வார்த்திகனை அழைத்துவந்து உண்மையை

* ஸ்ரீ வில்லிபுத்தூரருகில் பஞ்சக்கிராமிகள் வசிப்பது இப்போது திருத்தண்கால் என வழங்குவது.

உரைத்தனர். அதன்மேல் அரசன் வார்த்திகனை நோக்கி 'இவ்வறிவிலிகள் செய்கை நன்றன்று. இவர்களால் என் இறைமுறை பிழைத்தது. இதனைப் பொறுத்தல் உமது கடன்' என்று சொல்லித் திருத்தங்காலோடு வயலூரையும் பிரமதாயமாகக் கொடுத்து, அம்மறையவனை அடி பணிந்தனுப்பினான். அவ்வளவில் துர்க்கைகோயில் ஊரெல்லாம் ஓசை கேட்பத் தானே திறந்து கொண்டது. உடனே அரசன் 'சிறைப்படு கோட்டம் சீயின், கறைப் படுமாக்களைக் கறைவீடு செய்ம்மின்.

இடுபொரு ளாயினும் படுபொரு ளாயினும்
உற்றவர்க் குறுதி பெற்றவர்க்காம்' என

யானையின்மீது பேரிகை வைத்து அரசநீதி முறைமையை அறைவித்தவன் இந்தப் பாண்டியன்.

"இவன் முறை பிழைத்த காரணமும் கேள். ஆடி மாதத்தில் கிருட்டின பக்கத்தில் கார்த்திகை பரணியோடு கூடிய அட்டமித்தினத்தில் வெள்ளிக்கிழமையில் எரியுண்டலாலே மதுரையும் அரசும் கேடுறும் என்றொரு சோதிட வார்த்தை உண்டு. மேலும்—

"கலிங்க நாட்டில் சிங்கபுரத்தரசன் வசு என்பவனும், கபிலபுரத்தரசன் குமரன் என்பவனும், தாயவேந்தர் ஆதலின் தம்முள் பகைகொண்டனர். ஆறுகாவத அளவான இடை நிலத்தில் எங்கும் இவ்விருவரது மலைவும் வெல்வென்றியும் நிகழுகை காரணமாகச் செல்வோரின்மையால், அவ்வழியாகச் சென்று பொருள் செய்ய விரும்பி, சங்கமன் என்னும் வணிகன், கரந்துறைமாக்களைப் போல ஆபரணங்களைச் சுமந்துபோந்து, தன் காதலியுடன் சிங்கபுரத்துக் கடைவீதியில் அக்கலன்களை விலை செய்திருந்தான். ராஜ சேவகனான பரதன் என்பவன் அவனைப் பகையரசனுடைய ஒற்றனென்றெண்ணிப் பிடித்துக் கொண்டுபோய் அரசனுக்குக் காட்டிக் கொலை

செய்து விட்டான். கொலையுண்ட சங்கமனுடைய மனைவி நீலி யென்பவள், நிலைக்களங் காணுது, 'அரசர் முறையோ பரதர் முறையோ ஊரீர் முறையோ சேரியீர் முறையோ' என மன்றினும் மறுகினும் சென்று பூசலிட்டு, பதினுன்கு நாள் அலைந்து திரிந்து, இறுதியில் ஒரு மலையின் உச்சிமீ தேறிக் கணவனைக் கூடுமாறு உயிரை விடுத்தற்கு நினைத் தாள். அங்ஙனம் நினைத்தவள் 'எமக்கு இத்துன்பம் செய்தோர் மறுபிறப்பில் தாமும் இத்துன்பமே படுவார் களாக' என்று சாபமிட்டிறந்தாள். அப்பரதன் இக் கோவலனுகப் பிறந்தான். அவள் இட்ட சாபம் கட்டிய தாகலின் நீங்கள் இத்துன்பம் அடைந்தீர்கள்.

உம்மை வினைவந் துருந்த காலைச்
செம்மையி லோர்க்குச் செய்தவ முதவாது.

இற்றைக்குப் பதினலாவது நாளின் மாலையில் நீ உன்னு டைய கணவனை வானோர் வடிவிற்கண்டு சேர்வாய்."

இங்ஙனம் உரைத்து மதுராபதியாகிய தெய்வம் கண் ணகியைத் தேற்றி அழல்வீடு கொண்டு சென்றது.

## உரைபெறு கட்டுரை

அன்று தொட்டுப் பாண்டியனுடு மழைவறங்கூர்ந்து வறுமை எய்தி வெப்பு நோயும் குருவும் தொடர, கொற் கையில் இருந்த வெற்றிவேற் செழியன், நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய, நாடு மலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது.

அதுகேட்டுக் கொங்கிளங் கோசர் தங்கள் நாட்ட கத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழைதொழில் என்றும் மாருதாயிற்று.

அதுகேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு என் பான் நங்கைக்கு நாட்பலி பீடிகை கோட்ட முந்துறுத் தாங்கு, "அரந்தை கெடுத்து வரந்தரும் இவள்" என

ஆடித்திங்கள் அகவையின் ஆங்கோர் பாடி விழாக் கோள் பன்முறை எடுப்ப, மழை வீற்றிருந்து வளம்பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று.

அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து "எத்திறத்தானும் வரந்தரும் இவள் ஓர் பத்தினிக் கடவுள் ஆகும்" என நங்கைக்குப் பத்தினிக் கோட்டமும் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தான்.

---

## வஞ்சிக்காண்டம்

## XIV

அதன்மேல் கண்ணகி துர்க்கை கோயில் வாசலிலே தன் கைவளையைத் தகர்த்துவிட்டு, "கீழ்த்திசை வாயிலின் வழியாகக் கணவனோடு மதுரையில் வந்த நாள், இப்பொழுது தனியேனாய் மேற்றிசை வாயிலின்வழியே பெயர்கின்றேன். இனி, கணவனைக் காணுந் தனையும், இருத்தலும் இரேன் நிற்றலும் நில்லேன்" என்றெண்ணி, இரவென்றும் பகலென்றும் பாராமல், வையையாற்றின் கரையையே வழியாகக்கொண்டு சென்றாள். செல்கின்றவள், மேடென்றும் பள்ளமென்றும் கருதாமல், மேற்றிசையே நோக்கிச்சென்று, மலைநாட்டில் திருச்செங்குன்று என்னும் குன்றின்மீது ஏறி, ஒரு வேங்கை மரத்தின் நிழலில் நின்றாள். அக்குன்றிலுள்ள குறத்தியர் "எங்கள் வள்ளியம்மையைப் போல்கின்றீர்! அம்மே நீவிர் யாவிரோ?" என்று கேட்க, "யான் ஊழ்வலியாலே மதுரையும் பாண்டியனும் கேடுற மதுரையில் என் கணவனை இழந்துவந்த ஒரு பாவி" என்றாள். மதுராபதி தெய்வம் உரைத்தபடி பதினாலாநாள் மாலையில் தெய்வ வடிவத்தோடு வந்த கோவலனைக் கண்டு களிப்படைந்து, அவனுடன் விமானத்தில் ஏறினாள் கண்ணகி. தேவர்கள் மலர்மாரி பெய்து இருவரையும் அழைத்துப் போயினர்.

இங்ஙனம் கண்ணகி விண்ணுலகடைந்தது கண்டு, குறவர்கள் "நமக்கு இவளைப்போன்ற குலதெய்வம் வேறில்லை" என்று சொல்லித் தமரை நோக்கி, "சிறு குடியீரே, சிறு குடியீரே, இப்பறம்பின் தாழ்வரையிலே வேங்கைநிழலில் இவளை ஒரு தெய்வமாகப் பண்ணிக் கொள்ளுங்கள். நமது மலையின் வளங்கள் குறையாது மேன்மேல் பெருகுக வென்று இந் நங்கைக்குத் தொண்டகப் பறையும் சிறுபறையும் வாசிமின். கடமாக் கொம்பு வாய் வைம்மின். ஓசை கடிதான மணியை ஆட்டுமின். குறிஞ்சிப்பண் பாடுமின். நறும்புகை எடுமின். மலர் தூவுமின். சுற்றுமதிலிட்டு வாசலும் செய்மின்" என்றனர். அங்ஙனமே செய்து குறவர் கண்ணகியின் பொருட்டு ஒரு குரவைக் கூத்துச் செய்வித்தார்கள்.

அப்போது சேரன் செங்குட்டுவன், மலை வளம்காணுமாறு, தனது தேவி வேண்மாளோடும், தம்பி இளங்கோ வடிகளோடும், தனது தலைநகரான வஞ்சி நகரினின்றும் சேனையுடனே புறப்பட்டு வந்து, மலையடிவாரத்தில் பெரியாற்றின் கரையிலே இடுமணலெக்கரில் இறங்கியிருந்தான்.

அம்மலையில் குரவைக்கூத்தும் கொடிச்சியர் பாடலும் ஓரிடத்தில் நடந்தன. ஓரிடத்தில் வேலன் பாணியும் தினையைக் குறுவார் வள்ளைப்பாட்டும் கேட்டன. புனங்களில் ஒருவரை யொருவர் கூப்பிடுவர். சில இடங்களில் குறவர்கள்ளுண்டு களித்து ஆரவாரஞ் செய்வர். சில இடங்களில் வேட்டையாடுவோர் பறைகொட்டுவர். சில இடங்களில் புலியும் யானையும் பொருதிருந்தன. பரண்களின்மீதிருந்து சிலர் கிளி கடிந்திருந்தனர். இத்தனை ஓசையோடு அரசன் சேனையில் எழுந்த ஓசையும்கூடி எங்கும் பேரோசையாக இருந்தது.

அரசன் வரவை அறிந்த குறவர்கள், யானைத்தந்தம் அகிற்கட்டை வெண்சாமரை தேன்குடம் சந்தனக்கட்டை

சிந்துரக்கட்டி அரிதாரம் ஏலம் மிளகு தேங்காய் மாங்கனி பச்சிலைமாலை பலாப்பழம் வெள்ளுள்ளி கரும்பு பாக்குக்குலை வாழைக்குலை ஆளிக்குட்டி சிங்கக்குட்டி புலிக்குட்டி யானைக்கன்று குரங்குக்குட்டி கரடிக்குட்டி மலையாடு குறும்பாடு மான்குட்டி கத்தூரிக்குட்டி கீரிப்பிள்ளை நாவியின்பிள்ளை மயில் கானக்கோழி கிளி என்பவைகளைச் சுமந்து வந்து காணிக்கையாகக் கொடுத்து, அரசனை "நின்கொற்றம் வாழ்க" என்று வணங்கினர். வணங்கி, "அரசே, இம்மலையின்மீது ஓர் அதிசயம் கண்டோம். வேங்கை மரத்தின் கீழே ஒரு முலை இழந்துவந்து நின்றாள் ஒருமாது. தேவர்கள் கூடி வந்து, அவள் கொழுநனைக் காட்டி, அவளை விண்ணுலகமே கொண்டு சென்றனர். அவள் எந்நாட்டாளோ? யார் மகளோ? அறிகின்றிலேம், நீடுவாழ்க" என்றனர்.

அப்போது அரசனைக் காணுமாறு அங்கு வந்திருந்த சங்கப்புலவரான மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் கண்ணகிக்கு உற்றதையெல்லாம் அரசனுக்கு விளங்கக் கூறினார். சேரமான் அதுகேட்டு, பாண்டியன் இறந்ததற்காக மனம் வருந்தி, "இச்செய்தி எம்மைப்போன்ற வேந்தர்க்கெல்லாம் எடுத்துக்காட்டாயிற்று.

"மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்தின் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கு நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக விலதே,"

என்றான்.

அப்பால் தன் மனைவியை நோக்கி "அறப்பத்தினியாகிய பாண்டியன் பெருந்தேவியும் மறப்பத்தினியாகிய கண்ணகியும் ஆகிய இருவரில் வியக்கத்தக்கவர் யார்? என்று அரசன் கூற, வேண்மாள், "பாண்டியன் துன்பங்

காணாது கழிந்த அவன் தேவி வானிலே திருவுறுக: அது கூறவேண்டா. நமது நாட்டை வந்தடைந்த இப்பத்தினிக் கடவுளைக் கொண்டாடுதல் வேண்டும்" என்றான்.

அப்போது சேரமான், இதற்குச் செய்யத் தக்கது யாது என்னும் குறிப்புடன் அமைச்சரை நோக்கினான். அக்குறிப்புணர்ந்த அமைச்சர், "பொதியின் மலையிலாயினும், இமய மலையிலாயினும் கற்கால் கொண்டு கடவுளைப் பிரதிட்டை பண்ணலாம். இமயக் கல்லாயின் கங்கையிலும், பொதியிற் கல்லாயின் காவிரியிலும் நீர்ப்படை செய்தல் தகுதி" என்றனர். அதுகேட்ட அரசன் "பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு காவிரியில் நீர்ப்படை செய்தல் எமது மரபினர்க்கு இயைந்த செய்கை அன்று. பத்தினிக் கடவுளைப் பிரதிஷ்டை செய்தற்குப் பருவதராஜன் கல் தாரானாயின், பாண்டியனை வென்று பொதியினின்றும் கற்கால் கொள்வேன்" என்றுரைத்தான்.

அதுகேட்டு வில்லவன் கோதை என்னும் அமைச்சன் "முன்னே கொங்கர் செங்களத்தில் சோழபாண்டியர் தோல்வியுற்ற செய்தி உலகமுழுதும் பரவியதன்றோ? கொங்கணர் கலிங்கர் கருநாடர் பங்களர் கங்கர் வடவாரியரொடு தமிழ்ப் படை மயங்கிய செருக்களத்தில் நீ நின்யானையை விட்டபடி என் கண்ணைவிட்டுப் போகாது. உனது மாதாவைக் கங்கையில் நீராட்டிய ஞான்று ஆரிய மன்னர் ஆயிரவர்க்கு நீ ஒருவனாகச் செய்த போர்க்கோலங் கண்டது கூற்றன்றோ? பூமியையெல்லாம் தமிழ் நாடாக்க வேண்டி இமயத்தே கற்கால் கொள்ளக் கருதின், ஏற்பார் எவருளர்? நீ செல்வது கற்கால் கொள்வதற்கே யாதலின் நீ இமயமால் வரைக்குச் செல்லுகின்ற படியை வடபான் மன்னர்க்கெல்லாம் வில்லுக்கயல்புலி எனுமிவற்றை இலாஞ்சனை செய்த ஓலைகளைவரைக" என்றான்.

அதன்மேல் அழும்பில்வேள் எனும் அமைச்சன் "பகையரசருடைய ஒற்றர் பலர் வஞ்சியின் கண் உளர். அவ்வொற்றரே இச்செய்தியைத் தம் அரசர்க்கு அறிவிப்பாராதலின், அதனை இங்கே ஆனைமேல் பறையறைவிப்பதே சாலும்" என்றான்.

## XV

அரசனும் அதற்கு நேர்ந்து வஞ்சிநகரை அடைந்தான். உடனே "எமதரசன் இமயமலையில் ஒரு கற்கால் கொண்டு பெயர்வான். ஆதலால் வடதிசையில் மன்னவர் யாவரும் இடுதிறை கொண்டுவந்து எதிர்க. அங்ஙனம் எதிரேற்றுக் காணீராயின், கடலுட்புக்கும் மலையில் ஏறியும் உறைமின். அங்ஙனம் செய்யாவிடின் துறவை மேற்கொண்டு வாழ்மின்" எனப் பட்டத்து யானைமீது பறையறைந்த ஓசை எங்கும் எழுந்து பரந்தது.

அதன்பின் அரசன் அரியாதனத் தமர்ந்தான். புரோகிதனும் கணிதவிவர்த்தகனும் அமைச்சரும் தண்டத் தலைவரும் கூடி, அரசன் எவ்வெத்திசை நோக்குகின்றானோ அவ்வத்திசையிலுள்ளவர் அவனுக் குரைக்கும் வார்த்தைகளைக் கேட்டிருந்தனர். அப்போது அரசன் தண்டத் தலைவரை நோக்கி, "தமிழ் நாட்டில் தீர்த்தமாட இமயத்தினின்றும் வந்த முனிவர்கள், ஆரிய மன்னராகிய கனகனும் விசயனும் தமிழ் வேந்த ராற்றலறியாத அரசருடன் கூடித் தமிழ்நாட்டரசரை இகழ்ந்துரைத்தனர். அது நம்மிடத்தே கிடப்பதொரு வார்த்தையாயின் சோழ பாண்டியர்க்குப் பலியாது. நம்மிடத்தே கிடந்துவிடின், சோழ பாண்டியரிடத்தில் இகழ்ச்சியும் தரும். ஆதலால் பத்தினிக் கடவுளைப் பிரதிட்டிக்க இமயமலையினின்றும் ஒரு கல்கொண்டு, அதனை அவ்வாரிய மன்னர் தலையில் ஏற்றிக்கொண்டு வருதல் வேண்டும் அது செய்யகில்லாது மீள்வேனாயின், யான் போர்க்கோலங் கொண்ட பகை

யரசரை அச்சுறுத்த கில்லானுய்க் குடிகளை நடுநடுங்கச் செய்யும் கொடுங்கோலரசன் ஒருவனுக்கு ஒப்பாகக் கடவேன்" என்றுரைத்தான். அதுகேட்ட புரோகிதன் "அரச, அவ்வாரிய மன்னர் சோழ பாண்டியரை யல்லது உன்னை இகழ்ந்து கூறினுரல்லர். நீ வஞ்சினங் கூறுதற்கு உன்னுடன் எதிர்க்கும் மன்னரும் உளரோ? ஆதலால் உன் சினம் தணிக" என்ருன்.

உடனே மௌத்திகன் எழுந்து, "இப்போது நடக்கின்ற முகூர்த்தம் அரசர் பலரும் உன்னை அடிபணியத் தக்கது. நினைத்த திசையிலே எழுதற்பாலே, ஓ வெந் திறல் வேந்தே!" என்று கூறினுன். அவ்வார்த்தை கேட்ட அரசன் "நமது வாளும் குடையும் வடக்கு நோக்கி எழுக" என்று ஏவினுன். அவ்வளவிலே வீரர் ஆர்த்தனர்: முரசங்கள் முழங்கின. சேனையும் ஐம் பெருங் குழுவும் எண்பேராயமும் அரசனுடைய கரும வினைஞரும் கணக்கியல் வினைஞரும் தரும வினைஞரும் அரசன் வாழ்க வென்று வாழ்த்தி, பட்டவர்த்தன யானை யின்மீது வாளும் வெண்குடையும் ஏற்றிப் புறநிலைக் கோட்டப் புரிசையில் புகவிட்டு மீண்டு அரசவையை அடைந்தனர். அரசனும் பெரும்படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு வகுத்துத் தான் மணி முடியில் வஞ்சி சூடினுன். அரசர் இடுந்திறையை அழைக்கும் முரசம் காலையில் ஒலித்தலும், சிவபெருமான் திருவடிகளை அருச் சித்து வணங்கிச் சென்னியில் தரித்து, அக்கினி கோத் திரங்களையும் நமஸ்கரித்து, யானையின்மீது ஏறினுன். ஆடகமாடத்தில் அறிதுயிலமர்ந்த பெருமானது சேடங் கொண்டு சிலர் "சேரன் செங்குட்டுவன் வெற்றி பெறுக" என்று ஏத்தினர். அந்த சேடப்பிரசாதத்தைத் தோளில் ஏந்திக்கொண்டு, நாடக மகளிரும் மாகதப் புலவரும் வேதாளிகரும் சூதரும் வாழ்த்தாநிற்க, வீரர்கள் ஏத்த, வஞ்சி நகரத்தில் நின்றும் அரசன் புறப்பட்டான்.

5

தண்டத் தலைவரும் தலைத்தார்ச் சேனையும் சூழ்ந்து வரச் செல்பவன், நீலகிரியை அடைந்து அங்கே தங்கினான். அங்கே சேனையின் பேரொலியைக் கேட்டு, ககன சாரிகளான முனிவர் சிலர், சேரமானைக் காணுமாறு ஆகாயத்தில் நின்றும் இறங்கி, மின்னொளி மயக்கும் மேனியுடனே அரசனை அணுகினர். அவர்களைக் கண்டு அரசன் வணங்கி நின்றான். அவர்கள் "சேரமான்! யாங்கள் பொதியின் மலைக்குச் செல்கிறோம். நீ இமயமலை நோக்கிச் செல்கின்றனை. அம்மலையில் வாழ்வார் சிலர் அந்தணர் உளர். அவர்களை நலியாது காப்பது உன் கடன்" என்று சொல்லி ஆசிமொழி கூறிப்போயினர்.

அப்பால் கொங்கணக் கூத்தரும் கருநாடரும், தங்கள் குலத்துக் கோதிய ஒப்பனைசெய்து, சுருளிருங் குஞ்சியில் ஒலியன்மாலை அணிந்து, காரிகையாரோடு, வேனிலைப் பாடிய பாட்டுடன் தோன்றினர். குடகர்கள், தமது மாதருடன், கார்காலத்தைப் பாடின பாட்டோடு வந்து தோன்றினர். ஏத்தாளர்கள், "வேந்தன் வாள் வினை முடித்து வாழ்க" என்றேத்தித் தோன்றினர். இவர்கள் அனைவரும் ஆடலாசிரியன் காட்டிய முறைமையின் ஏத்தினர். அரசனும், அவர்கள் முன் எப்பொழுதும் கண்டறியாத இருங்கலன்களைப் பரிசளித்தான்.

பரிசளித்திருந்தபோது, வாயில் காவலன், "அரசர் பெருமானே! ஆயிரம் பிரதானருடனே தூதர்த் தலைவனான சஞ்சயன், நாடக மகளிர் ஐம்பத்திருவரோடும் குயிலுவர் இருநூற்றெண்மரோடும், நகை வேழம்பர் நூற்றுவரோடும், தேர் நூறும் யானை ஐந்நூறும் புரவி பதினாயிரமும் இன்ன சரக்கென்று எழுத்துப் படுத்த அரசிறைப் பொதிகள் ஏற்றிய கொல்லாப்பண்டி இருபதினாயிரமும் கொண்டு வாயிலில் வந்துளான்," என்று விண்ணப்பித்தான். அரசன், "நாடகமகளிரும் பிரதானரும் குயிலுவரும் சஞ்சயனுடன் வருக," என்றான். அவ்வளவில்

சஞ்சயன் உள்ளே புகுந்து "அரசரேறே! உனது நட்பாளரான நூற்றுவர் கன்னர் இவர்களை வரக்காட்டி, 'நீ வடக்கண் செல்வது கடவுளெழுத ஒரு கல்லின் பொருட்டேயாயின், இமயத்தினின்றும் கற்கால் கொண்டு அதனை கங்கையில் நீர்ப்படை செய்து யாம் தருவோம்' எனக் கூறினர்" என்றான். என்றபோது சேரன் "ஆரிய மன்னன் பாலகுமாரன் மக்களான கனகனும் விசயனும் தமிழ்வேந்தருடைய ஆற்றலை யறியாத அரசர் சிலருடன் கூடித் தமிழ் வேந்தரை இகழ்ந்துரைத்தனர். அதனால் இச்சேனை சிற்றங்கொண்டு செல்லா நின்றது. இச் செய்தியை நூற்றுவர் கன்னருக்குச் சொல்லி, இச்சேனை கங்கையாற்றைக் கடத்தற்கான மரக்கலங்களை ஆயத்தஞ் செய்விக்க" என்று சொல்லிச் சஞ்சயனைப் போக்கினான். அப்போது, வார்த்தை தப்பாத நாவினரான தன் தூதர்கள், தென்னவர் அனுப்பிய சந்தனமும் முத்துமாகிய திறையைக் கொணர்ந்து நின்றனர். அப்போது அரசன் சொல்லக் கண்ணெழுத்தாளர் திருமுகங்கள் எழுதி இலச்சினையிட்டுத் தென்னவரிடம் சேர்க்கும்படி அவைகளை அத்தூதரிடம் கொடுத்தனுப்பினர்.

அதன்மேல் அப்படை வீட்டில் நின்றும் புறப்பட்டுச் சென்று, கன்னருடைய மரக்கலங்களின் உதவியால் கங்கையைக் கடந்து, சேரன் வடபால் அடைந்தனன். அங்கே அவர்கள் வந்து எதிர்கொண்டு உபசரித்தபின், அவர்களுடைய பதியையும் கடந்து, வடபூமியை அடைந்து பகைவர் நாட்டில் பாசறையில் இருந்தான்.

அங்கே உத்தரன் விசித்திரன் உருத்திரன் பைரவன் சித்திரன் சிங்கன் தனுத்தரன் சிவேதன் முதலான வடபான் மன்னர்கள் கனகவிசயர்க்குத் துணையானவர்கள், தமிழர் ஆற்றலைக் காண்போமென்று, பெரிய சேனையுடன் கனக விசயரோடு ஒத்துவந்து எதிருன்றினார்கள். செங்குட்டுவனும், ஆனைக்கூட்டத்தைக் கண்டு பாய்ந்த

அரிமான் போலே, அச்சேனையை நூழிலாட்டுவதாகத் தும்பைமாலையை முடியில் சூட்டினான். வாய் வறிதிராமையாலே தமிழரசரை இகழ்ந்து, செங்குட்டுவனுடைய சினவலையிற்பட்ட கனகனும் விசயனும் துணையரசரும் தோல்வியடைந்து, சடையும் காஷாய உடையும் தரித்துச் சாம்பல் பூசிச் சைவ சந்நியாசிகளாகவும், பீலியைக் கையிற்பிடித்த சமண சந்நியாசிகளாகவும், பாடுகின்ற பாணர்களாகவும், ஆடுகின்ற கூத்தர்களாகவும் வேடந் தரித்து, வேண்டும் இடங்களில் படர்ந்து சென்றனர். தேவாசுர யுத்தம் பதினெட்டாண்டிலும் இராம ராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும் துரியோதன பாண்டவர்கள் யுத்தம் பதினெட்டு நாள்களிலும் முடிந்தன என்று நூல்கள் கூறும். செங்குட்டுவனும் கனக விசயரும் செய்த யுத்தம் பதினெட்டு நாழிகையிலே முடிந்தது.

பின்பு செங்குட்டுவன், முன் ககனசாரிகள் சொன்ன வார்த்தையை நினைந்து, காற்றூதாளரை "முன்பு ககனசாரிகள் சொன்ன அந்தணர்களை நீர் போற்றிக் காமின்" என்று சொல்லி, வில்லவன் கோதையொடு பல வீரரை ஏவி, இமயமலையினின்றும் கற்கால் கொண்டான். உடனே கனக விசயரைப் பிடிப்பித்து, கற்காலை அவர்கள் முடியில் ஏற்றிப்போந்து, விதிப்படி கங்கையில் நீர்ப்படை செய்தான்.

இப்பால் கங்கையின் தென்கரையில் வந்து, அரமனையும் மண்டபங்களும் பந்தரும் பள்ளியும் பொய்கையும் சோலையும் பொன்புனையரங்கமும் வரிகாண ரங்கமுமாக ஆரியமன்னர் அழகுற அமைத்த வெள்ளிடைப்பாடியிலே சேனையோடு தங்கி, செங்குட்டுவன், போரில் பொருது பட்டோர் மைந்தரையும் படாது பொருதுவென்ற வீரரையும் அழைத்து, பொன்னாற் செய்த வாகைத்தோடுகளை நெடும்பொழுதிருந்து கொடுத்து, ஓலக்கங்கொண்டிருந்தான்.

# XVI

மாடலன் என்னும் மறையோன், கங்கையாடி வருகின்றவன், அப்போது அரசன் திருவோலக்கத்தை அடைந்தான். அடைந்தவன், அரசனைப்பார்த்து, "அரசே வாழ்க. மாதவி பாடிய கானல்வரியானது கனக விசயருடைய முடித்தலையை நெரித்தது" என்று குறிப்புரையாடினான். அரசன் "இங்குள்ள பகைப்புலத்தரசர் பலரும் அறியாத நகைத்திரம் கூறினாய். நீ கூறிய வார்த்தையின் பொருள் யாது?" என்று கேட்டான். மாடலன், "கடல் விளையாட்டில் மாதவி பாடிய வரிப்பாட்டால் கோவலன் ஊடல்கொண்டு, ஊழ்வினை உருத்தெழுதலாலே, உடனே அவளைவிட்டு நீங்கித் தன் பத்தினியோடு மதுரையை அடைந்தான். அங்கே நெடுஞ்செழியன் வானெய்த, கொலைப்பட்ட கோவலன் மனைவி, உன்னோடு புகுந்து வடதிசை மன்னருடைய மணிமுடி யேறினள்" என்று தன் குறிப்புரையை விளக்கினான்.

பின்பு மாடலன் தன் வரலாற்றை உரைக்கலுற்றான்:- யான் பொதியின் மலையை வலங்கொண்டு குமரியாடி மீள்வேன், ஊழ்வினைப்பயனோ என்னவோ அறிகிலேன், மதுரையிற் சென்றேன். அங்கே மதுரை எரியுண்டதும், கவுந்தி உண்ணாநோன்போடு மதுரைவிட்டு நீங்கியதும், மதுரைமாநகர்க் குற்றதுமான எல்லாம் உணர்ந்து, என் பதிக்குச் சென்றேன். மதுரையில் நிகழ்ந்த செய்தியெல்லாம் கேட்டுக் கோவலன் தந்தை கொடுந்துய ரடைந்து, தனது பொருளைத் தானமாகக் கொடுத்துத் துறவியானான். அவன் மனைவி, மகன் கொலையுண்ட துக்கம் பொறாது மிக்க துயரெய்தி இறந்தாள். கண்ணகி தந்தை ஆசீவகர்க்குப் புண்ணியதானம் புரிந்து துறவறங் கொண்டான். அவன் மனைவி மரித்தாள். இதையெல்லாம் கேட்டு மாதவி, தன் தாயை நோக்கி, "நான் நற்றிறம்

படரக்கடவேன். மணிமேகலையைக் கணிகையர் கோலம் காணுதொழிக" என்று சொல்லி, கூந்தலைக் களைந்து விட்டு, போதித்தானம் புரிந்து துறவறம் மேற்கொண்டாள். இங்ஙனம் என்ருல் இத்துயரச் செய்தியைக் கேட்டு இருவர் இறந்தமையின், அந்தப் பாவம் கழிவதற்குக் கங்கையாடப் போந்தேன்.

இதையெல்லாம் செவியேற்றபின், சேரன் மாடலனை நோக்கி, "நெடுஞ்செழியன் இறந்த பின் பாண்டியநாடு என்னுயது?" என்று வினவ, மாடலன் "கொற்கையிலிருந்த இளங்கோவாகிய வெற்றிவேற் செழியன் பத்தினிக் கடவுளுக்கு ஆயிரம் பொற்கொல்லரை உயிர்ப்பலியூட்டிச் சிங்காதனமேறி அரசியல் நடத்திவருகிருன்" என்று கூறினன்.

இங்ஙனம் வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கையில் அன்றைப் பொழுது சாய்ந்தது. மாலைக்கடன் முடிக்கப் புறம்போந்த அரசன், அந்திப்பொழுது செவ்வானத்தில் வெண்பிறை தோன்ற, அதனை உற்று நோக்கினன். அப்போது அரசனுடைய கணியானவன், "நாம் வஞ்சி நகரத்தை விட்டு வந்து முப்பத்திரண்டு மதியம் கழிந்தன" என்ருன். உடனே அரசன் மண்டபமடைந்து, சித்திரவிதானம் கவித்த சிங்காதனத்தின்மேலேறியிருந்து, வாயிலாளரால் மாடலனை அழைத்து, "என் மைத்துனன் பெருங்கிள்ளியோடு பகைத்த இளங்கோ வேந்தர் போரில் இறந்தபிறகு பெருங்கிள்ளியின் கொற்றமும் செங்கோலும் நன்கு நடக்கின்றனவா?" என்று கேட்டான். மாடலன், "சோழகுலத்தவர் செங்கோல் திரிந்து வேருகும் காலமும் உண்டோ? செல்லலுற்ற காலத்தும் அவர்க்குத் தீதென்பதே இல்லை" என்ருன். அப்பால் சேரன் மாடலனுக்குத் தன் நிறையாகிய ஐம்பது துலாம் பாரம் பொன்னைத் தானமாகக் கொடுத்தனுப்பினுன். நூற்றுவர் கன்னரைத் தங்கள் நாட்டுக்கு செல்க

வென விடை கொடுத்தான். அருந்தமிழரசருடைய ஆற்றல் தெரியாது மலைந்த கனகவிசயரை இரு பெரு வேந்தர்க்குக் காட்டி வரும்படி நீலன் முதலிய ஒற்றரை அனுப்பிவிட்டுச் சேனையோடு புறப்பட்டு, தன் தேவி பூரிப்பவும், வலம்புரி முழங்கவும், நகரினர் எதிர் கொள்ளவும் வந்து வஞ்சி நகரத்தில் புகுந்தான்.

வஞ்சியில் தனது கோயிலை அடைந்து மனைவி வேண்மாளுடனும் மற்றவருடனும் அளவளாவியிருந்து, ஒரு நாள் பேரோலக்க மண்டபத்தில் வீற்றிருந்தான். அப்போது நீலன் முதலியோர் மாடலனுடனே வந்து, "தோல்வியடைந்து தாபத வேடம் பூண்டு சென்ற கனக விசயர் முதலியோரைப் பிடித்துக்கொண்டு வந்ததை இகழ்ந்துரைத்தனர் இருபெரு வேந்தரும்" என்றனர். அதைக் கேட்டுச் செங்குட்டுவன் கண் சிவந்து சீற்றம் அடைந்தான். அது கண்ட மாடலன், "அரசரேறே! உன் சீற்றம் அமைக. உன் வாழ்நாள் பெருகுக. வாழி! என் சொல்லை இகழாது கேட்டல் வேண்டும். நீ வையங் காவல் பூண்டு ஐம்பதாண்டுகள் ஆகின்றன. இதுகாறும் அறக்களவேள்வி செய்யாது மறக்கள வேள்வியே செய்து வந்தனை. உனக்கு முன்னும் எத்தனை சேரர்கள் எத்துணைச் சிறப்பு வாய்ந்தவர் இருந்தனர். அவர்களில் இப்பொழுது எவர் உளர்?

மீக்கூற்றாளர் யாவரும் இன்மையின்
யாக்கைநில்லா தென்பதை உணர்ந்தோய்.
மல்லன்மாஞாலத்து வாழ்வோர் மருங்கின்
செல்வநில்லா தென்பதை வெல்போர்த்
தண்டமிழ் இகழ்ந்த ஆரியமன்னரிற்
கண்டனையல்லையோ? காவல் வேந்தே!
இளமைநில்லா தென்பதை எடுத்தீங்
குணர்வுடை மாக்கள் உரைக்கல் வேண்டா.

திருஞெமிர் அகலத்துச் செங்கோல் வேந்தே!
நரைமுதிர் யாக்கை நீயும் கண்டனை.
விண்ணோ ருருவின் எய்திய நல்லுயிர்
மண்ணோ ருருவின் மறிக்கினும் மறிக்கும்.
மக்கள் யாக்கை பூண்ட மன்னுயிர்
மிக்கோய் விலங்கின் எய்தினும் எய்தும்.
விலங்கின் யாக்கை விலங்கிய இன்னுயிர்
கலங்கஞர் நரகரைக் காணினும் காணும்.
ஆடுங் கூத்தர்போல் ஆருயிர் ஒருவழிக்
கூடிய கோலத் தொருங்குநின் றியலாது.
செய்வினை வழித்தாய் உயிர்செலும் என்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரை யன்றே.

யான் பொருள் காரணமாக ஈதெல்லாம் சொல்லலுற்றே னல்லேன். பிறந்திறப்போ ரெல்லாரும் போகும் வழியிலே நீயும் போகுதல் பொறேன். நீ வீடுபேற்றிற்குக் காரணமான இராசசூய யாகத்தைச் செய்யல்வேண்டும்.

நாளைச் செய்வோம் அறமெனின் இன்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்.
இதுவென வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை.

அரசர் அடிபோற்ற நீ வேண்மாளோடும் ஊழியோடூழி உலகங்காத்து நீடுவாழ்க'' என்றான்.

இங்ஙனம் மாடலன் வற்புறுத்தியுரைத்த வார்த்தையைக் கேட்டுச் சிற்றந்தணிதலாய் மனந்தெளிந்த மன்னன், வேள்விக்குறியவற்றை அமைக்குமாறு வில்வலன் கோதையை ஏவினான். ஆரிய மன்னரைச் சிறைவீடுசெய்து, வஞ்சிநகரத்தின் புறத்திலே வேளாவிக்கோ மந்திரத்தில் இருத்தி, "நமது பெருவேள்வி முடிந்தபின் அவர்கள் தம் மூரை அடைக'' என்று சொல்லி, அம்மன்னவர்க்கு

ஏற்பன செய்யுமாறு அம் மந்திரியையே ஏவினான். அழும்பில் வேளையும் ஆயக் கணக்கரையும் "மூதூர்களிலே சிறையோர் கோட்டம் சீமின். கறை கெழுநல்லூரை யாங்கணும் கறைவீடு செய்ம்மின்" என்றேவினான். அப்பால் அவர்களையே "அறக்களத் தந்தணர் புரோகிதன் பெருங்கணி கம்மியர்தம்மொடும் சென்று சிற்பாசாரிகள் பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்தில், கைவினை முற்றிய தெய்வப்படிமத்திலே எல்லா ஆபரணங்களையும் பூட்டி அர்ச்சனை செய்து, திக்கிற் றேவதைகளைக் கடைவாயிலில் நிறுத்தி, ஓமம் உற்சவம் நாடொறும் வகுத்து, கண்ணகியான பத்தினிக் கடவுளைப் பிரதிட்டை செய்க" என்றேவினான். பிரதிட்டை செய்து முடித்த பிறகு விதிப்படி நித்திய பூசை முதலியவற்றை நடத்தும்படி கட்டளையிட்டு அங்கேயிருந்தான்.

## XVII

கோவலன் கொலையுண்ட செய்தியை மாடலன் சொல்லக்கேட்டு, மாசாத்துவான் துறப்பவும் அவன் மனைக்கிழத்தி உயிரிழப்பவும், பெருந்துன்பம் எய்திக் காவற் பெண்டும் அடித்தோழியும் தேவந்தியும் உடன் கூடிக் கண்ணகியைக் காண்டுமென்று மதுரையை அடைந்தனர். ஆங்கு ஊர் எரிப்பற்றி வெந்தபடி கேட்டு, அடைக்கல மிழந்து உயிர் துறந்த மாதரி மனைக்குச் சென்றனர். அவள் மகள் ஐயையோடும் புறப்பட்டு அவர்கள் வைகைக்கரையே வழியாகக் கொண்டுபோய்த் திருச்செங்குன்றின் மீதேறி, கோமகன் தன் கோயிலை அடைந்து, செங்குட்டுவனிடம் தாந்தாம் இன்னரினையரெனத் தத்தம் திறம் உரைத்தனர். அவ்வார்த்தைகளைக் கேட்டிருக்கையில், கண்ணகி தெய்வவடிவத்தோடு தோன்றியதைக் கண்டு, அதிக அதிசயம் அடைந்தான் செங்குட்டுவன். கண்ணகி,

"தென்னவன் தீதிலன் தேவர்கோன் றன்கோயில்
நல்விருந்தாயினான் னானவன் றன்மகள்
வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்
என்னோடும் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்"

என்றாள். எல்லாரும் முறையே மூவேந்தரையும் வாழ்த்தினர். கண்ணகியும் செங்குட்டுவன் நீடூழி வாழ்கவென்று வாழ்த்தினாள்.

அப்புறம் தேவந்தி, தெய்வமுற்று, கூந்தல் குலைந்து பின்வீழ, புருவம் துடிக்க, செவ்வாய் மடித்து எயிறரும்ப, மொழிமயங்க, திருமுகம் வியர்ப்ப, செங்கண் சிவப்ப, கைவிட்டோச்சிக் கால்பெயர்த் தெழுந்தாள்; அங்ஙனம் அவள் மீதுற்ற பாசண்டச் சாத்தன், மாடலனை நோக்கி, தான் இன்னான் என்பது சொல்லி, "இம்மலையின் உச்சியில் ஒரு சுனை உளது. அதில் நீராடினோர் பண்டைப் பிறவியராகுவர். சந்திராதித்தர் உள்ளளவும் அது தன் கடவுட்டன்மை ஒழியாது. அந்நீர் உன்கரகத்துள்ளது. அந்நீரை இப்பெண்கள் மீது தெளிக்க" என்று மூன்று பெண்களைக் காட்டினன், நீரைத்தெளித்த மாத்திரத்தில் அவர்க்குக் கழிந்த பிறப்பு வந்துற்றது. கண்ணகியைக் குறித்துப் புலம்பிய அம்மூவரும், கண்ணகி நற்றாயும் கோவலன் நற்றாயும் மாதரியுமாகக் கண்டு, மன்னன் விம்மிதம் எய்தினான். கண்ணகி நற்றாயும், கோவலன் நற்றாயும், சேரநாட்டில் அரட்டன் என்னும் செட்டிக்கு இரட்டைப் பெண்களாகப் பிறந்திருந்தனர். மாதரி திருவநந்தபுரத்தில் சேடக்குடும்பியன் என்னும் அந்தணன் மகளாகப் பிறந்திருந்தாள்.

"நற்றிறம் புரிந்தோர் பொற்பட யெய்தலும்
அற்பளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்
அறப்பயன் விளைதலும் மறப்பயன் விளைதலும்
பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
புதுவதன்றே தொன்றியல் வாழ்க்கை"

என்று சொல்லி, மாடலன் சேரனைப் பார்த்து, "நீ சிவ பெருமானுடைய அருளிற் றோன்றிப் பூமிபாலனம் செய்பவனாதலால் செய்தவப் பயன்களும் சிறந்தோர் படி வமும் கையகத்தனபோல் கண்டனை. நீ நீடூழி வாழி" என்றான். அதன்மேல் செங்குட்டுவன் பத்தினிக் கடவுளுக்கு நித்தியபூசை செய்யுமாறு தேவந்திக்குச் சொல்லி அக்கடவுளை மும்முறை வலம் வந்து வணங்கி நின்றான்.

அப்பொழுது ஆரியமன்னரும் மாளவ வேந்தரும் இலங்காபுரத்தரசனான கயவாகுவும் அங்குற்று, "எங்கள் நாட்டில் யாங்களும் இச்சேர மன்னனைப்போல் உனக்குச் செய்யும் பூசையில் நீ எழுந்தருளி எங்களுக்கு அருள் புரிய வேண்டும்" என்று வரங்கிடப்ப, "அங்ஙனமே வரம் தந்தேன்" என்று ஒரு குரல் எழுந்தது. அதனைக் கேட்ட செங்குட்டுவனும் ஏனை அரசரும் மிக்க களிப்படைந் தனர். பின்பு செங்குட்டுவன் மாடலனோடு யாகசாலைக் குச் சென்றான்.

அதன்பின் இளங்கோவடிகள் அக்கோட்டத்தின் கண் அடைந்தார். பத்தினித் தெய்வம் தேவந்திமேல் தோன்றி, "உன் தந்தையாகிய சேரலனிடத்தே நீ இருக்க, ஒரு நிமித்திகன் வந்து உன்னைப் பார்த்து, 'உன் னிடம் அரசு வீற்றிருக்கும் இலக்கணம் உண்டு' என்று சொன்னான். சொல்லவே, 'என் தமையனாகிய செங்குட் டுவன் இருக்க, இவ்வாறு முறைமை கெடச் சொன்னாய்' என்று அந்நிமித்திகனை வெகுண்டு நோக்கிக் குணவாயிலி டத்துத் துறந்திருக்கின்ற கடவுளாக வந்தாய். இராச்சிய பாரத்தை விட்டு நீங்கிச் செங்குட்டுவனுக்கு அகலிடப் பாரம் சுமத்தலின் துன்பம் வராதபடி மோக்ஷமாகிய இராச்சியத்தை ஆளக்கடவ வேந்தன் அல்லையோ" என முன்பின் நிகழ்ந்ததும் மேல் நிகழ்வதுமாகிய திறங்களைக் கூறியது.

இச்சரிதங் கேட்ட நல்வீர் !

பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்.
தெய்வந் தெளிமின்: தெளிந்தோர்ப் பேணுமின்.
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்.
ஊனூண் துறமின். உயிர்க்கொலை நீங்குமின்.
தானம் செய்ம்மின். தவம்பல தாங்குமின்.
செய்ந்நன்றி கொல்லன்மின். தீநட் பிகழ்மின்.
பொய்க்கரி போகன்மின். பொருண்மொழி நீங்கன்மின்.
அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்.
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்.
பிறர்மனை அஞ்சுமின். பிழையுயிர் ஓம்புமின்.
அறமனை காமின். அல்லவை கடிமின்.
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்.
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா.
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது.
செல்லுந் தேளத்துக் குறுதுணை தேடுமின்,

என்கின்றனர் இளங்கோவடிகள்.

# APPENDICES

THE following appeared as a leader in *The Hindu* in the early 'nineties of the last century:—

We have read with great pleasure a small pamphlet by the Hon'ble Mr. P. Coomarasamy of Ceylon, giving in English an account of the author, the date and the contents of the ancient and important Tamil work called *Chilappathikaram.* Tamil Pandits value it as a rare work of great antiquity. It has been preserved from being utterly lost to the world by the labour of Mr. Swaminatha Aiyar, the well-known Tamil Pandit of the Kumbaconam College, who printed and published it for the first time at the inducement of Mr. Coomarasamy. To the Tamil population of Ceylon it has special interest, because it is the only Tamil work of any antiquity that refers to Ceylon after the period of Ravana, and because, we are informed by the author, it is the only work which records the history of *Pattini,* the heroine of the poem, whose worship is largely prevalent in the Island.

The author of *Chilappathikaram* was the younger son of a Chera king, who renounced the world and became a *Muni.* The date of this poem is traced to the first century of the Christian era.... This poem speaks of a king of Ceylon, called Gajabahu, who was on a visit to the Chera kingdom, and that on his return he introduced into Ceylon the worship of *Pattini.* Now, in the *Mahavamsa,* the native annals of Ceylon, only two kings of this name are mentioned, one believed to have reigned about A.D. 109, while the other king of the same name reigned in 1142. It may, therefore, be safely concluded that *Chilappathikaram* was written more than eighteen centuries ago, a conclusion in which

another great Tamil scholar, Mr. C. W. Thamotharam Pillay, agrees.

The incidents narrated in the poem are few and simple. On the eastern coast of Southern India, where the Kaveri meets the Indian Ocean, was situate Pukar, *alias* Kaverip-pumpattinam, beloved of King Karikalan. In this city lived two merchant princes, Mahasattuvan and Manayakkan. It was arranged between these two that Kovalan, the son of the former, should be married to Kannaki, the daughter of the latter. The marriage was celebrated with the pomp and ceremony befitting the wealth and rank of the parents; and the bridegroom of sixteen and the bride of twelve lived together happily for some years in a house built for them by Kovalan's mother. Kovalan unfortunately fell into the toils of a *danseuse*, Madavi by name, deserted his home and wife, and spent some years with her, losing all his immense fortune. Repenting eventually, he returned to his lonely wife and proposed that they should travel to Madura, the capital of the Pandiyas, and sell Kannaki's priceless anklets, and with the proceeds thereof retrieve their lost fortune by trade. The faithful wife, always obedient, agreed, and after several adventures in the course of a journey of many days they reached Madura. Leaving his wife in the house of a shepherdess, Kovalan paced the streets of Madura, with the view of selling one of her anklets. He met a goldsmith and showed him the anklet. The goldsmith, who was a thief of the first water, and who was already under suspicion of having stolen an anklet belonging to the Queen of Madura, desired Kovalan to remain where he was, promising to mention to King Pandiya that the anklet, which was only fit for a queen, was for sale. The villain went at once to the palace and in- formed the king that he had discovered the thief who had stolen the queen's anklet. The king, without

inquiry, ordered his guards to behead Kovalan if he was in possession of the queen's anklet, and he was accordingly beheaded. Kannaki, having heard of this calamity, proceeded to the palace, taxed the king with injustice, and complained that her husband had been beheaded without any investigation; and her transcendent virtue caused a part of Madura to be burnt down. Fourteen days after her husband's death she herself ascended the heavens.

The poem consists of three parts: In Chapter I of the first part, *Mankala valttuppadal*, it states that the guests at the wedding of the hero and heroine were invited in a way now rare even amongst princes in India. Maidens were sent out on elephants to invite the guests, and the commentator says that it was then the usual mode of invitation. Another custom, now unusual, is mentioned at the conclusion of the marriage. The assembled women, after blessing the bride and bridegroom, prayed that their king might ever be prosperous. At the present time among Hindus this is not usual in private ceremonies, though in their temples blessing the ruling sovereign takes place on festival days. In the second Chapter (II), *Manaiyaram-padutha Kathai*, is related the daily life of Kovalan and Kannaki, and amongst other things it is there stated that the merchants of the city were also ship-owners, *kalam* being used to denote ships. In the next Chapter (III), *Arankettu Kathai*, is given a full and interesting description of a dancing girl, the qualities and qualifications of a dancing master, music teacher, singing master, the player on wind instruments, the musical instruments then in use, and the different modes in the music of that time; and the learned commentator of the poem, Adiyarkunallar, gives a full commentary on these matters. The fourth Chapter (IV) is entitled 'The Beauty of Evening,' and gives a

description of sunset, moon rise, the loves of Madavi and Kovalan, and the sorrow of Kannaki at her separation from her husband. The fifth Chapter (V) deals with the celebration of the worship of Indra. A beautiful description of Pukar,—the chief seat of Government of the Cholas at the time,—its buildings, busy streets, the foreign merchants and their ways, the sellers of perfumes and flowers, embroidery workers in silk, cotton, and rat furs, follows. Mention is also made of the different kinds of food used, amongst them *pittu* and *appam*, not unknown now to our European residents. Toddy was sold by the women of the lowest caste, as also was fish; and *vettilai*, 'the betel leaf,' then, as now, universally used in India and Ceylon, is also mentioned. The sixth Chapter (VI), entitled' Sea-bathing,' describes how the inhabitants, from the prince down to the peasant, proceeded on stated occasions to the sea, and how they spent their day after sea-bath. It also describes the scents, ointments and cosmetics, jewellery, and other paraphernalia used by the fair sex of the time. The seventh Chapter (VII), *Kanalvari*, is one of the most interesting parts of the poem to Tamil scholars. It contains the songs said to have been sung by Kovalan and Madavi at the riverside, in various metres, in praise of the king, river Kaveri, the city of Pukar, and on other subjects. The rhythm and sweetness of the several songs can only be appreciated by those who are well versed in Tamil, and are certainly not excelled in any other literature. It is here that Kovalan and Madavi finally separate from each other, each believing, but without cause, the other to have been unfaithful. In the opening lines of the eighth Chapter (VIII), *Venil Kathai*, reference is made to an incident in the physical history of Southern India, which is not known to European scholars. The southern boundary of Tamil India thousands of years ago

seems to have been a river named Kumari, and in the time of the Pandiyan king, Jayamakirtti, *alias* Nilantarutiruvir Pandiya (the prince in whose reign *Tolkappiyam* attained its highest fame), the sea is said to have invaded a large part of South India, and the river Kumari with much land south of it was submerged in the sea which now washes the shores of Cape Comorin. This chapter also mentions four cities 'Madura, Urantai, Vanchi and Pukar, as having been royal residences. It also gives in detail the mode of playing on the musical instruments called the *yal* or *vinai*. The ninth Chapter (IX) gives an account of Kannaki's dream foreshadowing the death of her husband, the arrival of her husband, their reconciliation, and, 'old fate forcing, they set out before sunrise' to Madura to sell the anklets.

The next two parts, consisting of twenty chapters, relate their travel to Madura, the death of Kovalan, the destruction by fire of Madura, the end of Kannaki's earthly life and her worship by the several princes already mentioned. Temples were built for her and daily sacrifices were made for her in Southern India and Ceylon. Kannaki was worshipped in the name of *Pattini*, which means a faithful wife.

This poem contains reference to human sacrifice, for we read that when the Pandian kingdom suffered from want of rain and when famine and poverty prevailed therein, on account of the unjust execution of Kovalan instead of the real thief, the goldsmith, the king sacrificed 1,000 goldsmiths to Pattini and celebrated her worship, whereupon rain fell and the land was freed from poverty and disease. Hearing this, it is said, other Indian kings and the king of Ceylon similarly worshipped *Pattini*.

## II

The following is from

### பதிற்றுப்பத்து.

#### ஐந்தாம்பத்து—பதிகம்.

வடவர் உட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்,
கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவில் கானம் கணையிற் போகி
ஆரிய வண்ணலை வீட்டிப் பேரிசை
இன்பல் அருவிக் கங்கை மண்ணி
இனந்தெரி பல்லான் கன்றொடு கொண்டு,
மாறா வல்வில் இடும்பிற் புறத்திறுத்
துறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி,
அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து,
பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முரரை முழுமுதல் துமியப் பண்ணி,
வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தல் முரற்சியால்
குஞ்சர வொழுகை பூட்டி, வெந்திறல்
ஆராச் செருவில் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து,
நிலைச் செருவின் ஆற்றலை அறுத்துக்
கெடலருந் தானையொடு,

கடல்பிறக் கோட்டிய செங்குட் டுவனைக் கரணமமைந்த காசறுசெய்யுட் பாணர் பாடினார் பத்துப்பாட்டு.

பாடிப்பெற்ற பரிசில்,—உம்பற்காட்டு வாரியையும் தன்மகன் குட்டுவன் சேரலையும் கொடுத்தான் அக்கோ.

கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் ஐம்பத்தை யாண்டு வீற்றிருந்தான்.

'கடவுட் பத்தினி' என்றது கண்ணகியை.

'இடும்பில்' என்றது இடும்பாதவனத்தை. புறம்—அவ்விடம்.

'வாலிழை கழித்த பெண்டிர்' என்றது அப்பழையன் பெண்டிரை.

'கூந்தல் முரற்சி' என்றது அவர் கூந்தலை அரிந்து திரித்த கயிற்றினை.

குஞ்சரவொழுகை பூட்டியது அப்பழையன் வேம்பினை ஏற்றிக்கொண்டு போதற்கு.

'குடிக்குரியோர்' என்றது அரசிற் குரியாரை.

"சேரலாதற்குச் சோழன்றன்மகள் நற்சோணையீன்ற மக்களிருவருள் முன்னோன்" என்பர் அடியார்க்கு நல்லார்.

III

The following extract is from Adiyarkkunallar, the commentator of *Chilappathikaram*, page 18:—

குன்றம்.—கொடுங்கோளூர்க்கு அயலதாகிய செங்குன்று என்னும் மலை. அது திருச்செங்கோடு என்பர் அரும்பதவுரை ஆசிரியர் எனின், அவர் அறியார். என்னை? அத்திருச்செங்கோடு* வஞ்சிநகர்க்கு வட கீழ்த்திசைக் கண்ணதால் அறுபதின் காதவாறு உண்டாகலானும், அரசனும் மனைவியும் மலைகாண்போம் என்று வந்துகண்ட அன்றே வஞ்சி புகுதலானும் அது கூடாமையின் என்க.

The following are from 'Cheran Chenkuttuvan,' by Mr. M. Raghava Aiyangar (Tamil Pandit, Lexicon Committee):—

சேரரது தொன்றுதொட்ட ராஜதானி வஞ்சிமாநகரம். இவ்வஞ்சிக்குக் கரூவூர் என்பது ஒரு பழம்பெயர்.

* இது சேலம் ஜில்லாவிலுள்ளது.

இந்நகரம் (அமராவதி) ஆன்பொருநையாற்றின் கரையில் உள்ளது. அவ்வாறு வடமொழியில் ஆம்பிராவதி என வழங்கும் (ஆம்பிரம்—மாமரம்). சூதநதி (சூரம்-மா) என்றும் இதற்கொரு பெயர் பிங்கல நிகண்டில் கூறியிருக்கிறது. இந்நதி வராகமலையில் பிறந்து மாமரச் சோலை வழியே செல்லுதலால் இப்பெயர் பெற்றது. இந்நகரத்தின் தென்றிசையில் நதிக்கரையிலுள்ள துர்க்காதேவிக்கு வஞ்சியம்மன் என்கிற பெயர் இன்றும் வழங்கி வருகிறது. அவ்வூர் அரங்கநாதப் பெருமாள் கோயிற் கர்ப்பக்கிரகத்தில் உள்ள சாசனத்தில் "வஞ்சி......ஸ்ரீ வைஷ்ணவரோம்" என வருகிறது. இந்தக் கோயிலே ஆடகமாடம் என்பது.

வஞ்சியைக் கருவூராகக்கொள்ளாது மலைநாட்டுக் கொடுங்கோளூர் அல்லது திருவஞ்சைக்களம் என்று அடியார்க்கு நல்லார் கொள்வது வியப்பு. திருவஞ்சைக்களம் கொச்சிக்கு வடக்கே 10 மைல் தூரத்தில் பெரியாறு மேற்கடலில் சங்கமமாகுமிடத்து உள்ளது. வஞ்சியை மேற்குத் தொடர்ச்சிமலை யடிவாரத்துப் பெரியாற்றங்கரையிலுள்ள திருக்கரூர் என்று கொள்வாரும் உளர். கருவூர் என்ற பெயர் கொடுங்கோளூர் அல்லது திருவஞ்சைக்களத்துக்கு உள்ளதாகப் பிரமாணம் ஒன்றும் இல்லை. "வஞ்சுளாரணியம் வஞ்சி கருவூர்" என்பது கருவூர்ப் புராணம். பழைய ரோம சக்கரவர்த்திகளாகிய அகஸ்டஸ் டைபீரியஸ் க்ளாடியஸ் முதலியோர் நாணயங்கள் இக்கருவூர்ப் பக்கத்தே 1806 வருஷத்துக் கண்டெடுக்கப் பட்டிருப்பதாகத் தெரிய வருவதும் இதன் பழமை பெருமைகளை நன்கு விளக்குவதாம்.

சங்கக்காலத்துக்குப் பின்னர்ச் சோழராற்றற்கு அஞ்சிய சேரர் வஞ்சியை விட்டு நீங்கித் தங்கட்குரிய மலைநாட்டில் கடற்கரையிலுள்ள கொடுங்கோளூரைத் தலைமை நகரமாகக் கொள்ளலாயினர்.

செங்குன்று கருவூர்க்கு வெகுதூரத்தில் உள்ளது. இது இப்போது செங்குன்றூர் என்று மலைநாட்டில் அகலப்புழைக்குத் தென்கிழக்கிலும் கோட்டயத்துக்குத் தெற்கிலும் உத்தேசம் 20 மைல் தூரத்துள்ளது.

IV

The following are extracts from *The Tamils, Eighteen Hundred Years Ago*, by the late V. Kanakasabhai Pillai (1904):—

It is the general opinion of Western scholars that there was no Tamil literature before the ninth century A. D. But the fact appears to be that all that was original and excellent in the literature of the Tamils was written before the ninth century, and what followed was, for the most part, but a base imitation or translation of Sanskrit works. From a careful study of ancient Tamil poems, I am led to think that some of the earliest works were undoubtedly composed more than two thousand years ago, and that the Tamil people acquired wealth and civilization at this early period by their commercial intercourse with foreign nations, such as the Arabs, Greeks, Romans and Javanese. With the advance of their material prosperity, there was a sudden stimulus to their literary activity. The Augustan period of Tamil literature was, I should say, in the first century of the Christian era; and the last college of poets was then held in Madura in the court of the Tamil king, Ugra Pandya. The works of not less than fifty authors of this period have come down to us. These poets were of various castes, various religious persuasions, and belonged to different parts of the Tamil country. Some were Nigranthas, some Buddhists, and some of the Brahmanic faiths. There were kings, priests, merchants, doctors, farmers, and artisans among their number.

The information afforded by these poems, regarding the religion and social customs of the Tamil people, would alone

guide us to fix the probable date of this literature in the earliest centuries of the Christian era. For, we find from them that there were Buddhists in the Tamil country, but they had set up no images of Buddha and had no priests; there were Nigranthas who called the Buddhists heretics, but who had not commenced the worship of their Saints or Tirthankaras; there were temples dedicated to Siva, Vishnu, and Subrahmanya, but there were also other shrines in which the worship of Indra and Baladeva was continued; there were Brahmans who wore the sacred thread and called themselves the 'twice-born,' but neither kings nor merchants sought this distinction; there were Tamils living in walled towns and cities, but in some parts of the country they led the life of nomads and had no settled habitation. An additional proof of the antiquity of the poems above mentioned may be adduced from the fact chat the chief towns and seaports and the foreign merchandise of the Tamil country, as described in these poems, correspond exactly with those given in the works of Pliny, Ptolemy and in the Periplus Maris Erythræi. Pliny died in A.D. 79; and had completed his Natural History two years previously. The unknown author of the *Periplus* was a native of Egypt; the *Periplus* was written a little after the death of Pliny, between the years A.D. 80 and 89. Ptolemy flourished in the reign of Antoninus Pius, and died in A.D. 163. These authors furnish much interesting information regarding the Tamil people and their foreign commerce. Ptolemy especially gives a long list of the names of the maritime and inland towns. Most of the seaports mentioned by him can be readily identified from allusions to them in Tamil poems. The names of the tribes and their chief cities as given by him are wonderfully accurate.

More definite information regarding the date of the last Sangha is furnished by the allusions to historic personages

which occur in the poems composed during the reigns of the Chola king, Karikal, his son-in-law, the Chera king Athan, and the latter's son, Chenkuttuva Chera *alias* Imaya Varman. The last mentioned Chera king had a younger brother, Ilanko-Adikal, who became a monk of the Nigrantha sect. He was the author of a long poem, the *Chilappathikaram*, in which he relates that at a certain festival held by his brother, Imaya Varman, at the Chera capital, Gajabahu, the king of Lanka, attended with an unnamed king of Malava. This allusion to a king of Ceylon enables us to fix the date of Imaya Varman. In the long lists of the kings of Ceylon, preserved in Sinhalese chronicles, the name Gajabahu occurs only twice. Gajabahu I lived in the early part of the second century A.D., and Gajabahu II lived in the twelfth century. If the latter was the king referred to in the *Chilappathikaram*, Karikal Chola, the grandfather of Gajabahu's contemporary, Imaya Varman, should have lived in the eleventh or twelfth century A.D. But in many Tamil poems and inscriptions on copper-plates recording the grants of Chola kings who lived in the tenth and eleventh centuries, Karikal Chola I is described as one of the earliest and most remote ancestors of the Chola kings then reigning. It is evident, therefore, that the Gajabahu referred to in *Chilappathikaram* could not be Gajabahu II, but must have been Gajabahu I, who was king of Ceylon from about A.D. 113 to 125.

The *Chilappathikaram* also mentions the fact that Chenkuttuva Chera paid a friendly visit to the king of Magadha on the banks of the Ganges. It gives the name of the Magadha king as *Nurruvar Kannar* or the 'Hundred Karnas,' and this expression was long a puzzle to me, until it struck me that it was a translation of the Sanskrit title, 'Satakarnin.' Several kings of the Karna or Andhra dynasty

bore the epithet 'Satakarnin,' and coins and inscriptions of these kings have been found, in which the Pali form of the word 'Satakani' occurs. Sanskrit scholars have, however, misread the name as Sàtakarnin, instead of Satakarnin. The Tamil rendering of the name into 'Hundred Karnas' in a contemporary poem leaves no doubt of the fact that the name is correctly Satakárnin, made up of the words Sata (hundred) and Karna (ears), the epithet evidently meaning a king who employed one hundred spies, or had one hundred sources of information. . . . The year of accession of Chandragupta may be fixed at 312 B.C. The Mauryas ruled for 137 years, the Sungas 112 years, and after them the Kanvayanas forty-five years. After them there were thirty kings of the Andhra dynasty who reigned 456 years. The reign of the first Satakarnin ought to have extended from A.D. 77 to 133. (According to *Matsya Purana* five Andhra kings reigned before the first Satakarnin from 18 B.C. to A.D. 77). The reign of this Satakarnin covers the entire period of the reign of Gajabahu, king of Ceylon, which lasted twelve years from A.D. 113 to 125 according to the Mahawanso.

The Mahawanso was composed in the fifth century A.D. and the Dipavanso still earlier; and both these historical works mention Gajabahu I. It appears that during the reign of his father 'crooked nosed' Tissa, a Chola king, had invaded Ceylon, and carried away several thousands of captives; and that in retaliation Gajabahu invaded the Chola dominions soon after his accession to the throne in A.D. 113. The tradition is that the captives were carried away to work on the banks of the river Kaviri, which were then under construction. This is quite in accordance with later Tamil poems and inscriptions which speak of Karikal Chola as the king who commenced the construction of the

high banks along both sides of the bed of the Kaviri. The construction of the Kaviri banks which extended along its course to a distance of about 100 miles from its mouth, was an undertaking of such magnitude that it could not have been completed during the reign of Karikal. The Chola king, who invaded Ceylon in order to procure captives to work at the banks, might have been therefore Karikal or his immediate successor. This tradition is further evidence of the fact that Chenkuttuva Chera was contemporary with Gajabahu I, who lived in the early part of the second century A.D. Chenkuttuvan's grandfather, Karikal Chola, should have therefore reigned in the latter half of the first century A.D., or, in other words, about ***eighteen hundred years ago.***

Karikal Chola's daughter, Nar-Sonai, was married to the Chera king, Athan II, and became the mother of Chenkuttuva Chera and of Ilanko-Adigal, the author of the *Chilappathikaram*. Karikal was succeeded by Chetchenni Nalank-killi about A.D. 95. On the death of Nalank-killi, Killi-Valavan succeeded to the Chola throne. His right to succession was, however, disputed by other princes of the Chola family. No less than nine of the princes revolted and sought to divide the kingdom. But Killi-Valavan's cousin, Chenkuttuva Chera, promptly came to his assistance, defeated the confederate princes at Nerivayil, and established Killi-Valavan's authority.

Killi-Valavan first married Peelivalai, the daughter of the Naga king, Valaivanan, whose territory lay on the western coast of Ceylon. Subsequently he took for his consort Sithathakai, the daughter of a king (probably of Mysore) who claimed to be descended from Mahabali. By Sithathakai, he had a son named Udaya-Kumara, who grew up to be a handsome and promising youth but was murdered

one night accidentally. The king then appears to have sent for his other son born by the Naga princess. She sent her son in a merchant-vessel which sailed from Manipallavam to Kaviripattinam. On the way, on a dark and stormy night, the passengers landed on an island and there they left the prince in the dark, and sailed again when the weather cleared. Finding afterwards that the prince was missing, they searched throughout the island and the neighbouring coasts, but without success. The sad news of the loss of the prince reached Killi-Valavan just about the time that the festival of Indra was to commence. The king neglected to perform the festival and went in search of his son. A sea wave rushed over Kaviripattinam and destroyed the town. It was believed by the superstitious people of that age that Manimekhala, or the goddess of the ocean, sent the wave to punish the people for their having not performed the festival of Indra, the king of the gods. Killi-Valavan died shortly afterwards. He was succeeded by another Killi, who was known as Rajasuyam-Vetta-Peru-Nar-Killi. He performed a magnificent sacrifice and invited to the grand ceremony the neighbouring kings, Ugrap-peru-Valuthi and the Chera king, Ma-Ven-Ko or the Fair Prince.

Contemporary with Karikal Chola the Great was the Pandyan king, Ariyap-padai-kadantha-Nedunj-Cheliyan or 'the Nedunj-Cheliyan who had defeated an Aryan army.' His memory is, however, preserved to posterity by his romantic death which is related in the epic poem *Chilappathikaram*. On hearing of the sudden death of Nedunj-Cheliyan, the pandyan, Prince Verriver-Cheliyan, who was then Viceroy of Kotkai, hastened to Madura and ascended the throne. He appears to have died after a short reign and was succeeded by his son, Nedunj-Cheliyan II, who was then a boy of tender age. He is the hero of

Maduraik-kanchi and Nedu-nal-Vadai. After him come Ugra-peruvaluthi, whose name is well known to all the students of Tamil literature as that of the king in whose court *Kural*, the immortal work of Tiruvalluvar, was published.

Of the Chera kings of this period Athan I was the earliest sovereign, contemporary with Karikal. He was wounded on the back while fighting at the head of his army against Karikal. Unable to bear the disgrace, he put an end to his life by starvation. His successor was Athan II, surnamed Chelvak-kadunk-ko-vali-Athan. He gained the friendship of Karikal by marrying his daughter, Sonai. Athan II had two sons, the elder of whom was called Chenkuttuvan, and the younger Ilankko-Adikal or the 'royal monk'. The latter prince composed the poem *Chilappathi-karam*. Chenkuttuvan succeeded his father Athan II about A.D. 90. Chenkkuttuvan was succeeded by Chey who was surnamed Yanaik-kan or 'the elephant eye'. Yanaik-kat-Chey was succeeded by Perunj-Cheral-Irumporai.

The head of the Government was a hereditary monarch. His power was restricted by five councils, who were known as the 'Five Great Assemblies.' They consisted of the representatives of the people, priests, physicians, astrologers, or augurs and ministers. The council of representatives safeguarded the rights and privileges of the people; the priests directed all religious ceremonies; the physicians attended to all matters affecting the health of the king and his subjects; the astrologers fixed auspicious times for public ceremonies and predicted important events; the ministers attended to the collection and expenditure of the revenue and the administration of justice. Separate places were assigned in the capital town for each of these assemblies, for their meetings and transaction of business. On important occasions they attended the king's levee in

the throne hall or joined the royal procession. It will be interesting to know more of the constitution of the 'Five Great Assemblies'; but no further information is available in the ancient poems which are now extant. The power of Government was entirely vested in the kings and in the 'Five Great Assemblies'. It is most remarkable that this system of Government was followed in the three kingdoms of the Pandya, Chola and Chera, although they were independent of each other.

The person of the king was surrounded with much pomp and dignity. He was served by a numerous company of attendants. They are frequently mentioned as 'the eight groups of attendants' which were as follow:—Perfumers, garland-makers, betel-bearers, arecanut-servers, armourers, dressing valets, torch or light bearers and body-guards. Big drums resounded at his palace gate, early at dawn and at sunset. Time-criers were employed in the palace to cry out the end of each *nalikai* which was reckoned by the hour-glasses. On all public occasions, the queen took her seat on the throne along with the king; but her apartments in the palace were not accessible to males. Dwarfs and hunchbacks and eunuchs besides a number of noble maidens waited upon her.

The principal officers of State were the high priest, the chief astrologer, the ministers and the commanders of the army. There were special officers appointed to perform the duties of judges and magistrates; but the king was the supreme and final arbiter in all civil and criminal cases. The presiding judge in each court wore a peculiar headgear by which he was distinguished from other officers of the court. Justice was administered free of charge to the suitors but the punishments were very severe; and hence crimes were rare. The orders of the king which concerned the people were proclaimed throughout his capital city with beat of drums, by officers riding on elephants. The king was the head of society as well as of the Government.

5988a

The B. N. Press, Mount Road, Madras.

*Pubications of*

# T. CHELVAKESAVAROYA MUDALIAR, M. A.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| மாதவ கோவிந்த ரானடே | ... | 1 | 0 |
| ராபின்ஸன் க்ரூஸோ | ... | 0 | [illegible] |
| அபிநவ கதைகள் | ... | 0 | 10 |
| அக்பர் | ... | 0 | 12 |
| குசேலர் | ... | 0 | 4 |
| கலிங்கத்துப்பரணி கதாசங்கிரகம் | ... | 0 | 8 |
| வியாஸ மஞ்சரி | ... | 0 | 10 |
| தமிழ் வியாசங்கள் | ... | 1 | 0 |
| தமிழ் - ஒரு வியாசம் | ... | 0 | 12 |
| கம்ப நாடர் | ... | 0 | 12 |
| திருவள்ளுவர் | ... | 0 | 10 |
| பஞ்சலட்சணம் | ... | 1 | 0 |
| ஆசாரக்கோவை | ... | 0 | 8 |
| பழமொழி நானூறு | ... | 2 | 0 |
| முதுமொழிக்காஞ்சி | ... | 0 | 5 |
| அறநெறிச்சாரம் | ... | 0 | 6 |

*Can be had of—*

**T. Senavaroyan,**

No. 15, Tholasinga Mudali Street,

Perambur, Madras.